# கமெண்ட் கந்தர்...

பாராளுமன்ற அரசியல்வாதிகளை மாற்றியதுபோல இந்த பார்லிமென்ட் மன்மதன்மார்களை மாற்ற வழி ஏதும் இல்லையோ...?




Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 143 குரோதி வருடம், மார்கழி மாதம் 24ஆம் திகதி புதன்கிழமை (08.01.2025) ஹிஜ்ரி 1446, ரஜப் - 07, 0115 886187 - விலை ரூ.40 பக்கங்கள் 12




## உஷ்



கதிரவன் என்ற பெயரில் இயங்கிவரும் இலத்திரனியல் ஊடகமொன்று ஆட்சியாளர்களை கடுமையாக விமர்சித்து வருகிறது. அதனால் அதன் மீது கடும் கடுப்பில் இருக்கிறது அரச மேலிடம்.

என்னதான் அடித்தாலும் அதற்குப் பயந்துபோய் மேற்படி ஊடகத்தின் உரிமையாளரது சிறைவாசம் அனுபவிக்கும் தம்பியை விடுதலை செய்யமாட்டேன். அவரிடம் போய் சொல்லுங்கள் என்று அரச மேலிட பிரமுகர் ஒருவர் மேற்படி நிறுவனத்துக்கு கடும் செய்தியை அனுப்பியுள்ளாராம்.

## உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம்;

# புதிய கோணத்தில் விசாரணைகள்!

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால சபையில் அறிவிப்பு



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் செனல் - 4 நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட தகவல்கள் மற்றும் அதற்கப்பால் மேலதிக விசாரணைகளில் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தொடர்ந்தும் விசாரணை முன்னெடுக்கப்பட்டு வருவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

எனவே, இந்த விசாரணைகளில் உறுதிப்படுத்தப்படும் விடயங்களின் அடிப்படையில் அடுத்தகட்ட சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால நேற்று (07) தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக முன்னெடுக்கப்படும் விசாரணைகள் தொடர்பில் ஆளுங்கட்சி உறுப்பினர் ரவீந்திர பண்டாரவினால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளித்து உரையாற்றும்போதே அமைச்சர் இதனைக் கூறினார். » 02 பக்கம்

## அரிசி விற்பனையால் இலாபமடைந்த தரப்பு

### 654 கோடி ரூபா என்கிறார் சானக எம்.பி.



அரிசியின் கட்டுப்பாட்டு விலைக்கு மாறாக மேலதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்த ஒரு தரப்பினர் ஒரு மாதத்தில் 654 கோடி ரூபா இலாபமடைந்துள்ளதாக ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன எம்.பியான டி.வி.சானக தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று (07) இடம்பெற்ற வருட ஆரம்ப நிதி நிலைவரம்... » 02 பக்கம்

### ‘தமிழன்’ 14ஆம் திகதி இதழில் விசேட பஞ்சாங்கம்

## பாராளுமன்றத்தில் பாலியல் துன்புறுத்தல்

### முஜிபுர் எம்.பி. அதிர்ச்சித் தகவல்




“பாராளுமன்றத்தின் தகவல் கட்டமைப்பு மற்றும் முகாமைத்துவ திணைக்களத்தில் பணிபுரியும் பெண் ஊழியர்களுக்கு அடிக்கடி பல்வேறு பாலியல் துன்புறுத்தல் இடம்பெறுவதாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் உடனடியாக விசாரணை மேற்கொள்ள வேண்டும்”- என ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பியான முஜிபுர் ரஹ்மான் வலியுறுத்தினார். » 02 பக்கம்

## அர்ச்சுனா எம்.பிக்காக விசேட குழு நியமனம்

எதிர்க்கட்சி பிரதம கொறடாவால் முன்வைக்கப்பட்ட விடயத்துக்கமைய அர்ச்சுனா எம்.பி. தொடர்பில் குழுவொன்றை அமைப்பதற்குத் தீர்மானித்துள்ளதாக சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தெரிவித்தார். » 02 பக்கம்

## ஐக்கிய மக்கள் சக்தி ஐ.தே.கவுடன் கைகோர்ப்பு

### பேச்சுவார்த்தை விரைவில்





ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து செயற்படுவதற்கான பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது. » 02 பக்கம்




## அமைச்சரவை முடிவுகள்

» 04பக்கம்



## ரணிலின் கொள்கைகளை உதாசீனம் செய்ய வேண்டாம்

### பாதீடு தொடர்பில் அரசுக்கு வஜிர ஆலோசனை

“நடப்பாண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தை முன்வைக்கும் செயற்பாடுகள் காலதாமதமாகியுள்ளதால் நிதி நெருக்கடி நிலைமை உருவாகியுள்ளது. இதனால் ஏற்படும் நட்டத்தை ஈடுசெய்வதென்பது இலகுவான விடயமல்ல. எனவே, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட தேசியக் கொள்கையின் பிரகாரமே 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தை இந்த அரசாங்கம் தயாரிக்க வேண்டும். » 02 பக்கம்





» 07 பக்கம்


## வெளியானது உள்ளூராட்சி தேர்தலுக்கான வர்த்தமானி



உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக கடந்த 2023ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்களை இரத்துச் செய்து புதிய வேட்புமனுக்களைக் கோரும் வகையில் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் சட்டத்தை திருத்தியமைப்பதற்கான சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலுக்காகக் கோரப்பட்ட வேட்புமனுக்களை இரத்துச் செய்வதற்கான... » 02 பக்கம்

## போலி வைத்தியர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

### தீவிர விசாரணைகள் ஆரம்பம்



நாட்டில் போலி வைத்தியர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அவ்வாறான போலி வைத்தியர்களைத் தேடிக் கண்டுபிடிப்பது தொடர்பில் சுகாதார வைத்திய அதிகாரிகளினூடாக சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (07) இடம்பெற்ற... » 02 பக்கம்







# சாவகச்சேரியில் இளங்குமரன் எம்.பியால் வழிமறிக்கப்பட்ட சுண்ணக்கல் வாகன விவகாரம்

## உரிமையாளருக்கு வாகனத்தை எடுத்துச்செல்ல அனுமதி வழங்கியது நீதிமன்றம்

பு.கஜிந்தன்

சாவகச்சேரியில் பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரனால் வழிமறிக்கப்பட்ட சுண்ணக்கல் ஏற்றிய கனரக வாகனத்தை எடுத்துச் செல்வதற்கு உரிமையாளருக்கு சாவகச்சேரி நீதவான் நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

குறித்த சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

கடந்த வாரம் சாவகச்சேரிப் பகுதியில் இரவுவேளை கனரக வாகனத்தில் சுண்ணக்கல் ஏற்றிச் செல்லப்படுவதாகத் தெரிவித்து பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் அதனை வழிமறித்திருந்தார்.

அச்சமயம் வாகனச் சாரதிக்கும் எம்.பிக்குமிடையில் குறித்த பொருளை எடுத்துச்செல்வதற்கான வழி அனுமதி தொடர்பான வாய்த்தர்க்கம் ஏற்பட்ட நிலையில், பொலிஸாரின் தலையீடு காரணமாக அந்த வாகனம் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

இது தொடர்பில் அப்போது கருத்துத் தெரிவித்த இளங்குமரன் எம்.பி, உரிய அனுமதிகள் பெறாது இவ்வாகனம் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் மக்கள் வழங்கிய தகவலினடிப்படையில் குறித்த வாகனத்தைத் தான் மறித்ததாகவும் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், குறித்த வியாபார நடவடிக்கையில் ஈடுபடும் நிறுவன உரிமையாளர் ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போது, சகல அனுமதியும் பெறப்பட்டு தான் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் வேண்டுமென்றே தமக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் இளங்குமரன் எம்.பி. நடந்துகொண்டதாகவும் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், குறித்த வழக்கானது திங்கட்கிழமை(06) சாவகச்சேரி நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தபோது வாகனத்தை எடுத்துச் செல்வதற்கு மன்று அனுமதி



வழங்கியிருந்தது.


இதனையடுத்து நகர்த்தல் பத்திரம் மூலம் நேற்று செவ்வாய்க்கிழமை(07) சாவகச்சேரி நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது நிறுவனத்தின் சார்பில் குமாரவடிவேல் குருபரன் ஆஜராகியிருந்தார்.

இது தொடர்பில் சட்டத்தரணி குருபரனைத் தொடர்புகொண்டு கேட்டபோது, சுண்ணக்கல்லையும் வாகனத்தையும் நிபந்தனையின் அடிப்படையில் உரிமையாளரிடம் ஒப்படைக்குமாறு நீதிமன்று உத்தரவு பிறப்பித்தது.

குறித்த வழக்கில் ஆஜரான சட்டத்தரணி தெரிவிக்கையில்,

"எனது கட்சிக்காரர் கல் அகழ்வுத் தொழிலை செய்பவர் அல்ல. அனுமதி பெற்றவர்களிடம் பணம் கொடுத்து கற்களை வாகனங்களில் ஏற்றி விற்பனை செய்கிறார்.

2009 ஆம் ஆண்டு 28 (2) சட்டம் இன்னும் திருத்தப்படவில்லை. 1993 தொடக்கம் 2023 வரை ஒழுங்கு விதிகள் யார் அனுமதி பெறவேண்டும் எனத் தெளிவாக கூறுகிறது. அதனை விடுத்து, அனுமதிகள் எனக் கூறப்படும் விடயங்கள் எந்தச் சட்டத்தில் இருக்கின்றன? யாரிடம் பெற வேண்டுமெனக் கூறினால் அதனையும் பெறத் தயாராக இருக்கிறோமென




மன்றுக்குத் தெரிவித்தேன். அதனை விடுத்து, இலங்கை அரசியலமைப்புச் சட்டங்களில் திருத்தங்களைக் கொண்டு வராமல் அரச அதிகாரிகளினால் எழுதப்படும் கடிதங்களை சட்டமாகக் கொள்ள முடியாது''- என்றார்.

இளங்குமரன் எம்.பி. பொலிஸாரின் அதிகாரங்களை கையில் எடுப்பது தொடர்பில் மன்றுக்கு சுட்டிக்காட்டியுள்ள நிலையில், அதற்கு தனியான முறைப்பாடு ஒன்று இருப்பதால் அது பற்றிப் பின்னர் முடிவெடுப்போம்.

பொலிஸார் குழப்பகரமான சூழ்நிலை இருந்தபடியால் வாகனத்தை பொலிஸ் நிலையம் கொண்டு சென்றுள்ளனர். குறித்த வழக்கில் சந்தேக நபர் பெயர் குறிப்பிடப்படாமை தொடர்பில் மன்றுக்குத் தெரியப்படுத்தினேன். அது மட்டுமல்லாது, இரண்டு நீதிமன்றங்களில் சுண்ணக்கல் எடுத்துச் செல்வது தொடர்பில் நீதிமன்றங்கள் வழங்கிய கட்டளைகளை முழுமையாக மன்றில் சமர்ப்பித்தோம்.

சமர்ப்பணங்களை ஆராய்ந்த மன்று நிபந்தனையின் அடிப்படையில் வாகனத்தையும் கல்லையும் விடுவித்ததுடன் வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது'' - என்றார்.

## கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்தும் இலக்கியக்களம்

ஓய்வுநிலை ஆசிரியர் திருமதி செல்வராணி யோகராஜா தலைமையில் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இலக்கியக்களம் நிகழ்ச்சியில் "செங்கை ஆழியானின் 'கிடுகு வேலி' எனும் நாவலை முன்வைத்து!" எனும் தலைப்பில் எழுத்தாளர் தாட்சாயிணி சர்மா உரை நிகழ்த்தவுள்ளார்.

# ஆட்கடத்தலுடன் தொடர்புடையவர்களென சந்தேகித்து படகில் வந்து கைதான மியன்மார் அகதிகள் விடுதலை

## கேப்பாபிலவு இடைத்தங்கல் முகாமுக்கு அனுப்பிவைப்பு



மியன்மாரிலிருந்து வந்த அகதிகள் படகில் ஆட்கடத்தலுடன் தொடர்புடையவர்கள் எனக் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட 12 மியன்மார் அகதிகளும் நேற்று (07) விடுதலையாகி கேப்பாபிலவு இடைத்தங்கல் முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக இலங்கை கடலுக்குள் நுழைந்ததாகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு மியன்மார் அகதிகள் 12 பேர் சட்டவிரோத படகுப் பயணத்துக்கு செயற்பட்டதாகக் கைதுசெய்யப்பட்டு, திருகோணமலை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தனர். இந்நிலையில், குறித்த 12 பேரும் நேற்று (07) விடுதலைசெய்யப்பட்டுள்ளனர்.

கேப்பாபிலவு விமானப் படைத்தளத்துக்கு கடந்த டிசம்பர் மாதம் 23ஆம் திகதி மாலை 05 மணியளவில் மியன்மார் அகதிகள் 103 பேர் அழைத்துச் செல்லப்பட்டு தங்கவைக்கப்பட்டுள்ளனர். அதனைத்தொடர்ந்து நேற்று தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட ஏனைய 12 பேரும் விடுதலையாகி குறித்த முகாமில் தங்கவைக்க அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் மேற்கு கடற்பரப்பில் கடந்த 19ஆம் திகதி 115 பயணிகளுடன் மியன்மார் அகதிகள் படகு கரையொதுங்கியிருந்தது. பின்னர் கப்பல் கரைக்கு வரமுடியாத நிலையில் கடற்படையினரின் உதவியுடன் திருகோணமலை கடற்படைத் தளத்துக்கு கொண்டுசெல்லப்பட்டு மருத்துவ பரிசோதனைகளின் பின்னர் அவர்கள் திருகோணமலை ஜமாலிய முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தற்காலிகமாகத் தங்க வைக்கப்பட்டிருந்தனர். பின்னர் தஞ்சம் கோரிய 115 மியன்மார் அகதிகளையும் மிரிஹானை இடைத்தங்கல் முகாமில் தங்கவைப்பதற்கான இடவசதி இல்லாத காரணத்தால் இவர்களில் 103 பேர் இரு பஸ்களில் மீண்டும் முல்லைத்தீவு கேப்பாபிலவு விமானப்படைத் தளமொன்றில் தற்காலிகமாகத் தங்கவைக்க அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இதேவேளை, குறித்த படகில் 45 சிறுவர்கள், 24 பெண்கள், 46 ஆண்கள் உள்ளடங்கலாக 115 பேர் பயணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வீடொன்றை தீயிட்டுக் கொளுத்திய சந்தேகநபர் கைது

(பு.கஜிந்தன்)

வீடொன்றை உடைத்து, தீயிட்டுக் கொளுத்திவிட்டு தலைமறைவாகியிருந்த நிலையில், கிளிநொச்சி பொலிஸாரால் நீண்டகாலமாகத் தேடப்பட்டு வந்த சந்தேகநபரொருவர் நேற்று (07) யாழ்ப்பாணத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில்,

குறித்த சந்தேகநபர் 2022.08.30 அன்று கிளிநொச்சி செல்வநகர் பகுதியில் வீடொன்றை அடித்து உடைத்து, தீயிட்டுக் கொளுத்திவிட்டு தலைமறைவாகியிருந்துள்ளார். இந்நிலையில், குறித்த சந்தேகநபரைக் கைதுசெய்வதற்கு கிளிநொச்சி பொலிஸார் வலைவீசி வந்தனர்.

குறித்த நபர் யாழ்ப்பாணம் - 5ஆம் குறுக்குத்தெரு பகுதியில் தலைமறைவாகியிருந்த நிலையில், யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

# கல்கிசை துப்பாக்கிச்சூட்டில் இருவர் பலி

கல்கிசை, வட்டாரப்பல வீதியில் நேற்று (07) அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இருவர் உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கல்கிசை, வட்டாரப்பல வீதி பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாத இருவர் வீடொன்றில் இருந்த இருவர் மீது துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றிருந்தனர்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டில் 36 மற்றும் 20 வயதுடைய இருவர் உயிரிழந்திருந்தனர்.

துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த இருவரும் பிரபல போதைப்பொருள் கடத்தல்காரரான 'படோவிட்ட அசங்க' என்பவருடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணிவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிரபல போதைப்பொருள் கடத்தல்காரரான 'கொஸ்மல்லி' என்பவரின் தலைமையில் இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாமென பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அர்ச்சுனா...

பாராளுமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் கூடியது. இதன்போது சுயேச்சைக்குழு 17 இன் யாழ். மாவட்ட எம்.பியான இராமநாதன் அர்ச்சுனா முன்வைத்த ஒழுங்குப்பிரச்சினை தொடர்பில் எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான கயந்த கருணாதிலக்க முன்வைத்த கருத்து தொடர்பில் பதிலளிக்கையிலேயே சபாநாயகர் இவ்வாறு தெரிவித்தார்.

சுயேச்சைக்குழு 17 இன் யாழ். மாவட்ட எம்.பியான இராமநாதன் அர்ச்சுனா ஒழுங்குப்பிரச்சினையை முன்வைத்து கூறுகையில்,

''எனக்கு சபையில் உரையாற்ற நேரம் ஒதுக்கப்படுவதில்லை. டிசம்பர் 18ஆம் திகதி எனது சிறப்புரிமை மீறல் சம்பந்தமாக சபாநாயகரிடம் கூறியுள்ளேன். ஆனால் இன்று வரையில் அதற்கு பதிலளிக்கப்படவில்லை. ஜனவரி 7ஆம் திகதியான இன்று வரையில் உரையாற்ற எனக்கு நேரம் ஒதுக்கப்படவில்லை. நான் பாராளுமன்றத்துக்கு வந்து பயனில்லை. யாழ்ப்பாணத்தில் இருந்து நான் வருகின்றேன். ஆனால் எனக்கு இதில் எந்தப் பயனும் இல்லை. இங்கு வந்து மேலே பார்த்துக்கொண்டிருந்துவிட்டு வீட்டுக்கு போக முடியாது. எனவே எனக்கு பதில் வழங்குங்கள்'' என்றார்.

இதற்கு சபாநாயகர் பதிலளிக்கையில், ''இது தொடர்பான பதிலை வழங்குவதற்கான யோசனையை எதிர்க்கட்சித் தலைவருக்கு அனுப்பி வைத்துள்ளோம்'' என்றார்.

இதன்போது எழுந்த எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான கயந்த கருணாதிலக்க கூறுகையில், ''எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட குழுவினர் சபாநாயகரை சந்தித்து பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடும்போது இந்த விடயம் தொடர்பிலும் கலந்துரையாடினோம். இந்தப் பிரச்சினை தொடர்பில் நாங்கள் உங்களின் ஆலோசனைகளை எதிர்பார்க்கின்றோம். எழுத்துமூலமும் உங்களிடம் இது தொடர்பில் குறிப்பிட்டுள்ளோம்'' என்றார்.

இவ்வேளையில் மீண்டும் ஒழுங்குப் பிரச்சினையை முன்வைத்து எழுந்த அர்ச்சுனா எம்.பி.,

''பாராளுமன்றத்துக்குள் உரையாற்றுவதற்கு எதிர்க்கட்சியினால் எனக்கு நேரம் ஒதுக்கப்படவில்லை என்றால் எப்படி நாங்கள் ஒன்றாக நாட்டைக்கொண்டு செல்லப் போகின்றோம் என்று எதிர்பார்க்க முடியும்'' எனக் கேள்வி எழுப்பினார்

இதற்கு சபாநாயகர் பதிலளிக்கையில்,

''எதிர்க்கட்சி பிரதம கொறடாவால் முன்வைக்கப்பட்ட விடயத்துக்கமைய நாங்கள் அர்ச்சுனா எம்.பி. தொடர்பில் குழுவொன்றை அமைப்பதற்கு தீர்மானித்துள்ளோம். அந்தக் குழு அமைக்கப்பட்டு அதன் அறிக்கை வந்த பின்னர் நாங்கள் அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்போம்'' என்றார்.

## போலி வைத்தியர்களின்...

வாய்மூல விடைக்கான வினா நேரத்தின்போது எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

நாட்டில் பல்வேறு வைத்திய முறைகள் செயற்பாட்டில் இருக்கின்றன. அந்த முறைகளுடன் தொடர்புடைய வைத்தியர்கள் வைத்திய சபையில் பதிவு செய்யவேண்டும். அவ்வாறான பதிவுகளில் ஒருசில பதிவுகளில் பிரச்சினை இருக்கிறது. பதிவு செய்யப்பட்ட வைத்திய முறைகளுக்கு அப்பாலான வைத்திய முறைகளும் பயன்படுத்தப்படுகின்றன.

போலி வைத்தியர்களும் நாட்டில் இருக்கிறார்கள். அவ்வாறான வைத்தியர்களை தேடி சுகாதார வைத்திய அதிகாரிகளினூடாக சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம். எனவே, அனுமதி பெறாத போலி வைத்தியர்கள் இருப்பார்களாக இருந்தால் அவ்வாறானவர்கள் தொடர்பில் அறிவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அவர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கவும் தயாராக இருக்கிறோம்.

அதேபோன்று, மருந்து விநியோக செயற்பாடுகளில் பல்வேறு நிறுவனங்கள் தொடர்புபட்டுள்ளன. எனவே, மருந்து பிரச்சினைக்கு இந்த நிறுவனங்களுக்கு இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதே பிரதான தீர்வாக இருக்கும். அதனையும் தற்போது நாங்கள் செய்து வருகிறோம்.

தேசிய ஔடதங்கள் ஒழுங்குப்படுத்தல் அதிகார சபையில் சில சிக்கல்களும் இருக்கின்றன. இதனால் கோப்புகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளன. மார்ச் மாதமாகும்போது மருந்து விநியோகத்திலிருக்கும் குறைபாடுகளை நிவர்த்தி செய்துக்கொள்ளக்கூடியதாக இருக்கும் என்றார்.

## உயிர்த்த...

அமைச்சர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மற்றும் பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கமைய 747 சந்தேகநபர்கள் இதுவரையில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களில் நூறு வரையிலானவர்கள் தொடர்பில் மேல்நீதிமன்றத்தில் 41 வழக்குகள் விசாரணை செய்யப்பட்டு வருவதுடன் மேல்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 14 வழக்குகள் தொடர்பில் மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளன. அந்த வழக்குகள் தொடர்பான விசாரணைகள் இடம்பெற்றுள்ளன.

அதேபோன்று, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் செனல் - 4 நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட தகவல்கள் மற்றும் அதற்கு அப்பால் மேலதிக விசாரணைகளில் உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களை அடிப்படையாகக்கொண்டு விசாரணை தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த விசாரணைகளில் உறுதிப்படுத்தப்படும் விடயங்களின் அடிப்படையில் அடுத்தக்கட்ட சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம்.

நாங்கள் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் இதுதொடர்பான விசாரணைகள் புதிய கட்டத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்த புதிய விசாரணைகள் தொடர்பில் கடந்த நவம்பர் மாதம் 11ஆம் திகதி கோட்டை நீதிமன்றத்துக்கு தகவல்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கமைய 12 சிவில் சாட்சியாளர்கள், 07 இராணுவ உறுப்பினர்கள், 26 பொலிஸ் அதிகாரிகள், 03 சிறைச்சாலை அதிகாரிகள் உள்ளிட்ட 48 பேரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் முறையாக இடம்பெற்று வருகின்றன என்றார்.

## ரணிலின்...

அவ்வாறு இல்லாவிட்டால் மக்கள் பெரும் நெருக்கடிக்குள்ளாவார்கள்" என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் நேற்று (07) ஊடகங்களுக்கு விளக்கமளிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வருடம் நவம்பர் மாதத்தில் வரவு - செலவுத்திட்டத்தை சமர்ப்பித்திருக்க வேண்டும். இன்றுடன் மூன்று மாதங்கள் கடந்துவிட்டன. இந்த காலதாமதத்துடன் நிதியியல் செயற்பாடுகளினால் ஏற்படும் நட்டத்தை தவிர்த்துக்கொள்வது என்பது இலகுவான விடயமல்ல. அரசாங்கத்தின் விருப்பத்துக்கமைய வரவு - செலவுத் திட்டத்தை முன்வைக்க முடியாது.

நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்பதற்காக கடந்த அரசாங்கத்தில் முக்கியமான பல சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அந்த சட்டதிட்டங்களுக்கமையவே இந்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டத்தை முன்வைக்க முடியும். அதற்கப்பால், வரவு - செலவுத் திட்டத்தை முன்வைக்க முடியாது. அந்த சட்டங்களுக்கு அப்பால் வரவு - செலவுத்திட்டத்தை முன்வைத்தால் மீண்டும் நாட்டின் பொருளாதாரம் பின்னடைவை சந்திக்கும்.

வரவு - செலவுத்திட்டத்தின் காலதாமதம் பெரும் பின்னடைவை ஏற்படுத்தும். நவம்பர் மாதத்தில் வரவு - செலவுத் திட்டத்தை முன்வைத்து டிசம்பர் அல்லது ஜனவரி மாதத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் நிதியுதவியைப் பெற்றுக்கொண்டு நாட்டை முன்னோக்கிக் கொண்டுச் செல்லவே முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தேசித்திருந்தார். தற்போதும் நிதிக்கான நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, முன்னாள் ஜனாதிபதியினால் உருவாக்கப்பட்டுள்ள தேசிய கொள்கைத் திட்டத்துக்கமையவே வரவு - செலவுத் திட்டத்தை முன்வைக்க முடியும் என்பதை அரசாங்கம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். இதற்கப்பால், வேறு வழி இல்லை. அவ்வாறு இல்லாமல் வேறு வழியில் வரவு - செலவுத் திட்டத்தை முன்வைத்தால் மக்கள் பெரும் நெருக்கடியை சந்திப்பார்கள் என்பது உறுதியாகும் என்றார்.

## ஐக்கிய...

இந்நிலையில் இவ்விரு கட்சிகளும் இணைந்து செயற்பட வேண்டும் என்றே மக்களும் எதிர்பார்ப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் (06) ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள். எனவே, அதற்கான கலந்துரையாடல்களை முன்னெடுக்க எதிர்பார்த்திருக்கிறோம். பொருத்தமான வகையில் அந்த பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கவும் திட்டமிட்டுள்ளோம்.

ஆனால், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் அதுதொடர்பில் இதுவரையில் கலந்துரையாடவில்லை. அதற்கான கலந்துரையாடல்களை ஆரம்பிக்கவும் இல்லை என்றார்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியிலுள்ள அநேகமான பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயலாற்றுவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் அறிய முடிகிறது.

## பாராளுமன்றத்தில்...

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை ஒழுங்குப்பிரச்சினை ஒன்றை எழுப்பியே இதனை வலியுறுத்திய அவர் மேலும் கூறுகையில்,

இந்த பாராளுமன்றத்தில் பணிபுரியும் பெண் ஊழியர்களுக்கு எதிராக பாலியல் துன்புறுத்தல்கள் தொடர்பாக கடந்த சில வாரங்களாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. இதுதொடர்பாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் சில நடவடிக்கைகளை எடுத்துள்ளார் என நான் நினைக்கிறேன். இதனுடன் சம்பந்தப்பட்ட சிலர் பணி இடை நிறுத்தப்பட்டிருக்கின்றனர். மேலும் சிலர் ஓய்வுபெற்று சென்று விட்டனர்.

அதேபோன்று விசேடமாக தகவல் கட்டமைப்பு மற்றும் முகாமைத்துவத் திணைக்களத்தில் பணிபுரியும் பெண் ஊழியர்களுக்கு அடிக்கடி பல்வேறு பாலியல் துன்புறுத்தல்களை மேற்கொள்ள அங்கிருக்கும் அதிகாரிகள் முயற்சிப்பதாக முறைப்பாடு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

எனவே இதுதொடர்பாக உடனடியாக விசாரணை மேற்கொள்ளுமாறு சபாநாயகரை கேட்டுக்கொள்கிறேன். பாராளுமன்றத்தில் யாருக்காவது பாலியல் துன்புறுத்தல் இடம்பெறுமாக இருந்தால் எங்களுக்கும் அது பாதிப்பாக அமையும் என்றார்.

எனினும், இதனை நிராகரித்த சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன பதிலளிக்கையில்,

நீங்கள் தெரிவிக்கும் விடயம் தொடர்பில் குறித்த பிரிவில் இருந்து எங்களுக்கு எந்தவொரு முறைப்பாடும் இதுவரையில் கிடைக்கவில்லை என்றார்.

## வெளியானது...

உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டமூலம் பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரின் உத்தரவுக்கமைய வெளியிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அந்த சட்டமூலத்துக்கமைய கடந்த 2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09ஆம் திகதி இடம்பெறவிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக முன்வைக்கப்பட்ட வேட்புமனுக்களை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவினால் பெயர் குறிப்பிடப்பட்ட வேட்பாளர் ஒருவர் சார்பில் செலுத்தப்பட்ட கட்டுப்பணத்தை மீளச் செலுத்தவும் இந்த திருத்த சட்டமூலத்தினூடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சட்டமூலத்தை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்து அனுமதிப்பெற்றதன் பின்னர் அந்த சட்டத்தை அமுல்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

அதன் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழுவினால் உள்ளூராட்சி மன்றங்கள் தேர்தலுக்காக வேட்புமனுக்களை தாக்கல் செய்வதற்கான திகதி அறிவிக்கப்பட வேண்டும் என்பதுடன் அது சட்ட அமுலாக்கம் ஆரம்பமாகும் தினத்திலிருந்து மூன்று மாதங்களுக்கு முன்னரான தினமாக இருக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அரிசி விற்பனையால்...

தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் உரையாற்றுகையில்,

சந்தையில் நிலவும் அரிசித் தட்டுப்பாட்டுக்கு தீர்வு காண்பதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக அரசாங்கம் குறிப்பிடுகிறது. ஆனால், சந்தையில் அரிசிக்கான தட்டுப்பாடு மேலும் தீவிரமடைந்துள்ளது. சந்தையில் சிவப்பு அரிசித் தட்டுப்பாடு தீவிரமடைந்துள்ளது.அரிசித் தட்டுப்பாடு மற்றும் விலையேற்றத்துக்கு கடந்த அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும் என இந்த அரசாங்கம் பொறுப்பற்ற வகையில் குற்றம்சாட்டுகின்றது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட மாதாந்த விலை விபரம் தொடர்பான அறிக்கையை கொண்டு அரசாங்கத்துக்கு பதிலளிக்க வேண்டும். இதற்கமைய கடந்த ஒகஸ்ட் மாதம் சிவப்பு அரிசி ஒரு கிலோ 210 ரூபாவுக்கும் செப்டெம்பர் மாதம் 210 ரூபாவுக்கும் சந்தையில் விற்பனை செய்யப்பட்டது. கடந்த மாதம் 250 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் இந்த மாத விலைப் படிவத்தில் சிவப்பு அரிசியின் விற்பனை விலை குறிப்பிடப்படவில்லை. ஏனெனில் சந்தையில் சிவப்பு அரிசி இல்லை. இதுவே உண்மை. அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில் 240-250 ரூபா என்ற அடிப்படையில் தான் சந்தையில் அரிசி கட்டுப்பாடற்ற விலையில் விற்பனை செய்யப்படுகிறது.

கட்டுப்பாட்டு விலைக்கு மேலதிகமான விலைக்கு அரிசி விற்பனை செய்து ஒரு தரப்பினர் கடந்த மாதம் மாத்திரம் 467 கோடி ரூபா இலாபமடைந்துள்ளனர். அதேபோல் 85 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இந்த அரிசியும் கட்டுப்பாட்டு விலைக்கு மாறாக மேலதிகமான விலைக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதனூடாகவும் ஒரு தரப்பினர் 187 கோடி ரூபா இலாபமடைந்துள்ளனர். ஆகவே அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்து 654 கோடி ரூபா இலாபமடைந்துள்ளனர் என்றார்.

## தினசரி பலாபலன்கள்

### குரோதி வருடம் மார்கழி மாதம் 24ஆம் நாள் புதன்கிழமை

**மேஷம்** குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும். உடல் நோய்கள் குணமடையும். மன மகிழ்ச்சி உண்டு.

**ரிஷபம்** ஆணவத்தை அடக்கினால் வெற்றி நிச்சயம். பயணங்களைக் குறைத்துக் கொண்டால் செலவுகள் கட்டுப்படும்.

**மிதுனம்** முக்கிய நண்பர்களைச் சந்தித்து கலந்துரையாடுவீர்கள். வெளியிடப் பயணத்தால் நன்மைகள் உண்டு.

**கடகம்** உறவினர்கள் உதவிக் கரம் நீட்டுவார்கள். புதிய முயற்சிகள் வெற்றியளிக்கும். தொழில் முன்னேற்றம்.

**சிம்மம்** தந்தையின் உடல் நிலையில் கவனம் செலுத்துங்கள். சொத்துகளை உரிய முறையில் பேணுங்கள்.

**கன்னி** தொழில் இடத்தில் எதிலும் அவசர முடிவுகளை எடுக்காதீர்கள். உடல், மனம் இரண்டும் சோம்பிக் காணப்படும்.

**துலாம்** வெளியிடத்தில் கௌரவமாக நடத்தப்படுவீர்கள். நினைத்த காரியங்களை எளிதில் முடித்து வெற்றி காண்பீர்கள்.

**விருச்சிகம்** நீங்கள் எதிர்பார்த்த பணத்தொகை அல்லது கடன் தொகை கிடைக்கும். எதிரிகளால் நன்மை ஏற்படும் நாள்.

**தனுசு** மனதை அங்குமிங்குமாக அலைய விடாதீர்கள். அதிர்ஷ்டத்தை நம்பி பணத்தை வீணடிக்காதீர்கள்.

**மகரம்** யாரையும் நம்பி இரகசியங்களை வெளிப்படுத்தாதீர்கள். வீடு வாகனங்களால் தொல்லைகள் உண்டு.

**கும்பம்** நீங்கள் நினைத்ததை தைரியத்துடன் சாதீப்பீர்கள். தேவைக்கேற்ப பணம் நிறைவினைத் தரும்.

**மீனம்** வீட்டுக்கான முக்கிய செலவுகளை இன்று செய்வீர்கள். காரியங்கள் சற்றுத் தாமதமாகி பின் நிறைவேறும்.

**திதி:**நவமி பி.ப.2.26 வரை பின் தசமி
**நட்சத்திரம்:**அஸ்வினி பி.ப.4.29 வரை பின் பரணி
**பிறை:**வளர்பிறை
**யோகம் :**மரண யோகம் முழுவதும்
**வார சூலை:**வடக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது
**நல்ல நேரம்:**காலை 6.24 – 7.54 மணி வரை காலை 9.24 – 10.24 மணிவரை பகல் 1.54 – 3.24 மணிவரை மாலை 4.24 – 5.24 மணிவரை
**ராகு காலம்:**12.24 – 1.54 மணிவரை
**எமகண்டம் :**7.54 – 9.24 மணிவரை
**குளிகை :**10.24 – 12.24 மணிவரை
**சந்திராஷ்டமம்:**கன்னி ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும்.

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**

**இன்று பிற்பகல் 4.29 மணிவரை**
பரணி, கார்த்திகை, மிருகசீரிடம், புனர்பூசம், ஆயிலியம், பூரம், உத்திரம், சித்திரை, விசாகம், கேட்டை, பூராடம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, ரேவதி

**இன்று பிற்பகல் 4.29 மணிக்குமேல்**
அஸ்வினி, கார்த்திகை, ரோஹிணி, திருவாதிரை, பூசம், மகம், உத்திரம், அஸ்தம், சுவாதி, அனுஷம், மூலம், உத்திராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு, தொழில், வியாபார இலாபங்கள், கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும்.**

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**

(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் – ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி :
077-0525325
078-6759739

# புதிய இராஜதந்திரிகள் ஐவர் நியமனம்:

## இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தல் - வெளிநாட்டில் பணிபுரியும் ஊழியர்களின் நலன் குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டும்

### நியமனம் வழங்கும் நிகழ்வில் ஜனாதிபதி தெரிவிப்பு











சர்வதேச சமூகத்தின் முன் இலங்கையின் பிம்பத்தை உயர்த்துவது தூதுவரின் பொறுப்பு. கடந்த காலங்களில் இராஜதந்திர சேவைகளில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் இலங்கையின் பெயருக்கு களங்கம் ஏற்படுத்திய சந்தர்ப்பங்கள் இருந்ததாகவும் புதிய நியமனங்களை பெற்ற இராஜதந்திரிகளிடம் இருந்து அவ்வாறானவற்றை எதிர்பார்க்கவில்லை எனவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க சுட்டிக்காட்டினார்.

வெளிநாட்டு இராஜதந்திர சேவைக்கான புதிய இராஜதந்திரிகளை நியமிக்கும் நிகழ்வு ஜனாதிபதி செயலகத்தில் நேற்று (07) இடம்பெற்றது. இங்கு உரையாற்றுகையிலே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களுக்கு வழங்கப்படுகின்ற சேவை தொடர்பில் விசேட கவனம் செலுத்தி செயற்படுமாறும் அந்த நாடுகளில் உள்ள அனைத்து இலங்கையர்களுக்கும் சேவைகளை வழங்குவதற்கு முன்னின்று பாரபட்சமின்றி நியாயமாக செயற்படுமாறும் ஜனாதிபதி புதிய இராஜதந்திரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

இலங்கைப் பணியாளர்கள் தொழில்புரியும் மத்திய கிழக்கு, தென்கொரியா, ஜப்பான் போன்ற நாடுகளில் இராஜதந்திர சேவைகளை வழங்குவதில் அதிக கவனம் செலுத்துவது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஈர்ப்பதற்கான வாய்ப்புகளை அதிகரிப்பதுடன், இலங்கையில் முதலீட்டாளர்களுக்கு புதிய சந்தை வாய்ப்புகளை பெற்றுக்கொடுக்கும் பணியை இராஜதந்திர சேவையின் ஊடாக மேற்கொள்ள முடியும் என ஜனாதிபதி தெரிவித்தார்.

இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்த வெளிநாட்டு நேரடி முதலீடுகளை கொண்டு வருவது தூதுவருக்கு வழங்கப்பட்டுள்ள பாரிய பொறுப்பு எனவும் அதற்குத் தேவையான ஆதரவை வழங்க அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வெளிநாட்டு இராஜதந்திர சேவைக்கென ஜனாதிபதி 04 தூதுவர்களையும் உயர்ஸ்தானிகர் ஒருவரையும் நியமித்தார்.

இராஜதந்திர சேவையில் 20 வருடங்களுக்கு மேலாக அனுபவம் வாய்ந்த அதிகாரிகள் இவ்வாறு இராஜதந்திர சேவைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி, கட்டார் நாட்டின் தூதுவராக ஆர்.எஸ்.கான் அசாத், ரஷ்ய தூதுவராக திருமதி எஸ்.கே.குணசேகர, குவைத் தூதுவராக எல்.பி.ரத்நாயக்க, எகிப்திய தூதுவராக ஏ.எஸ்.கே.செனவிரத்ன மற்றும் நியூஸிலாந்து உயர்ஸ்தானிகராக டபிள்யூ.ஜீ.எஸ்.பிரசன்ன ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, ஜனாதிபதி சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் ரொஷான் கமகே ஆகியோரும் இந்த நிகழ்வில் இணைந்து கொண்டனர்.

# 'அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை' திட்டத்தில் நிறுத்தப்பட்ட அபிவிருத்திகளை மீள முன்னெடுக்க ஆராய்வு

### பிரதமர் ஹரிணி பாராளுமன்றில் தெரிவிப்பு



'அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை' திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை பலவற்றின் அபிவிருத்திகள் பாதியிலேயே நிறுத்தப்பட்டுள்ளதாகவும் இவை தொடர்பில் மீளாய்வு செய்து திட்டத்தை மீள முன்னெடுக்க எதிர்பார்ப்பதாகவும் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று (07) வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது எதிர்க் கட்சி உறுப்பினர் அஜித் பி பெரேராவினால் அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை திட்டம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே பிரதமர் இதனைத் தெரிவித்தார். அதன்போது பிரதமர் மேலும் கூறுகையில்,

''அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை திட்டம் 2016 - 2020ஆம் ஆண்டளவில் முன்னெடுக்கப்பட்டது. தற்போது அந்தத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் தொடர்பில் மீளாய்வு செய்யப்படுகின்றன. இத்திட்டத்துக்காக தெரிவுசெய்யப்பட்ட பல பாடசாலைகள் பாதியிலேயே நிறுத்தப்பட்டுள்ளன.

இதன்படி, அந்தப் பாடசாலைகள் அனைத்தையும் மீளாய்வு செய்து, எங்கள் திட்டத்தின்படி, 03 கிலோமீற்றர் எல்லைக்குள் அனைத்து மாணவர்களும் செல்லக்கூடிய ஆரம்பப் பாடசாலைகளை உருவாக்கவும் இதுபோன்று பல பாடசாலைகளை இணைத்து முழுமையான மேல் நிலை பாடசாலைகளை உருவாக்கவும் திட்டமிட்டுள்ளோம். இதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. ஆரம்பத்திலிருந்து இதனை செய்யப் போவதில்லை. தெரிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகளில் பாதியில் நிறுத்தப்பட்டுள்ள பாடசாலைகளிலிருந்து இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது'' என்றார்.

# பிறப்பு – இறப்பு சான்றிதழ்களை பெற்றுக்கொள்ள புதிய இணையதளம்

### வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களுக்கு அறிவிப்பு



வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களுக்கு அந்தந்த நாடுகளில் அமைந்துள்ள தூதுவராலயங்களின் ஊடாக தாமதமின்றி பிறப்பு, திருமணம் மற்றும் மரண சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளக்கூடிய டிஜிட்டல் வசதிகளை ஆரம்பிக்கும் நிகழ்வு வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு, சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத்தின் தலைமையில் நேற்று முன்தினம் (06) இடம்பெற்றது.

ஏழு தூதுவராலயங்களில் இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட இந்த இணையதளத்தை வெளிநாட்டு அமைச்சர் ஆரம்பித்து வைத்தார். அதன்படி ஜப்பான், கட்டார், குவைத் தூதுவராலயங்கள், மிலானோ, டொரன்டோ, மெல்போர்ன் மற்றும் டுபாய் கவுன்சிலர் அலுவலகம் ஊடாக அந்தந்த நாடுகளில் உள்ள இலங்கையர்களுக்கு எதிர்காலத்தில் தாமதமின்றி பிறப்பு, திருமண மற்றும் இறப்பு சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

# அராலி துறைக்கு செல்லும் வீதியில் பாரிய குழி

### உரிய நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை





(பு.கஜிந்தன்)

அராலி பாலத்தில் இருந்து அராலி துறைக்கு செல்லும் வீதியில் உள்ள மதகு ஒன்று சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

குறித்த வீதியானது வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தான வீதியாக காணப்படுகிறது. அத்துடன் 789 வழித்தட பஸ் பயணிக்கும் பிரதான வீதியாக இந்த வீதி காணப்படுகிறது.

இந்த வீதியில் உள்ள மதகில் சுமார் இரண்டு அடி நீளமும் ஒன்றரை அடி அகலத்திலும் துவாரம் காணப்படுகின்றது. கொக்கிரீட்டிலான தகடு உடைந்து, அதற்குள்ளே இருந்த போக்கும் உடைந்தே இந்த குழி தோன்றியுள்ளது. இருப்பினும், கொங்கிரீட் தகட்டுக்கு உள்ளே கம்பிகள் காணப்படவில்லை என்ற விடயமானது முன்னர் மேற்கொள்ளப்பட்ட புனரமைப்பு பணிகளின் தரமற்ற தன்மையை எடுத்துக்காட்டுவதுடன், மக்கள் மத்தியில் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்த வீதியால் அன்றாடம் 789 வழித்தட பயணிகள் சேவை பஸ் பயணிப்பதுடன், வயோதிபர்கள், பாடசாலை மாணவர்கள், வேலைகளுக்கு செல்வோர் என பல்லாயிரக்கணக்கானோர் இந்த வீதியை பயன்படுத்துகின்றனர்.

அத்துடன் எதிரே வருகின்ற ஒரு வாகனத்துக்கு இன்னொரு வாகனம் வழிவிட்டு கொடுத்து பயணிப்பதற்கு ஏற்ற அளவில் இந்த வீதி காணப்படவில்லை. அகலத்தில் குறைந்ததாக உள்ளதுடன், இவ்வாறு குழியும் உள்ளதால் இந்த வீதியால் பயணிக்கும்போது உயிர் ஆபத்தான பயணங்களையே எதிர்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுகிறது.

பரந்தன் - முல்லைத்தீவு வீதியில், புளியம்பொக்கணைக்கு அருகே உள்ள பாலத்தின் புனரமைப்புப் பணிகள் இடைநிறுத்தப்பட்டதால், அண்மையில் அந்த பாலத்தில் விழுந்து இரு இளைஞர்கள் உயிரிழந்தனர். சேதமடைந்த இந்த மதகுக்கு உரிய நடவடிக்கைகள் எடுக்காத ஒவ்வொரு நிமிடமும் ஆபத்தான பயணத்தை மேற்கொள்ளும் சூழ்நிலையே காணப்படுகிறது.

இது குறித்து வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தனர்.

# இந்தியத் திரைப்பட விழா 2025 இலங்கையில் ஆரம்பம்







பொலிவூட் வெற்றித் திரைப்படமான "83" கொழும்பில் உள்ள பி.வி.ஆர். சினிமாவில் 06ஆம் திகதி திங்கட்கிழமை திரையிடப்பட்டு இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் சுனில்குமாரகமகே மற்றும் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா ஆகியோரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கிரிக்கெட் உலகக் கிண்ணத்தை 1983ஆம் ஆண்டில் இந்தியா வெற்றிகொண்ட வரலாற்று முக்கியத்துவமிக்க வெற்றியை விவரிக்கும் இத்திரைப்படத்தை பார்வையிட நூற்றுக்கணக்கான ரசிகர்களும் ஆர்வலர்களும் கலந்து கொண்ட அதேவேளை, 1996 இலங்கை கிரிக்கெட் ஜாம்பவான்கள் விசேட விருந்தினர்களாக பங்கேற்று சிறப்பித்திருந்தனர்.

இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்த அமைச்சர் சுனில் குமார கமகே, விளையாட்டுத்துறைக்கு முக்கியத் துவமளித்து இந்தியத் திரைப் படங்கள் வழங்கும் வகிபாகத்தை சுட்டிக்காட்டியதுடன், இந்திய திரைப்படத்துறையை மெச்சியிருந்தார். இதேவேளை, இந்தியா இலங்கை இடையில் இரு நாட்டு மக்களிடையேயான உறவுகளை வலுவாக்கும் செயற்பாடுகளை நோக்கிய பயணத்தில் 2025 புது வருடத்தில் இடம்பெறும் முதலாவது முன்னெடுப்புகளில் நாடளாவிய ரீதியில் நடைபெறும் இத்திரைப்பட விழாவும் ஒன்றென உயர்ஸ்தானிகர் இங்கு குறிப்பிட்டிருந்தார்.

இந்தியத் திரைப்பட விழா 2025 பதுளை, யாழ்ப்பாணம், காலி, குருநாகல், மாத்தளை, மாத்தறை, மொனராகலை மற்றும் நுவரெலியா உள்ளிட்ட நகரங்கள் உட்பட இலங்கை முழுவதும் உள்ள நகரங்களில் எதிர்வரும் 10ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.



# அரச சேவையில் மக்கள் நம்பிக்கை வைக்கும் வகையில் செயலாற்ற ITEC திட்ட பயிற்சியைப் பயன்படுத்தவேண்டும்

### வட மாகாண ஆளுநர் வேதநாயகன் வலியுறுத்து



அரச சேவையில் மக்கள் நம்பிக்கை வைக்கும் வகையில் செயலாற்றவேண்டும். அரசாங்கப் பணியாளர்களை அதற்குத் தயார்படுத்தும் வகையில் ஐரெக் (ITEC) திட்டத்தின் ஊடான பயிற்சிகளை பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் வேண்டுகோள் விடுத்தார்.

வடக்கு மாகாண அரசசேவை பட்டதாரிகள் சங்கத்தின் கோரிக்கையின்பேரில் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புத் திட்டத்துக்கு - ஐரெக் (ITEC) - விண்ணப்பிக்கும் முறைமை தொடர்பான விழிப்புணர்வு கலந்துரையாடல் யாழ்ப்பாணம் கலாசார நிலையத்தில் நேற்று (07) இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு மாகாண ஆளுநர் தனது உரையில், அரச பணியாளர்களின் சேவைகளை மேம்படுத்துவதற்கு பயிற்சிகள் அவசியமாகின்றன. காலத்துக்கு காலம் அரச பணியாளர்களுக்கு பயிற்சிகளை வழங்குவதும் இதற்குத்தான். எமது மாகாணத்தைச் சேர்ந்த அலுவலர்கள் ஐரெக் ஊடான பயிற்சிக்கு விண்ணப்பிப்பது குறைவாக இருந்ததாக துணைத்தூதுவர் தனது உரையில் சுட்டிக்காட்டினார். இம்முறை அதை அதிகமாக்குவதற்கு நாம் நடவடிக்கை எடுக்கின்றோம். வடக்கு மாகாண சபைக்கும் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்துக்கும் இடையிலான உறவு நெருக்கமானது.

அவர்கள் இவ்வாறான பயிற்சிகளை மாத்திரமல்ல எமது மாகாணத்துக்கு பல்வேறு உதவிகளையும் செய்திருக்கின்றார்கள். குறிப்பாக இன்றும் இந்திய வீட்டுத் திட்டம் என்று அவர்களால் எங்கள் மக்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுத் திட்டத்தை அழைக்கின்றோம். அது எமது மக்களுக்கு கிடைத்த மிகப்பெரிய கொடை.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க சுட்டிக்காட்டுவதைப் போன்று மக்களின் நம்பிக்கையை அரச சேவையாளர்கள் வென்றெடுக்கவேண்டும். அதற்கு இவ்வாறான பயிற்சிகளை பயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்றார்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2025 ஜனவரி 08ஆம் திகதி புதன்கிழமை

# மக்களின் எதிர்பார்ப்பு

சர்ச்சைக்குரிய வழக்குகள் தொடர்பாக ஏற்பட்டிருக்கும் இழுபறி தொடர்பில் ஜனாதிபதி கவனம் செலுத்தியிருப்பது எமது கவனத்தை ஈர்த்திருக்கிறது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கும் சட்ட மா அதிபர் உள்ளிட்ட சட்ட மா அதிபர் திணைக்கள அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் (06) ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

சட்டத்தை அமுல்படுத்துவதற்காக செயற்படும் அனைத்து நிறுவனங்களுடனும் இணைந்து செயற்படுவதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

நீதித்துறை கட்டமைப்பின் மீது மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவது சட்ட மா அதிபர் திணைக்களத்தின் பொறுப்பாகும் எனவும் அரசியல் அதிகாரத்தின் மீதான மக்களின் அபிப்பிராயங்களை மாற்றி நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும் எனவும் மக்களின் எதிர்பார்ப்புகள் வீழ்ச்சியடைய ஒருபோதும் இடமளிக்கக் கூடாது எனவும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இங்கு மேலும் தெரிவித்தார்.

அவ்வாறு மக்களின் எதிர்பார்ப்புகளை வீழ்ச்சியடையச் செய்யும் வகையில் அரசாங்கம் செயற்படாது என்றும் சட்டத்தை நிலைநாட்டுவது தொடர்பில் மக்களின் நம்பிக்கை வீழ்ச்சியடைந்துள்ளதோடு அதனை மீளமைக்க நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி இங்கு வலியுறுத்தியதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன, சட்ட மா அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி பாரிந்த ரணசிங்க மற்றும் சட்ட மா அதிபர் திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்டோர் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் பாராளுமன்றத் தேர்தலிலும் ஊழல் மோசடிகளுக்கு எதிராக பேசிய தேசிய மக்கள் சக்தி, ஆட்சிக்கு வந்த நாள்முதல் இன்றுவரை அது தொடர்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஊழல், மோசடிகளை செய்தவர்கள் தொடர்பில் விசேட கோவைகள் இருப்பதாக கூறிய ஆட்சியாளர்கள் இப்போது அந்த கோவைகளை தொலைத்துவிட்டார்களா என்று சமூக ஊடகங்களில் ஆட்சியாளர்களை கேலி செய்யும் நிலைமை உருவாகியிருக்கிறது.

உகண்டாவில் ராஜபக்ஷக்களின் பணம் இருப்பதாக தேர்தல் காலத்தில் பிரசார மேடையில் கூறிய தேசிய மக்கள் சக்தியின் எம்.பி. ஒருவர், உண்மையை பொய்யென்று நம்புவதற்கும் பொய்யை உண்மை என்று நம்புவதற்கும் மக்களுக்கு தார்மீக உரிமை இருப்பதாக இப்போது பிதற்றுகிறார். கடந்த கால ஆட்சியாளர்கள் மீதிருந்த அதிருப்தியை வெளிக்காட்ட மனதுக்குள் கனன்று கொண்டிருந்த மக்கள் இந்தக் கதைகளுக்கு அடிமையாகிப்போனார்கள்.

ஜனாதிபதி அநுர எதிர்க்கட்சியில் இருந்தபோது தான் பதவிக்கு வந்தால் 48 மணித்தியாலங்களில் பல மாற்றங்கள் செய்வதாகக் கூறினார். பல அதிசயங்கள் செய்யக்கூடிய திறமை தன்னிடமும் தனது குழுவினரிடமும் இருப்பதாகக் கூறினார். ஆனால், இப்போது தான் மந்திரவாதியோ தந்திரவாதியோ இல்லை என அவர் கூறுகின்றார். பதவிக்கு வருவதற்கு முன்பும் எதிர்க்கட்சியில் இருந்து கொண்டும் எதை வேண்டுமானாலும் பேசலாம். ஆனால், நாற்காலியில் அமர்ந்தவுடன் தான் கூறியதை நடைமுறைப்படுத்துவதில் எவ்வளவு சிக்கல்கள் இருக்கின்றன என்பதை அப்போதுதான் புரிந்துகொள்ள முடியும்.

எவ்வாறாயினும், இப்போது ஜனாதிபதி சட்ட மா அதிபர் திணைக்களத்தை அழைத்துப் பேசியிருப்பதன்மூலம் ஆட்சியாளர்கள் மீது மக்கள் கொண்டுள்ள விசனத்தை அவர் புரிந்துகொண்டிருப்பதாகவே கருதவேண்டியுள்ளது. ஜனாதிபதியின் இந்தக் கலந்துரையாடலின் பின்னராவது சட்ட நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்பட வேண்டும். மக்களின் அதீத எதிர்பார்ப்பும் அதுவே.

## இன்றைய நாளில்...

- ✶ 1912 – ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் அமைக்கப்பட்டது.
  1964 – அமெரிக்க அரசுத்தலைவர் லின்டன் பி. ஜான்சன் அமெரிக்காவில் வறுமைக்கு எதிரான போரை அறிவித்தார்.
- ✶ 1972 – சர்வதேச அழுத்தத்தை அடுத்து, பாகிஸ்தான் அரசுத்தலைவர் சுல்பிக்கார் அலி பூட்டோ வங்காளத் தலைவர் முஜிபுர் ரஹ்மானை சிறையிலிருந்து விடுவித்தார்.
- ✶ 1973 – சோவியத் விண்கப்பல் லூனா 21 விண்ணுக்கு ஏவப்பட்டது.
- ✶ 1995 – தமிழீழ விடுதலைப் புலிகள் - சந்திரிகா அரசு போர் நிறுத்தம் ஆரம்பமாகியது.
- ✶ 2008 – கொழும்பு புறநகர்ப் பகுதியான ஜா-எலயில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் அமைச்சர் டி.எம்.தசநாயக்க உட்பட மூவர் கொல்லப்பட்டனர்.
- ✶ 2009 – ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க கொழும்பு நகரில் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.




## 2025.01.06 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்

**01. இலங்கைக்கும் வியட்நாமுக்கும் இடையிலான சுங்க நடவடிக்கைகள் தொடர்பான ஒத்துழைப்புகள் மற்றும் பரஸ்பர ஒத்துழைப்புகளைப் பெற்றுக்கொள்வதற்கான ஒப்பந்தம்**

இலங்கைக்கும் வியட்நாமுக்கும் இடையிலான சுங்க நடவடிக்கைகள் தொடர்பான ஒத்துழைப்புகள் மற்றும் பரஸ்பர ஒத்துழைப்புகளைப் பெற்றுக்கொள்வதற்கான ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக 2021.11.23 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பினும் குறித்த ஒப்பந்தத்தில் இதுவரை கையொப்பமிடப்படவில்லை. உத்தேச ஒப்பந்தத்தின் மூலம் இரண்டு நாடுகளுக்கிடையிலான வர்த்தகத் தொடர்புகளின் போது செலவுகளைக் குறைத்தல், தேச எல்லைகள் தொடர்பான வரிகளை சரியான வகையில் கணிப்பிடல் மற்றும் அறவிடல், மட்டுப்பாடுகளின் கீழ் பண்டங்கள் பரிமாற்றம் செய்யப்படுவதைத் தடை செய்தல், மட்டுப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான ஒழுங்குவிதிகளை வெளியிடுதல் போன்ற நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இருதரப்பினர்களும் உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ள ஒப்பந்தத்துக்கு சட்ட மா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது. அதற்கமைய, இலங்கைக்கும் வியட்நாமுக்கும் இடையிலான குறித்த ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. எமது நாட்டின் சர்வதேச விமான நிலையங்களை மேம்படுத்துவதற்கான ஊக்குவிப்புச் சலுகைகள் வழங்கல்**

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம், கொழும்பு சர்வதேச விமான நிலையம் (இரத்மலானை) மற்றும் மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையங்களுக்கான சர்வதேச விமான சேவைகளை கவர்ந்திழுக்கும் நோக்கில் வரையறுக்கப்பட்ட விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியால் சர்வதேச விமான நிலைய சேவைகளுக்கான ஊக்குவிப்புச் சலுகைத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அதன்கீழ், குறித்த விமான நிலையங்களுக்கு புறப்படுதல் வரிச் சலுகைகளை கீழ்வருமாறு நீடிப்பதற்கு போக்குவரத்து, துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்துக்கு திட்டமிடப்பட்டுள்ள விமானப் பயண நேர அட்டவணைக்கமைவான விமான சேவைகளுக்கு தற்போது நடைமுறையிலுள்ள புறப்படுதல் வரியில் 50வீதக் கட்டணத்தை கையுதிர்க்கும் சலுகையை 2026.01.30 வரை நீடித்தல்.

கொழும்பு சர்வதேச விமான நிலையத்துக்கு (இரத்மலானை) திட்டமிடப்பட்டுள்ள விமானப் பயண நேர அட்டவணைக்கமைவான விமான சேவைகளுக்கு தற்போது நடைமுறையிலுள்ள புறப்படுதல் வரியில் 50வீதக் கட்டணத்தை கையுதிர்க்கும் சலுகையை 2025.03.27 தொடக்கம் ஒருவருட காலத்துக்கு நீடித்தல்.

மத்தல சர்வதேச விமான நிலையத்துக்கு திட்டமிடப்பட்டுள்ள விமானப் பயண நேர அட்டவணைக்கமைவான விமான சேவைகளுக்கு தற்போது நடைமுறையிலுள்ள புறப்படுதல் வரிக்குரிய சலுகையை முழுமையாக வழங்குவதை 2024.12.29 தொடக்கம் மேலும் ஒருவருட காலத்துக்கு நீடித்தல்.

**03. அரச நிறுவனங்களில் அகற்றப்படும் கடதாசிகளை வரையறுக்கப்பட்ட வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலைக்கு ஒப்படைத்தல்**

வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலை உற்பத்தி நடவடிக்கைகள் 2020ஆம் ஆண்டில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், உற்பத்திக்குத் தற்போது பயன்படுத்தப்படும் பிரதான மூலப்பொருளாக பாவனையிலிருந்து அகற்றப்படும் கடதாசியே பயன்படுத்தப் படுகின்றது. குறித்த உற்பத்திகளைத் தடையின்றி மேற்கொண்டு செல்வதற்காக பாவனையிலிருந்து அகற்றப்படும் கடதாசிகளைத் தொடர்ச்சியாக விநியோகிப்பது அவசியமாகும்.

அரச நிறுவனங்களில் பாவனையிலிருந்து அகற்றப்படும் கடதாசி, வாழைச்சேனை கடதாசித் தொழிற்சாலைக்கு வழங்குவதன் மூலம், தொடர்ச்சியாகப் போதியளவு மூலப்பொருளை விநியோகிக்கலாம் எனக் கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலைக்கு தொடர்ச்சியாக கடதாசி விநியோகிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கீழ்க்காணும் யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அரச அச்சகம், அரச அச்சகக் கூட்டுத்தாபனம், தேர்தல் ஆணைக்குழு, கல்வி அமைச்சு போன்ற அரச நிறுவனங்கள், அனைத்துப் பல்கலைக்கழகங்கள், அனைத்து அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் இருந்து அகற்றப்படும் தரமான வெள்ளைக் கடதாசி உள்ளிட்ட அகற்றப்படும் கடதாசிகள், வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசிக் கம்பனியால் போக்குவரத்து வசதிகள் வழங்குவதன் அடிப்படையில் இலவசமாக வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசிக் கம்பனிக்கு ஒப்படைத்தல்.

ஏனைய அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரசுடன் இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்களில் அகற்றப்படும் கடதாசிகளை, விலைமனுக் கோரல் செயன்முறை மூலம் குறித்த நிறுவனமும் வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசிக் கம்பனி உடன்படுகின்ற சலுகை விலையில் குறித்த கம்பனிக்கு ஒப்படைத்தல்.

**04. நுவரெலியா மாவட்ட மருத்துவமனையில் கண் சத்திரசிகிச்சை மேற்கொண்டுள்ள ஒருசில நோயாளர்களுக்கு கண்பார்வை இழக்கப்பட்டமைக்கான நட்டஈடு செலுத்துதல்**

நுவரெலியா மாவட்ட மருத்துவமனையில் கண் சத்திரசிகிச்சை மேற்கொண்டுள்ள ஒருசில நோயாளர்களுக்கு கண்பார்வை இழக்கப்பட்டமையால் பாதிப்புற்றவர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகையைத் தீர்மானிப்பதற்காக தொழில்நுட்பக் குழுவொன்றை நியமிப்பதற்கு 2024.02.12 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் ஒருவரின் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், அக்குழுவால் குறித்த விடயங்களை ஆராய்ந்து செலுத்த வேண்டிய இழப்பீட்டுத் தொகை பற்றி விதந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. குறித்த விதந்துரைகளின் அடிப்படையில் அச்சம்பவத்தால் பாதிப்புக்குள்ளாகிய 17 நோயாளர்களுக்கு கீழ்க்காணும் வகையில் இழப்பீடுகளைச் செலுத்துவதற்காக சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

12 நோயாளர்களுக்கு 1,000,000 ரூபா வீதம் இழப்பீடு செலுத்தல்

02 நோயாளர்களுக்கு 750,000 ரூபா வீதம் இழப்பீடு செலுத்தல்

ஒரு நோயாளிக்கு 700,000 ரூபா வீதம் இழப்பீடு செலுத்தல்

02 நோயாளர்களுக்கு 250,000 ரூபா வீதம் இழப்பீடு செலுத்தல்

**05. கொழும்புத் துறைமுகத்தின் தொழிற்பாடுகளுக்கான இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு இரண்டு கப்பல் இழுவைப் படகுகளை வாடகைக்குப் பெறல்**

2022.10.10 அன்று இடம்பெற்ற அமைச் சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு 80 Ton Bollard Pull Tug படகொன்றுக்கான பெறுகைக்கு சர்வதேச போட்டி விலைமனு கோரப்பட்டுள்ளது. அதற்காக 04 விலைமுறிகள் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், விபரங்களுடன் கூடிய பதிலளிப்புகளைச் சமர்ப்பித்துள்ள குறைந்த விலைமுறிதாரருக்கு வழங்குவதற்கு அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள பெறுகைக் குழு விதந்துரைத்துள்ளது. அதற்கிடையில், 2024.01.01 தொடக்கம் பெறுமதிசேர் வரி விதிப்பு நடைமுறைக்கு வந்தமையால் குறித்த பெறுகைக்கு வரி பெறுமதி சேர்க்கப்பட்டமையால், குறித்த இழுவைப் படகை கடன் அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு விதந்துரைக்கப்பட்ட விநியோகத்தருடன் கலந்துரையாடப்பட்டிருப்பினும், அதற்கு விநியோகத்தர் உடன்பாடு தெரிவிக்காமையால் அப்பெறுகைச் செயன்முறை இரத்தாகியுள்ளது.

பின்னர், 80 80 Ton Bollard Pull Tug படகுகள் 02 இனை வாடகைக்குப் பெற்றுக் கொள்வதற்கான சர்வதேச போட்டி விலைமனு கோரப்பட்டுள்ளதுடன், அதற்காக 03 விலை முறிகள் கிடைக்கப் பெற்றுள்ளன. குறித்த பெறுகையில் விபரங்களுடன் கூடிய பதிலளிப் புகளைச் சமர்ப்பித்துள்ள குறைந்த விலை முறிதாரருக்கு இலங்கை துறைமுக அதிகார சபைக்கு நன்மையளிக்கும் வகையில் விலைக்குறைப்பைப் பெற்றுக் கொள்வதற்காக விலைமனுதாரருடன் உடன்பாடுகள் எட்டப் பட்டிருக்கவில்லை. அத்துடன், கொழும்பு துறைமுகத்தின் புதிய முனையம் நிர்மாணிக்கும் பணிகள் பூர்த்தி செய்யப்படுகின்றமையால், இழுவைப்படகுகளின் தேவையை மீண்டும் மதிப்பீடு செய்ய வேண்டியுள்ளமையால், மேற்குறித்த பெறுகைச் செயன்முறையை இரத்துச் செய்யுமாறு, இலங்கை துறைமுக அதிகார சபையின் பணிப்பாளர் சபை கோரியுள்ளது.

புதிய முனையத்தின் நிர்மாணப் பணிகள் 2025 இறுதிப்பகுதியில் பூர்த்தி செய்யப்படவுள்ளமையால், கீழ்க்காணும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு போக்குவரத்து, துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இலங்கை துறைமுக அதிகார சபையால் கொழும்புத் துறைமுகத்தின் தொழிற்பாடு களுக்கான 80 Ton Bollard Pull Tug 02 இனை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள் வதற்காக மேற்கொள்ளப்பட்ட பெறுகைச் செயன்முறையை நிறைவு செய்தல் 2025ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ள புதிய முனைய தொழிற்பாடுகளுக்குத் தேவையான 70 Ton Bollard Pull Twin Azimuth Stern Drive Harbour Tug படகுகள் 02 இனை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கான பெறுகைச் செயன்முறையை ஆரம்பித்தல்

**06. அரச – தனியார் பங்குடைமையின் கீழ் 'றிச்மன்ட் காசல்' புனரமைத்துப் பாதுகாத்தல்**

களுத்துறை மாவட்டத்தில் பலாதொட்டவில் அமைந்துள்ள 'றிச்மன்ட் காசல்' வளாகம் மற்றும் பார்க் தோட்டமானது, பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்துக்குச் சொந்தமான நம்பிக்கைப் பொறுப்புச் சொத்தாகக் காணப்படுவதுடன், அது உள்நாட்டு வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்து கொண்டுள்ள வரலாற்று ரீதியாகவும் தொல்லியல் ரீதியாகவும் பெறுமதிவாய்ந்த வளாகமாகும். மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் தொல்லியல் துறையும் கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனமும் இம்மாளிகையில் மேற்கொள்ள வேண்டிய அத்தியாவசிய திருத்த வேலைகள் பலவற்றைச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதற்கமைய, சாசனப் பாதுகாவலரின் விருப்பு களுக்கு முரணாக அமையாத வகையில் 'றிச்மன்ட் காசல்' மாளிகையைப் புனரமைப்புச் செய்தல் மற்றும் அம்மாளிகையின் நடவடிக்கைகளை மேற் கொண்டு செல்வதற்கு அரச – தனியார் பங்குடை மையின் கீழ் மேற்கொள்வதற்கு இயலுமாகும் வகையில் ஆர்வங் காட்டுகின்ற தனியார் துறை முதலீட்டாளர்களிடம் முன்மொழிவுகளைக் கோரு வதற்கு புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவ காரங்கள் அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. புதிய அநுராதபுரம் - புதிய ஹபரண 220 கிலோவாற்று மின்கடத்திக் கம்பிப் பாதையை நிர்மாணித்தல்**

மின்சாரக் கட்டமைப்பின் நம்பகத்தன்மையை வலுப்படுத்துகின்ற கருத்திட்டத்தின் 4 A பக்கேஜ் இன் கீழ் 45 கிலோமீற்றர் தூர புதிய அநுராதபுரம் - புதிய ஹபரண 220 கிலோவாற்று மின்கடத்திக் கம்பிப் பாதையை நிர்மாணிப்பதற்கான சிவில் நிர்மாணப் பணிகள், கோபுரங்களை நிர்மாணித்தல் மற்றும் கம்பி இணைப்புக்களுக்குப் பொருத்தமான ஒப்பந்தக்காரர்களை தெரிவு செய்வதற்கான சர்வதேச போட்டி விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளது. அதற்கு 02 விலைமுறிகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

அதற்கிணங்க, தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகைக் குழுவின் விதந்துரைகளுக் கமைய விபரங்களுடன் கூடிய பதிலளிப்புகளைக் கொண்டுள்ள குறைந்த விலை முறிதாரரான M/s Ceylex Engineering (Pvt) Ltd இற்கு குறித்த ஒப்பந்தத்தை வழங்குவதற்கு வலுசக்தி அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. 1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க குற்றவியல் வழக்குக் கோவைச் சட்டத்தை திருத்தம் செய்தல்**

இனங்காணப்பட்ட சில சந்தர்ப்பத்திற்கேற்ற நிலைமைகளின் கீழ் சந்தேக நபர் / குற்றவாளி நீதிமன்றத்தில் தனிப்பட்ட வகையில் தோற்றும் தேவையினை வழக்கு விசாரணையின்போது நீக்குவதற்கும் தொலைதூரச் சாட்சியங்களை ஒளிப்பதிவு செய்வதற்கும் விசேட நிபுணர்களின் சாட்சிகளைப் பெற்றுக் கொள்வதற்கும் மின்னஞ்சல் மூலம் நீதிமன்ற அழைப்பாணையை வழங்குவதற்குமான ஏற்பாடுகளை வகுத்துக் கொள்வதற்காக 1979ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க குற்றவியல் வழக்குக் கோவைச் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கு 2023.12.05 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, சட்ட வரைஞரால் தயாரிக்கப் பட்டுள்ள சட்டமூலத்துக்கு சட்ட மா அதிபரின் ஒப்பதல் கிடைக்கப்பெற்றுள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிப்பதற்காகவும் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**09. திருகோணமலை நிர்வாக மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபர் பதவிக்கு நியமித்தல்**

திருகோணமலை நிர்வாக மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர்/அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய சாமிந்த ஹெட்டியாராச்சி 2025.01.01 தொடக்கம் ஓய்வூதியத் திணைக் களத்தின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு நியமிக் கப்பட்டமையால், திருகோணமலை மாவட்டச் செயலாளர் / அரசாங்க அதிபர் பதவி வெற்றிடம் நிலவுகின்றது. குறித்த பதவிக்கு தற்போது கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக் களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகமாகக் கடமையாற்றிய இலங்கை நிர்வாக சேவையின் விசேட தர அதிகாரியான டபிள்யூ.ஜீ.எம்.ஹேமந்த குமாரவை நியமிப்பதற்கு பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

(தொடர்ச்சி 09 ஆம் பக்கம்...)

## நக்கல் நமசிவாயம்

*அமைச்சரவையில் பல தீர்மானங்கள் சீனா சீனா என்று இருக்கிறது பாருங்கோ... சீனாவின் மாநிலமா மாறிவருகுதோ சிறி லங்கா?*



# இலங்கையில் தஞ்சமடைந்துள்ள ரோஹிங்யர்கள் தொடர்பில் சர்வதேச சட்டத்துக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளுங்கள்!

## ரிஷாத் எம்.பி. ஜனாதிபதிக்கு அவசர கடிதம்

கடந்த டிசம்பர் மாதம் இலங்கையில் தஞ்சமடைந்துள்ள மியன்மார் நாட்டின் ரோஹிங்யா அகதிகள் தொடர்பில் சர்வதேச சட்டத்துக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன், ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேற்படி கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

"இலங்கையில் புகலிடம் கோரி வரும் ரோஹிங்யா அகதிகளைத் திருப்பியனுப்பும் தீர்மானம் குறித்து மிகுந்த கவலையுடன் உங்களுக்கு அறியத் தருகின்றேன். தங்கள் நாட்டில் துன்புறுத்தலுக்கு ஆளாகியிருக்கும் இந்த மக்களின் நல்வாழ்வைக் கருத்திற்கொண்டு, சர்வதேச மனிதாபிமான கொள்கைகளை நாம் கடைப்பிடிக்க வேண்டுமென்பது எனது உறுதியான நம்பிக்கையாகும்.

மியன்மாரில் நிலவும் கடுமையான வன்முறை மற்றும் அடக்குமுறை காரணமாக ரோஹிங்யா மக்கள் நம் நாட்டில் தஞ்சம் புகுந்துள்ளனர் என்பது உங்களுக்குத் தெரியும். அவர்கள் இலங்கைக்கு வந்திருப்பது, உண்மையாகவே உயிர் அச்சுறுத்தலுக்காகவேயன்றி, பொருளாதார புலம்பெயர்ந்தோராக அல்ல. ஐக்கிய நாடுகள் சபை உட்பட சர்வதேச சமூகம் இந்த நபர்களின் அவலநிலையை அங்கீகரிக்கிறது. மேலும், மனித உரிமைகள் மற்றும் கண்ணியத்தை மதிக்கும் ஒரு நாடாக, அவர்கள் பாதிக்கப்படக்கூடிய நேரத்தில், அவர்களுக்கான பாதுகாப்பை வழங்குவது நமது கடமையாகும்.


அகதிகள் மீதான சர்வதேச சட்டங்கள் மற்றும் மரபுகளுடன் எங்கள் நடவடிக்கைகள் ஒத்துப்போவதை உறுதிசெய்ய வேண்டும், principle of non-refoulement - தனிநபர்கள் தங்கள் உயிருக்கு அல்லது சுதந்திரத்துக்கு அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் இடங்களுக்கு திருப்பியனுப்புவதைத் தடை செய்தல், இந்தக் கோட்பாட்டை நிலைநிறுத்துவதன் மூலம், பாதிக்கப்படக்கூடிய நபர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது மட்டுமன்றி, சர்வதேச மனிதாபிமான தரங்களுக்கு இலங்கையின் அர்ப்பணிப்பை நிரூபிக்கவும் இது உதவும்.



வரலாற்று ரீதியாக இலங்கை துன்புறுத்தலுக்கு ஆளாகியவர்களுக்கு புகலிடமளிக்கும் ஒரு நாடாக இருந்துவருகிறது. பல இலங்கையர்கள் யுத்த காலங்களில் வேறு நாடுகளில் அகதிகளாக வாழ்ந்துள்ளனர். ரோஹிங்யா அகதிகளின் தற்போதைய நிலைமை, கடந்த காலத்தில் ஒரு தேசமாக நாம் எதிர்கொண்ட போராட்டங்களை பிரதிபலிக்கிறமென்பதை நினைவிற்கொள்வது மிகவும் முக்கியமானது. மியன்மாரில் இந்த மக்களின் பாதுகாப்பு மற்றும் மனித உரிமைகள் இன்னும் ஆபத்திலுள்ள நிலையில், அவர்களை வலுக்கட்டாயமாக மியன்மாருக்கு திருப்பியனுப்பும் முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, இந்த அகதிகள் இலங்கையில் தங்கியிருக்கும் வரை, அவர்களை மரியாதையுடனும் கண்ணியத்துடனும் நடத்தவேண்டுமெனவும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். அவர்கள் கைதிகளாகக் கருதப்படாமல், நமது அன்பும் ஆதரவும் தேவைப்படும் மக்களாகக் கருதப்பட வேண்டும்.

மேலும், இந்த அகதிகள் தங்களுக்கு மீள்குடியேறக்கூடிய பொருத்தமான, பாதுகாப்பானதாகக் கருதப்படும் மூன்றாவது நாட்டை அடையாளம் காண்பதற்கு, ஐக்கிய நாடுகள் சபையுடன் ஒத்துழைப்பது பொருத்தமானதாக இருக்கும்" – எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.



Eng. Rishad Bathiudeen
Member of Parliament
Leader – All Ceylon Makkal Congress

Address : No. 56, 1st Floor, Supun Arcade Residencies, Colombo - 06
Contact No : 0094 777 487 504, 0094 112 360 512
Email : rishad.vanni@gmail.com

H.E. Anura Kumara Dissanayake,
President of the Democratic Socialist Republic of Sri Lanka

06.01.2025

Your Excellency,

This is to inform you with grave concern regarding the decision to repatriate the Rohingya refugees currently seeking asylum in Sri Lanka. It is my firm belief that we must adhere to international humanitarian principles and consider the well-being of these individuals who have fled persecution in their homeland.

The Rohingya people, as you are aware, have sought refuge in our country due to severe violence and oppression in Myanmar. They have come to Sri Lanka not as economic migrants, but out of genuine fear for their lives. The international community, including the United Nations, recognizes the plight of these individuals, and it is incumbent upon us as a nation that values human rights and dignity to offer them protection during their time of vulnerability.

We must ensure that our actions align with international laws and conventions on refugees, which emphasize the principle of non-refoulement – the prohibition of sending individuals back to places where they face threats to their lives or freedom. By upholding this principle, Sri Lanka will not only protect the rights of these vulnerable individuals but also demonstrate its commitment to international humanitarian standards.

Historically, Sri Lanka has been a land of refuge for those fleeing persecution. Many Sri Lankans have themselves lived as refugees in other countries during times of conflict. It is critical to remember that the current situation of the Rohingya refugees mirrors the struggles we have faced as a nation in the past. In light of this, I urge you to reconsider the decision to forcibly return these people to Myanmar, where their safety and human rights are still at risk.

I kindly request that these refugees be treated with respect and dignity while they remain in Sri Lanka. They should not be treated as prisoners but as people in need of our compassion and support. Furthermore, it would be appropriate to collaborate with the United Nations to identify a suitable third country where these refugees can resettle, with their consent, once it is deemed safe for them.

Thanking you,
Yours Sincerely,

Rishad Bathiudeen M.P,
Leader - All Ceylon Makkal Congress

Eng. Rishad Bathiudeen
Member of Parliament - Vanni District
Leader of All Ceylon Makkal Congress
No. 56, 1st Floor, Supun Arcade Residencies,
Galle Road, Colombo - 06.

# மருந்து கடத்தல்காரர்களின் நலன்களுக்காக அரசாங்க சேவைகள் மேற்கொள்ளப்படாது

## சுகாதார அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ



உலகில் அதிக இலாபம் ஈட்டும் வியாபாரமாக தற்காலத்தில் மோசடியாக மாறியுள்ள மருத்துவத் துறையின் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு மற்றும் அவற்றை சரியாகத் திருத்துவதற்கு முன்னிற்கும் சகல ஊழியர்களையும் ஊக்குவிப்பதற்கு அவர்களின் பாதுகாப்புக்காக அரசாங்கம் துணைநிற்கும் என்றும் கடத்தல்காரர்கள் அல்லது அந்தக் குழுவின் இலக்குகளுக்காக அமைச்சு அல்லது அரசாங்க சேவைகள் மேற்கொள்ளப்படாது என்றும் சுகாதார மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையில் (NMRA) விசேட கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் தலைவர் விசேட வைத்தியர் ஆனந்த விஜேவிக்ரம உட்பட அதிகாரிகளுடன் அதிகாரசபையின் தற்போதைய செயற்பாடுகள், நிர்வாகத் துறை, ஊழியர்களின் சிக்கல்கள், மருந்து விலை ஒழுங்குபடுத்தல், மருந்துகளின் பதிவு, புதிய விண்ணப்பங்கள் கோரல் போன்ற துறைகள் தொடர்பாக அமைச்சர் நீண்ட கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

தரம், தன்மை, மருந்து தொடர்பான சகல செயற்பாடுகளிலும் பிரச்சினைகள் ஏற்பட்டால் ஓர் அணியாக சகலரும் அதற்குப் பொறுப்புக் கூற வேண்டும் என்று குறிப்பிட்ட அமைச்சர், பொறுப்புடன் கூடியதாக செயற்படுதல் முக்கியமானதென வலியுறுத்தினார்.

தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை நாட்டில் காணப்படும் மருந்து உற்பத்திகளின் பாதுகாப்பு, தரம் மற்றும் வினைத்திறன் தொடர்பாக சம்பந்தப்பட்ட தரச்சான்றிதழ் ஊடாக பொதுமக்கள் சுகாதாரப் பாதுகாப்பை மேற்கொள்ளுதல் மற்றும் முன்னேற்றுவதற்காக முன்னணி செயற்பாடுகளை மேற்கொள்வதுடன், மருந்துகள், சுகாதாரப் பாதுகாப்பு உற்பத்தி மற்றும் அழகுக்கலைப் பொருட்கள் பாதுகாப்பு, தரம் மற்றும் வினைத்திறனை சான்றுப்படுத்துவதற்காக ஒழுங்குபடுத்தல், கண்காணித்தல் மற்றும் சாட்சி அடிப்படையிலான தீர்மானங்களை வழங்கும் நிறுவனமாகும் – என்றார்.

# கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக JICA உறுதி







இலங்கைக்கு தொடர்ச்சியான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதாக ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் (JICA) சிரேஷ்ட உப தலைவர் ஹாரா சொஹெய் (Hara Shohei) தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் (JICA) சிரேஷ்ட உப தலைவர் ஹாரா சொஹெய் ஆகியோருக்கிடையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (07) நடைபெற்ற சந்திப்பின்போதே இந்த விடயம் கலந்துரையாடப்பட்டது.

ஜப்பான் உதவியில் முன்னெடுக்கப்படும் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய வளாக அபிவிருத்தி தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது. JICA உதவியில் முன்னெடுக்கப்படும் அனைத்து வேலைத்திட்டங்களையும் விரைவில் நிறைவுசெய்ய திட்டமிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடன் மறுசீரமைப்பு செயற்பாட்டுக்கு ஜப்பான் இலங்கைக்கு வழங்கிய உதவி மற்றும் எதிர்காலத்தில் இலங்கைக்குத் தேவையான நிதியுதவிகளை வழங்க ஜயிக்கா நிறுவனம் எதிர்பார்ப்பதாகவும் ஹாரா சொஹெய் மேலும் தெரிவித்தார்.

இந்நாட்டில் முன்னெடுக்கப்படும் முன்னணி வேலைத்திட்டமான "Clean Sri Lanka" திட்டத்துக்குப் பாராட்டு தெரிவித்த சிரேஷ்ட உப தலைவர், அந்த வேலைத்திட்டத்துக்கு அவசியமான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதாகவும் உறுதியளித்தார்.

இந்நாட்டின் போக்குவரத்து கட்டமைப்பு மறுசீரமைப்பு மற்றும் நகர தூய்மையாக்கல் பணிகளுக்கு ஜயிக்கா நிறுவனத்தினூடாக பெற்றுக்கொள்ளக்கூடிய நிதி மற்றும் பௌதீக உதவிகள் தொடர்பிலும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

இந்நிகழ்வில் நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க மற்றும் இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் இசோமதா அகியோ, ஜப்பான் தூதரகத்தின் முதன்மைச் செயலாளர் கென்ஜி ஒஹாஷி, ஜயிக்கா நிறுவனத்தின் இலங்கைக்கான முதன்மைப் பிரதிநிதி டெட்சுயா யமடா, சிரேஷ்ட பிரதிநிதி யூரி இடே உள்ளிட்ட ஜப்பான் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

# மாத்தளை மாவட்டத்திலுள்ள மதஸ்தலங்களுக்கு இலவச மின்சாரம்



மாத்தளை மாவட்டத்திலுள்ள மதஸ்தலங்களுக்கு இலவச மின்சாரம் வழங்கும் சாத்தியம் குறித்து கலந்துரையாடப்பட்டு வருவதாக புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சர் கமகெதர திசாநாயக்க தெரிவித்தார்.

இந்தியக் கடன் உதவியின் கீழ் மாத்தளை மாவட்டத்திலுள்ள மதஸ்தலங்களுக்கு வழங்கப்பட்ட சூரிய மின்கலங்களை ஒரே இடத்தில் நிறுவி, அதிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை தேசிய கட்டமைப்புக்கு இணைத்து, மாத்தளை மாவட்டத்திலுள்ள விகாரைகள் உள்ளிட்ட மதஸ்தலங்களுக்கு இலவச மின்சாரம் வழங்கும் சாத்தியம் குறித்து கலந்துரையாடப்பட்டு வருகின்றது.

மாத்தளை மாவட்ட செயலாளர் தேஜானி திலகரத்னவின் ஒத்துழைப்புடன், இதற்கு ஏற்ற இடமொன்று ஏற்கனவே கண்டறியப்பட்டுள்ளதாக பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

இதன்படி, 200 யூனிட்டுகளுக்கு குறைவாக மின்சாரம் பயன்படுத்தும் விகாரைகளுக்கு இவ்வாறு இலவச மின்சாரம் வழங்கும் சாத்தியம் குறித்து விரிவாக ஆய்வுசெய்யப்பட்டு வருவதாகவும் 200 யூனிட்டுகளுக்கு மேல் மின்சாரம் பயன்படுத்தும் விகாரைகளுக்கு மாற்று முறையொன்றைப் பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

### ரயில்வே பாதுகாப்புப் பணியில்

# 100 பேருக்கு புதிய நியமனம்

இலங்கை ரயில்வே திணைக்களத்தின் பாதுகாப்புப் பணியிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக 100 பேருக்கு நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்னாயக்க தலைமையில் நேற்று முன்தினம் (06) நடைபெற்றது.

2019ஆம் ஆண்டு 303 வெற்றிடங்களுக்கு நடத்தப்பட்ட போட்டித் தேர்வில் முதலில் 178 பேர் தெரிவாகியிருந்தனர். இருப்பினும், இந்த நியமனங்கள் 2022இல் நிறுத்தப்பட்டன.

புதிய அமைச்சரவையின் அனுமதியின் பேரில், மீதமுள்ள 100 பேருக்கு இவ்வாறு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

# அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான நாடகப் போட்டிக்கான விண்ணப்பம் கோரல்

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான நாடகப் போட்டி 2024/2025ஆம் ஆண்டுக்கான (தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கல்வி உயர்கல்வி மற்றும் தொழில்கல்வி அமைச்சுடன் இணைந்து டவர் மண்டப அரங்க மன்றத்தினூடாக 30ஆவது தடவையாக ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான நாடகப் போட்டி 2024 /2025 (தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில்) நடைபெறவுள்ளது.

இப்போட்டிக்காக ஜனவரி 17ஆம் திகதி 2025 வரை நாட்டில் எந்த பிரதேச பாடசாலைகளும் விண்ணப்பிக்கலாம். இதற்கான விண்ணப்பப் படிவங்களை www.towerhall.lk மற்றும் www.moe.gov.lk மேற்குறிப்பிட்ட வலைத்தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலதிக விபரங்களுக்கு : ச.ஜெயபிரகாஷ் சர்மா

(தமிழ் நாடகப் பிரிவுக்கான பொறுப் பதிகாரி)

0777911425, 0112682134

# 48ஆவது சென்னை புத்தகக் கண்காட்சி





சென்னையில் ஆண்டுதோறும் மிக பிரமாண்டமாக நடைபெறும் 48ஆவது சென்னை புத்தகக் கண்காட்சி சென்னை நந்தனம் வை.எம்.சி.ஏ. மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதன்போது மணிமேகலை பிரசுரம் 48 நூல்களை வெளியிட்டு வைத்தது. இந்த நிகழ்வில் நீதிபதி ஸ்ரீமதி, ஐ.பி.எஸ். அதிகாரி சிவகுமார் மற்றும் புதிய வானம் மக்கள் நல அறக்கட்டளையின் சர்வதேச அமைப்பாளரும் தென்னிந்திய ஊடகவியலாளருமான காஞ்சிபுரம் தியாகராஜன், சென்னை தொலைக்காட்சி செய்தி வாசிப்பாளர் திருமதி ஜெய்ஸ்ரீ சுந்தர், எழுத்தாளர் மற்றும் பத்திரிகையாளர் தமிழ்வாணன், எழுத்தாளர் மணிமொழி செல்வன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# மன்னார் - வங்காலையில் படுகொலைசெய்யப்பட்ட மேரி பஸ்ரியன் அடிகளாரின் நினைவுதினம் அனுஷ்டிப்பு







(ஜோசப் நயன்)

மன்னார் - வங்காலையில் படுகொலை செய்யப்பட்ட அருட்பணி மேரி பஸ்ரியன் அடிகளாரின் 40ஆம் ஆண்டு நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

குறித்த நிகழ்வு நேற்று முன்தினம் (06) காலை வங்காலை புனித ஆனாள் ஆலயத்தில் இடம்பெற்றது.

இதன்போது மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் குருக்கள் இணைந்து இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுத்தனர்.

ஆலய வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது சிலைக்கு மாலை அனுவிக்கப்பட்டு சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து குருக்கள் மற்றும் கிராம மக்கள் சுடர் ஏற்றி மலர் தூவி படுகொலைசெய்யப்பட்ட அருட்தந்தை மற்றும் மக்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்காக குரல் கொடுத்தும் உயிரிழந்த மக்களின் உடல்களை மீட்டு அடக்கம் செய்யவும் பல்வேறு மனிதாபிமான பணிகளில் ஈடுபட்டுவந்த மன்னார் வங்காலை புனித ஆனாள் ஆலய பங்குத்தந்தை அருட்பணி மேரி பஸ்ரியன் அடிகளார் 1985ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 6ஆம் திகதி அரச படைகளால் படுகொலை செய்யப்பட்டார்.

மேலும், அவருடன் பொதுமக்களும் படுகொலைசெய்யப்பட்டனர். திருப்பலியின் போது அருட்தந்தையுடன் சேர்ந்து இன்னுயிர் நீத்த உறவுகளுக்கு தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத்தொடர்ந்து அருட்பணி மேரி பஸ்ரியன் அடிகளார் மற்றும் அவருடன் சேர்ந்து உயிர் நீத்தவர்களின் 40ஆவது ஆண்டு நினைவு தினத்தையொட்டி இரத்ததான நிகழ்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# பஸ்ஸூடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்து – ஒருவர் பலி



(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் -அநுராதபுரம் பிரதான வீதி சிராம்பியடி பகுதியில் நேற்று முன்தினம் (06) இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மற்றுமொருவர் படுகாயங்களுக்குள்ளான நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம் - கருவலகஸ்வெவ 8ஆம் கட்டைப் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரே விபத்தில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற தனியார் பஸ் வண்டியும் மோட்டார் சைக்கிளும் நேருக்குநேர் மோதியே இந்த விபத்துச் சம்பவித்ததாக பொலிஸார் குறிப்பிட்டனர். குறித்த விபத்தில் காயமடைந்த மற்றுமொருவர் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

உயிரிழந்தவரின் சடலம் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. விபத்து தொடர்பில் பஸ்ஸின் சாரதி பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார். குறித்த விபத்துச் சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# பாராளுமன்ற குழுக்களுக்கு புதிய உறுப்பினர்கள்

## இரண்டு பாராளுமன்ற ஒன்றியங்களை ஸ்தாபிப்பது தொடர்பிலும் சபாநாயகர் சபையில் அறிவிப்பு

பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் பணியாற்றுவதற்காக மூன்று உறுப்பினர்களின் பெயர்களையும் அரசாங்க நிதி பற்றிய குழுவில் பணியாற்றுவதற்காக நான்கு உறுப்பினர்களின் பெயர்களையும் சபாநாயகர் (வைத்திய கலாநிதி) ஜகத் விக்ரமரத்ன நேற்று (07) பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

அதற்கமைய, பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் பணியாற்றுவதற்காக பாராளுமன்ற உறுப்பினர்களான (பேராசிரியர்) அனில் ஜயந்த, கமகெதர திசாநாயக்க மற்றும் கயான் ஜனக ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

அத்துடன், பாராளுமன்ற நிலையியற் கட்டளை 121 இன் ஏற்பாடுகளுக்கமையவும் 2024 டிசம்பர் 06ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணைக்கமைய அரசாங்க நிதி பற்றிய குழுவில் பணியாற்றுவதற்காக சதுரங்க அபேசிங்ஹ, சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம், (கலாநிதி) கௌஷல்யா ஆரியரத்ன மற்றும் அர்கம் இல்யாஸ் ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்கள் பெயர் குறித்து நியமிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் அறிவித்தார்.

அத்துடன், இலங்கைக் காலநிலை பற்றிய பாராளுமன்ற ஒன்றியம் மற்றும் திறந்த பாராளுமன்ற முன்னெடுப்புக்கான பாராளுமன்ற ஒன்றியம் என்பவற்றை பத்தாவது பாராளுமன்றத்தில் மீண்டும் ஸ்தாபிப்பது தொடர்பான பிரேரணைக்கு 2024 டிசம்பர் 31ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் அங்கீகாரம் கிடைத்ததாகவும் சபாநாயகர் பாராளுமன்றத்தில் அறிவித்தார்.



# ஜெம் ஸ்ரீலங்கா-2025 மாபெரும் கண்காட்சி; ஜன. 10 வரை பெந்தொட்ட பீச் ஹோட்டலில்

GEM SRI LANKA



(பேருவளை பீ.எம் முக்தார்)

இலங்கையில் இரண்டாவது தடவையாகவும் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள சர்வதேச இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கண்காட்சி இன்று (08) முதல் 10ஆம் திகதிவரை பெந்தொட்ட சினமன் பீச் ஹோட்டலில் நடைபெறவுள்ளது. முதல் நாள் நிகழ்வில் பிரதம அதிதியாக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கலந்துகொள்ளவுள்ளார்.

பேருவளை, சீனன் கோட்டை இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் பூரண அனுசரணையுடன் இக்கண்காட்சி நடைபெறுகிறது.

சர்வதேச மற்றும் இலங்கையில் பிரபல முன்னணி இரத்தினக்கல் வர்த்தகர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர். இரத்தினக்கல் வர்த்தகத்தில் ஈடுபடும் உள்நாட்டு வெளிநாட்டு ஏற்றுமதி இறக்குமதியாளர்களும் இதில் கலந்துகொள்ளவரென எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் கடந்த வருடம் 2024 ஜனவரி மாதத்தில் இதே ஹோட்டலில் நடைபெற்ற முதலாவது கண்காட்சியிலும் உள்நாட்டு வெளிநாட்டு இரத்தினக்கல் வர்த்தகர்கள்,ஏற்றுமதி இறக்குமதியாளர்கள் மற்றும் துறை சார்ந்த பலரும் கலந்து கொண்ட நிலையில் எதிர்பார்க்கப்பட்ட வெற்றியையும் அடைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. அதனை விடவும் இரண்டாவது தடவையாக நடைபெறும் 2025ஆம் ஆண்டு கண்காட்சியில் அனுபவ வளர்ச்சி காரணமாக முன்னேற்றங்களையும் புதுப்புது முறைகளையும் கண்காட்சியில் எதிர்பார்க்கக் கூடியதாக இருக்கும்.

இலங்கையின் இரத்தினக்கல் வர்த்தகத்தை சர்வதேச மட்டத்துக்கு எடுத்துச் செல்வதை இலக்காகக் கொண்டு கடந்த வருடம் ஜெம் ஸ்ரீலங்கா 2024 சினமன் பெந்தொட்ட பீச் ஹோட்டலில் அறிமுகம் செய்யப்பட்டது. இன்று இரண்டாவது கண்காட்சியில் கால் பதிக்கிறது.

# புளிக்குத் தட்டுப்பாடு; கிலோ ரூ.2000க்கு விற்பனை



(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

கொழும்பில் 1கிலோ கிராம் புளி 2000 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்படுவதுடன் பழப் புளிக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுவதாகவும் கடை உரிமையாளர்கள் கூறுகின்றனர்.

ஆனால் வியாபாரிகள் பழப் புளியின் விலையைக் அதிகரிப்பதற்காக பதுக்கி வைத்திருப்பதாகவும் மக்கள் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

இதுபோன்று பல பொருட்களின் விலைகளை வர்த்தகர்கள் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கூடிய விலைக்கு விற்பனை செய்வதாகவும் குறிப்பாக பழுதான பொருட்களைக்கூட விற்பனை செய்வதாகவும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இது விடயத்தில் அரசு உடன் கவனம் செலுத்தி மக்களின் கஷ்டங்களை நீக்க நடவடிக்கை எடுக்குமாறும் நுகர்வோர் கோரிக்கை விடுக்கிள்றனர்.

# லயன்ஸ் கழகத்தால் வவுனியாவில் பல்வேறு உதவித் திட்டங்கள் வழங்கிவைப்பு



சர்வதேச லயன்ஸ் கழகத்தின் வவுனியா மாவட்ட லயன்ஸ் கழகத்தினால் (306 வி1) வவுனியாவில் பல்வேறு உதவித் திட்டங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

வவுனியா லயன்ஸ் கழகத் தலைவர் லயன் ரி.கே.இராசலிங்கம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பொங்கல் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன், வறுமைக் கோட்டுக்குட்பட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் உலர் உணவுப் பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

அதனடிப்படையில், கற்குழி பகுதியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற நிகழ்வின் போது தெரிவு செய்யப்பட்ட 25 குடும்பங்களுக்கு பொங்கல் பொருட்களும் மகாறம்பைக்குளம் அரசடி விநாயகர் ஆலயத்தில் இடம்பெற்ற நிகழ்வின் போது தெரிவு செய்யப்பட்ட 25 பெண் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளும் சிறிராமபுரம் பகுதியில் உள்ள 50 வறுமைக் கோட்டுக்குட்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இதேவேளை மாமடு, அட்டமஸ்கட விகாரையில் இடம்பெற்ற நிகழ்வின்போது புதிதாக லயன் கழகத்தில் இணைந்து கெண்ட 7 பேர் சின்னம் அணிவித்து கௌரவிக்கப்பட்டதுடன், 25 பேருக்கு பொங்கல் பொருட்களும் 15 பேருக்கு உலர் உணவுப் பொருட்களும் 25 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.





இந்நிகழ்வுகளில் சர்வதேச லயன்ஸ் கழக ஆளுநர் லயன் ராஜித்த ரொட்ரிகோ, வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், வட மாகாண சங்க நாயக்க தேரர் அட்டமஸ்கட கல்யாணி திஸ்ஸ தேரர், பிரிகேடியர் நிரோசன் பெரேரா, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், பொலிஸ் அதிகாரிகள், சட்டத்தரணி லயன் தயாபரன், லயன்ஸ் கழக உறுப்பினர்கள், பொது மக்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# ஸ்ரீ தலதா மாளிகையும் மக்கள் வங்கியும் ஒன்றிணைந்து ஆரம்பித்த Sisu Diriyata Bodu Saviyak புலமைப்பரிசில் திட்டம்







ஸ்ரீ தலதா மாளிகையும் மக்கள் வங்கியும் ஒன்றிணைந்து முன்னெடுக்கும் “Sisu Diriyata Bodu Saviyak” புலமைப்பரிசில் திட்டத்தின் மத்திய மாகாண புலமைப்பரிசில் வழங்கும் வைபவம் அண்மையில் கண்டி பள்ளேகல சர்வதேச பௌத்த பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

எமது நாட்டில் கல்வியில் சிறந்து விளங்குகின்ற, வறுமைக்கோட்டுக்குட்பட்ட சிறுவர்களுக்கு சிறந்த கல்வியைப் பெற்றுக்கொள்ள உதவுவதே இத்திட்டத்தின் பிரதான நோக்கம். இதன் கீழ், 2023ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கு 2024ஆம் ஆண்டு முதல் கிடைக்கும் வகையில், தரம் 11வரை புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன.

மக்கள் வங்கியும் ஸ்ரீதலதா மாளிகையும் ஒன்றிணைந்து ஸ்தாபித்துள்ள பௌத்த நலன்புரி நிதியத்தினூடாக பெருந்தொகையான சிறுவர்களுக்கு ஏற்கனவே புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், தற்போது இப்புதிய திட்டத்தின் கீழ், குறைந்த வருமானத்தை ஈட்டும் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு ஏற்கனவே கிடைக்கும் நன்மைகளை விடவும் கூடுதலான வரப்பிரசாதங்கள் கிடைக்கப்பெறுகின்றன.

அந்த வகையில், நாடெங்கிலும் 16 மாவட்டங்களில் 207 பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கும் வகையில் சுமார் 2,000 சிறுவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளதுடன், பிரதேச செயலகங்களினூடாக விசேட வகைப்பாட்டின் அடிப்படையில் புலமைப்பரிசில்களைப் பெற்றுக்கொள்ளவுள்ளவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

இதன்கீழ், இன,மத பேதமின்றி ஒவ்வொருவருக்கும் மாதாந்தம் 1,500 ரூபா வீதம் 6 வருடங்களுக்கு வழங்கப்படும். அதன் பிரகாரம் ஒவ்வொரு மாணவருக்கும் 108,000 ரூபா மொத்தத் தொகையாக கிடைக்கப்பெறும். 2023ல் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய சிறுவர்களுக்கு அடுத்த ஆறு ஆண்டுகளுக்கான புலமைப்பரிசில்கள் ஸ்ரீ தலதா மாளிகை மற்றும் மக்கள் வங்கியின் பணியாளர்களின் பங்களிப்புடன் வழங்கப்படும்.

அடுத்த ஆறு ஆண்டுகளில் மொத்தமாக 12,420 மாணவ,மாணவியர் இதன் கீழ் பயன்பெறவுள்ளனர். முதலாவது ஆண்டில் மொத்தமாக ரூபா 36 மில்லியன் தொகை புலமைப்பரிசில்களாக வழங்கப்படுவதுடன், அடுத்த ஆறு ஆண்டுகள் முடிவில் இவ்வாறு புலமைப்பரிசில்களாக வழங்கப்படும் மொத்த தொகை ரூபா 216 மில்லியனாக இருக்கும். இலங்கையின் வரலாற்றில் முதல்முறையாக இந்தளவு தொகை மாணவ,மாணவியரின் கல்வி மேம்பாட்டுக்காக வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் அஸ்கிரிய மகா விகாரையின் பிரதம தேரர், குருணாகல் ரஜ மகா விகாரையின் விகாராதிபதி ஆனமடுவ தம்மதச்சி தேரர், தலதா மாளிகை பிரதம தேரர், மஹியங்கனை ரஜமகா விகாராதிபதி கலாநிதி சங்கைக்குரிய உருளுவத்த தம்மரக்கித்த உள்ளிட்ட மகா சங்கத்தினர், ஸ்ரீ தலதா மாளிகை தியவதன நிலமே பிரதீப் நிலங்க தெல, கண்டி ஸ்ரீ மகா நாத மற்றும் பத்தினி தேவாலயங்களின் பஸ்நாயக்க நிலமேக்கள், மக்கள் வங்கியின் தலைவர் பேராசிரியர் நாரத பெர்னாண்டோ, பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் கிளைவ் பொன்சேகா உள்ளிட்ட உயர் அதிகாரிகள், கண்டி, மாத்தளை மாவட்ட செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், பெற்றோர் மற்றும் புலமைப்பரிசில்களைப் பெற்றுக்கொள்ளும் பெருந்தொகையான மாணவ, மாணவியர் உள்ளிட்டப் பலரும் கலந்துகொண்டனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (07.01.2025)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 180.1715 | 189.6307 |
| கனேடியன் டொலர் | 201.8033 | 210.6802 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 38.9263 | 41.4776 |
| யூரோ | 300.6571 | 313.2004 |
| ஜப்பான் யென் | 1.8317 | 1.9063 |
| சிங்கப்பூர் டொலர் | 211.5518 | 221.4144 |
| ஸ்ரேலிங் பவுன் | 363.1311 | 377.2124 |
| சுவிஸ் பிராங் | 318.8371 | 334.3468 |
| ஐ.அ. டொலர் | 291.3228 | 299.9224 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 782.3425 |
| குவைட் | குவைட் தினார் | 956.0175 |
| ஓமான் | ஓமான் ரியால் | 766.0456 |
| கட்டார் | கட்டார் ரியால் | 80.9029 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய ரியால் | 78.5395 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 80.2971 |











கொழும்பு சாஹிரா கல்லூரி இஸ்லாமியச் சங்கத்தின் வருடாந்த மீலாதுன் நபி தின நிகழ்வும் பரிசளிப்பு வைபவமும் கல்லூரி அப்துல் கஃபூர் மண்டபத்தில் அதிபர் ரிஸ்வி மரிக்கார் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

# திடீரென முளைத்த தொல்லியல் பதாகையால் வெருகல் பகுதியில் பரபரப்பு



**(சீனக்குடா செய்தியாளர்)**

வெருகல் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட திருகோணமலை – மட்டக்களப்பு பிரதான வீதியின் வட்டவான பகுதியில் திங்கட்கிழமை (06) மாலை தொல்லியல் திணைக்களத்தால் நடப்பட்டுள்ள பதாகையால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

‘ஒரு கிலோமீற்றர் வட்டவான தொல்லியல் நிலையம்’ எனக் குறிப்பிட்டு குறித்த பதாகை நடப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதி மக்கள் மத்தியில் இது பெரும் பரபரப்பையும் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

குறித்த பகுதியில் எவ்வளவு பகுதி தொல்லியலுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளது, அதற்காக வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதா, எதிர்காலத்தில் அப்பகுதியில் பௌத்த விகாரை வருமா என்ற கேள்விகளும் மக்கள் மத்தியில் எழுந்துள்ளன.

தொல்லியல் திணைக்களத்தின் குறித்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

கடந்த டிசம்பர் 28ஆம் திகதி இரவோடிரவாக குச்சவெளி பகுதியில் தொல்லியல் திணைக்களத்தினால் பதாகை நடப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த முதலாம் திகதியன்று மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# கல்முனை வடக்கில் டெங்கு நுளம்பு பெருகும் அபாயம்; சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருக்க வேண்டுகோள்

**(பாண்டிருப்பு செய்தியாளர்)**

கல்முனை வடக்கு பிராந்திய சுகாதாரப்பணிமனைக்குட்பட்ட கிராமங்களில் டெங்கு நுளம்புகள் பெருகும் அபாயம் இருப்பதால் பொதுமக்கள் தங்கள் சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்திருக்குமாறு கல்முனை வடக்கு பிராந்திய சுகாதாரப் பணிமனை வேண்டுகோள் விடுத்துள்ளது.

கல்முனை பிரதேசத்தில் கடந்த மாத இறுதியில் பெய்த மழையுடன் கூடிய காலநிலை யால் சில இடங்களில் நீர் தேங்கியுள்ளது. இதன் காரணமாக பிரதேசத்தில் டெங்கு நுளம்பு பெருகும் அபாயம் இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இங்குள்ள கல்முனை, பாண்டிருப்பு, பெரியநீலாவணை, சேனைக்குடியிருப்பு, துறைவந்திய மேடு, நற்பிட்டிமுனை, மணல்சேனை ஆகிய கிராமங்களில் டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் இனங்காணப்பட்டு அவற்றை ஒழிக்கும் செயற்பாட்டில் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் டெங்கு ஒழிப்புக் கட்டுப்பாட்டுச் செயலணியினர் ஈடுபட்டுள்ளனர்.

வீடு வீடாகச் சென்று டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் இனங்காணப்பட்டு வருவதுடன், சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருக்காதோருக்கெதிராக சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகின்றது.

மேலும், பாடசாலைகள், அரச அலுவலகங்கள, தனியார் கல்வி நிலையங்கள், பொது இடங்கள் ஆகியவற்றையும் தூய்மையாக வைத்திருக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். பொதுமக்கள் தொற்றுநோய்களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ளும் வகையில் செயற்படவேண்டுமென சுகாதார வைத்திய அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.



**கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் இரத்த வங்கியில் நிலவுகின்ற இரத்தத் தட்டுப்பாட்டைக் கருத்திற்கொண்டு அட்டாளைச்சேனை, சேனையூர் இளைஞர்கள் மற்றும் பாலமுனை பிறைட் இளைஞர் அமைப்புகள் ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்ட ‘உதிரம் கொடுப்போம் உயிர்களைக் காப்போம்’ எனும் தொனிப்பொருளிலான இரத்ததான நிகழ்வு சனிக்கிழமை(04) அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையில் இடம்பெற்றது. இதன்போது நூற்றுக்கணக்கான இளைஞர்கள் கலந்துகொண்டு இரத்ததானம் செய்தனர். இந்நிகழ்வில் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் இரத்த வங்கிக்குப் பொறுப்பான வைத்தியர் மருதராஜன், இளைஞர் சேவை அதிகாரி ஏ.எல்.எம்.இஸ்மாயில் உள்ளிட்ட வைத்தியர்கள், தாதி உத்தியோகத்தர்கள் என முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (அட்டாளைச்சேனை செய்தியாளர்)**







**மட்டக்களப்பு - செங்கலடி வாசன் பாலர் பாடசாலையில் கல்விகற்று தரம் ஒன்றுக்காக பாடசாலை செல்லவுள்ள மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழாவும் பிரியாவிடை நிகழ்வும் அதிபர் சுபாஸ் சந்திரநாதன் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (05) செங்கலடி மத்திய கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெற்றன. மட்டக்களப்பு கல்வி வலய பாலர் பாடசாலைப் பணிப்பாளர் ரீ.பத்மநாதன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டதுடன் கிழக்கு பல்கலைக்கழக முன்பள்ளி இணைப்பாளர் வீ.அழகுரெட்ணம், செங்கலடி மத்திய கல்லூரி அதிபர் கே.சுவர்ணேஸ்வரன், செங்கலடி பிரதேச செயலக சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஈ.நிரோசன் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்துகொண்டனர். (கல்லடி செய்தியாளர்)**

# கடந்த காலத்தில் ஏமாற்றப்பட்டோம்: இந்த ஆட்சியிலாவது நன்மை கிட்டவேண்டும்

## மட்டு. விவசாயிகள் கோரிக்கை

**(வீரமுனை செய்தியாளர்)**

‘‘அண்மையில் பாரிய வெள்ளம் ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து ஒரு குறுகிய வறட்சி ஏற்பட்டது. இதில் மிஞ்சிக்கிடந்த பயிர்கள் கடந்த வாரம் பெய்த மழையினால் கதிராகி அரிசியாகின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதிக்குப் பின்னர் அறுவடை செய்கின்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே, இதுவரைக்கும் எமது மாவட்டத்தில் இந்த நெல்லுக்கான விலை தீர்மானிக்கப்படவில்லை. கடந்த காலங்களில் ஆட்சியாளர்கள் எங்களை ஏமாற்றிக்கொண்டு சென்றார்கள். ஆகவே, இந்த ஆட்சியாளர்களை நம்பித்தான் இவ்வாறானதொரு நிலையை எட்டியிருக்கின்றோம்’’- என மட்டக்களப்பு தமிழ் விவசாய சமூகத்தின் இணைப்பாளர் சிவலிங்கம் பரமேஸ்வரநாதன் தெரிவித்தார்.

மட்டு. ஊடக அமையத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை(07) நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

‘‘நெல்லை 125 தொடக்கம் 135 ரூபா வரையாவது கொள்வனவு செய்தால் மாத்திரம் தான் எமது உற்பத்திச் செலவிலிருந்து ஓரளவேனும் எங்களுக்கான இலாபம் இல்லாவிட்டாலும் உற்பத்திச் செலவையாவது பெற்றுக்கொள்ள முடியும். மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 70 வீதமான மக்கள் விவசாயத்தை முன்னெடுத்திருக்கின்ற நிலையில், 02 இலட்சத்துக்குமதிகமான ஏக்கர் வேளாண்மை பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இருப்பினும், கடந்த ஆட்சியாளர்களை விட இந்த ஆட்சியில் நேற்றைய தினம் பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன, விவசாயிகள் தொடர்பாக நெல் அறுவடை தொடங்க முன்னரே அது தொடர்பான விலை நிர்ணயத்தை ஏற்படுத்தவேண்டுமென்பது, அவருடைய கருத்து தொட்டுச்சென்றிருக்கின்றது.

இருப்பினும், எங்களுடைய மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நெல் கொள்வனவு சந்தைப்படுத்தல் சபையிலே 08 களஞ்சியசாலைகள் இருக்கின்றன. இருப்பினும், தற்பொழுது 03 களஞ்சியசாலைகள் யானைத் தாக்கத்தால் சேதப்படுத்தப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, தும்பங்கேணி, கரடியனாறு மற்றும் புலிபாய்ந்தகல் போன்ற இந்த நெல் களஞ்சிய சாலைகள் சேதப்படுத்தப்பட்டிருக்கின்றன. இவற்றைப் புனரமைப்புச் செய்வதாயின் குறைந்தபட்சம் ஒன்றரை தொடக்கம் இரண்டு இலட்சம் ரூபா வரை தேவைப்படுகின்றது. இருப்பினும், அவை இன்னமும் புனரமைக்கப்படாதது ஒரு துர்ப்பாக்கிய நிலையாக நாங்கள் கருதுகின்றோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நெல் சந்தைப்படுத்தல் சபையைப் பொறுத்தவரையில் ஒரேயொரு நபரை வைத்துக்கொண்டுதான் இந்த நெல் கொள்வனவு சந்தைப்படுத்தல் சபையை இயக்குகின்றார்கள். இதனை நாங்கள் ஒரு சாபக்கேடாகவே கருதுகின்றோம்.

உண்மையிலேயே 70 வீதமான விவசாயிகள் இந்த மாவட்டத்தில் இருக்கின்ற நிலையில், இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட ஏக்கர்களில் வேளாண்மை செய்யப்படுகின்ற நிலையில் கிட்டத்தட்ட 42 பில்லியன் ரூபா நடைமுறையில் இருக்கின்றது மட்டக்களப்பு மாவட்டத்தில். இவ்வாறு நாட்டினுடைய மொத்த தேசிய உற்பத்திக்கு பெருமளவான பங்கு வகிக்கும் இந்த மாவட்டத்தில் நெல் சந்தைப்படுத்தல் சபையிலே குறிப்பிட்ட ஓரிரு உத்தியோகத்தர்களை வைத்துக்கொண்டு எவ்வாறு எமது நெல்லைக் கணிசமான அளவு சந்தைப்படுத்தக்கூடிய வாய்ப்பிருக்கின்றது என்பது கேள்விக்குறியாக இருக்கின்றது.

காரணம், ஏற்கனவே நான் கூறியது போன்று பிரதி அமைச்சரின் கருத்தை நாங்கள் நம்பியிருக்கின்றோம். இந்த ஆட்சியிலும் நாட்டிலே ஒரு மறுமலர்ச்சி ஏற்படுத்தக்கூடிய வகையில் அவர்களுடைய செயற்பாடுகள் காணப்படுகின்றன. அதேபோன்று, 80 தொடக்கம் 85 ஆயிரம் ஏக்கர் வரை வேளாண்மை செய்யப்படுகின்ற திருகோணமலை மாவட்டத்தில் பிராந்திய காரியாலயம் அமைக்கப்பட்டிருக்கின்றது. இந்த நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டு இலட்சம் ஏக்கர்கள் வேளாண்மை செய்கின்ற இந்த நிலையில் எந்தவொரு காரியாலயமும் நெல் கொள்வனவுக்காக அமைக்கப்படவில்லை. எனவே, இது மனவேதனையைத் தருகின்றது. தொடர்ந்து நமது மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளை ஏமாற்றுகின்ற நிலையாகவே நாங்கள் கடந்த ஆட்சியாளர்களைப் பார்த்திருக்கின்றோம். ஆகவே, இந்த ஆட்சியாளர்கள் தொடங்கியிருக்கின்ற இந்தப் புத்தாண்டிலாவது நல்லதொரு முடிவை விவசாயிகளுக்குத் தரவேண்டும்.

கடந்த காலங்களில் இடைத்தரகர்களின் ஊடாக செல்வந்தர்கள் வந்து அரசாங்கத்தின் விலை நிர்ணயத்துக்கப்பால் அவர்களுடைய தீர்மானத்தைக் கொண்டு எங்கள் மீது திணித்து ஏற்றுக்கொள்ள முடியாத விலையிலே அந்த நெல்லைக் கொள்வனவு செய்கின்றார்கள் மாபியாக்கள். எனவே, இதனால்தான் தற்பொழுது அரசாங்கம் கூட வெளிநாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்யக்கூடிய ஒரு துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றது. ஆகவே, இதனைக் கருத்திற்கொண்டு இவ்வாண்டுக்கான அறுவடையை மேற்கொள்ளுகின்ற சந்தர்ப்பத்தில் உடன் வெட்டுகின்ற நெல்லை சுமார் 110 தொடக்கம் 115 ரூபா வரையாவது கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டும். காய்ந்த நெல்லை 125 தொடக்கம் 135 ரூபா வரையாவது கொள்வனவு செய்தால் மாத்திரம்தான் எமது உற்பத்திச் செலவிலிருந்து ஓரளவேனும் எங்களுடைய வருமானத்தை இல்லாவிட்டாலும் உற்பத்திச் செலவையாவது பெற்றுக்கொள்ள முடியுமென்பதை இந்த இடத்தில் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

ஆகவே, இந்த நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற துர்ப்பாக்கிய நிலைக்கு விவசாயிகள் தள்ளப்படக்கூடாதென்பதற்காக அரசாங்கத்திடம் ஒரு பணிவான வேண்டுகோளை விடுத்துக் கொள்கின்றோம். அறுவடை ஆரம்பிக்க முன்னரே தற்பொழுது புத்தளம் மாவட்டத்தில் அறுவடை ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, அங்கு ஒரு விலைச்சூத்திரம் சொல்லப்பட்டிருக்கிறது. அது எந்தளவுக்கு நாட்டிலே நடைமுறைப்படுத்தப்படும் என்பது கேள்விக்குறியாக இருக்கின்றது. இருப்பினும், நாங்கள் குறிப்பிட்டது போன்று 110 தொடக்கம் 115 ரூபா உடன்வெட்டுக்கும் காய்ந்த நெல்லுக்கு 125 தொடக்கம் 135 ரூபாவாவது நமது மாவட்டத்தில் நடைமுறைக்கு வரும் வண்ணம் அரசாங்கம் இதனை முன்கூட்டியே விலைச் சூத்திரத்தை அறிமுகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம்’’ - என்றார்.



# கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது



(பாறுக் ஷிஹான்)

கேரள கஞ்சாவுடன் வீதியில் பயணம் செய்த 34 வயது சந்தேக நபரை கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

கல்முனை விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது ஒரு தொகுதி கேரள கஞ்சா மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவம் கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாதவன் வீதி பகுதியில் திங்கட்கிழமை (06) இரவு இடம்பெற்றது. கல்முனை - 03 சின்னத்தம்பி வீதியைச் சேர்ந்த 34 வயதுடைய சந்தேகநபரே இதன்போது கைது செய்யப்பட்டுள்ளார்.

சான்றுப் பொருட்கள் என்பன சட்டநடவடிக்கைக்காக கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் சந்தேக நபரும் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளார்.கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்நாயக்க தலைமையில் இது தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# கல்முனையில் பொலிஸார் தீவிர சோதனை நடவடிக்கை



(நற்பிட்டிமுனை செய்தியாளர்)

கிளீன் ஸ்ரீ லங்கா வேலைத்திட்டத்தின் கீழ் கல்முனைப் பொலிஸார் தீவிர சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கிணங்க வீதியில் பயணிக்கும் வாகனங்கள் நிறுத்தப்பட்டு சோதனைக் குட்படுத்தப்பட்டு வருகின்றன.

பதில் பொலிஸ் மா அதிபரின் உத்தரவுக்கிணங்க சாதாரண பொலிஸாரும் இச்சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். அலங்கரிக்கப்பட்ட தனியார் பஸ்கள், பாட்டுக் கச்சேரியோடு செல்லும் தனியார் பஸ்கள் என்பன நிறுத்தப்பட்டு மேற் குறித்த பொருட்களை அகற்றுமாறு பொலிஸாரால் கேட்கப்படுகின்றனர். தற்போது கல்முனையில் பஸ்கள், கார்கள், லொறிகள் வேகக்கட்டுப்பாடுகளை குறைத்தே பாதைகளில் செல்வதை காணமுடிகிறது. தினமும் வீதிக் கட்டுப்பாடுகளை மீறுவோருக்கு அதே இடத்தில் தண்டப்பண ரசீதுகளும் வழங்கப்படுகின்றன. பிரதான வீதிகளில் மட்டுமின்றி உள்ளூர் வீதிகளிலும் தலைக்கவசமின்றி செல்வோர் வசமாக பொலிஸாரிடம் மாட்டிக்கொள்கின்றனர்.

# மட்டக்களப்பு மாநகரை அழகுபடுத்தும் பணி ஆரம்பம்



(வாழைச்சேனை, ஆரையம்பதி செய்தியாளர்கள்)

மட்டக்களப்பு நகருக்கு வரும் சுற்றுலா பயணிகளை கவரும் நோக்குடன் மாநகரத்தை அழகுப் படுத்தும் வேலைத்திட்டம் மட்டக்களப்பு மாநகர ஆணை யாளர் எஸ்.தணஜெயன் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன் ஒரு கட்டமாக அண்மையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் வாவி பெருக்கெடுத்ததன் காரணமாக மட்டக்களப்பு - கொழும்பு பிரதான வீதியை அண்டிய பகுதிகள் பிளாஸ்ரிக் கழிவுகளால் நிரம்பி காணப்பட்டது.

இதனால் சுற்றாடல் அசுத்தமாக்கப்பட்டதுடன் இதனை அண்டிய பகுதிகளில் உள்ள நீர் நிலைகளில் உயிர்வாழும் மீன் இனங்கள் பாதிக்கப்பட்டதுடன் கால் நடைகளும் இவற்றை உண்பதால் அவைகளும் பாதிப்படைந்தன. இவற்றைக் கருத்தில் கொண்டு மட்டக்களப்பு மாநகர சபையினால் சுத்தப்படுத்தும் பாரிய சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இந்நிகழ்வில் மாநகர சபையின் ஊழியர்கள் மற்றும் சுகாதார தரப்பினர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அனுமதிப்பத்திரமின்றி மணல் கடத்தியவர் கைது

(பாறுக் ஷிஹான்)

அனுமதிப்பத்திரம் இல்லாமல் சட்டவிரோதமாக உழவு இயந்திரத்தில் மணல் கடத்திய சந்தேகநபரை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மல்வத்தை பகுதியில் திங்கட்கிழமை(06) இடம்பெற்றுள்ளது.

சம்மாந்துறை பொலிஸ் ஊழல் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைக்கத்த தகவலின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொண்ட பொலிஸார் அனுமதிப்பத்திரம் இல்லாமல் சட்டவிரோதமாக மணல் கடத்திய சந்தேகநபரை கைது செய்ததுடன் மணல் கடத்துவதற்கு பயன்படுத்தப்பட்ட உழவு இயந்திரத்தையும் கைப்பற்றியுள்ளனர்.

இதன்போது 28 வயது மதிக்கத்தக்க சந்தேகநபரே கைது செய்யப்பட்டார். மல்வத்தை பகுதியைச் சேர்ந்த கைதான சந்தேக நபரிடமிருந்து மணல் மீட்கப்பட்டிருப்பதுடன் சந்தேகநபர் மற்றும் உழவு இயந்திரம் உள்ளிட்ட சான்றுப்பொருட்களை சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் குறித்த சோதனை நடவடிக்கையானது சம்மாந்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஏ.எம்.நௌபரின் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய ஊழல் தடுப்புப்பிரிவு பொறுப்பதிகாரி ஆர்.எம்.ரணதுங்க தலைமையில் பொலிஸ் குழுவினர் முன்னெடுத்திருந்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சம்மாந்துறையில் 5000 ரூபா போலி நாணயத்தாளுடன் பெண் ஒருவர் கைது

(திகாமடுல்ல செய்தியாளர்)

ஐயாயிரம் ரூபா போலி நாணயத்தாளுடன் நகை மீட்கச்சென்ற சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர். அத்தோடு நகையை மீட்பதற்கு கொண்டுவரப்பட்ட 5000 ரூபா போலி நாணயத்தாளையும் சம்மாந்துறை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இச்சம்பவம் திங்கட்கிழமை(06)முற்பகல் 11.30 மணியளவில் நடைபெற்றது.

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்முனை - அம்பாறை பிரதான வீதியில் அமைந்துள்ள தனியார் வங்கி ஒன்றில் போலி நாணயத்தாளுடன் நகையை மீட்கச்சென்றவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். அத்தோடு நகையை மீட்பதற்காக கொண்டுவரப்பட்ட 5000 ரூபா போலி நாணயத்தாளையும் கைப்பற்றியுள்ளனர்.

சம்மாந்துறை பொலிஸாருக்கு வங்கியில் இருந்து கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையிலேயே மேற்படி நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டனர். குறித்த வங்கியில் நகையை மீட்பதற்கு நாணயத்தாள்களை பரிசோதனை செய்தபோது போலி நாணயத்தாள் இருப்பது தெரியவந்துள்ளது.

சம்மாந்துறை பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய சந்தேகநபரே 5000 ரூபா போலி நாணயத்தாளுடன் கைது செய்யப்பட்டுள்ளார். இவ்வாறு கைதான சந்தேக நபரிடமிருந்து போலி நாணயத்தாள் மீட்கப்பட்டதுடன், சந்தேக நபரும் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளதுடன் சான்றுப்பொருட்களும் சட்ட நடவடிக்கைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளன.குறித்த சோதனை நடவடிக்கை சம்மாந்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஏ.எம்.நௌபரின் வழிகாட்டுதலில் இடம்பெற்றது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# வாய்ச்சுகாதாரப் பிரிவுகளின் சேவையை மேம்படுத்த மருத்துவ உபகரணம் வழங்கல்



(ஒலுவில் செய்தியாளர்)

கல்முனைப் பிராந்திய வைத்தியசாலைகள், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள், பாடசாலைகள் ஆகியவற்றின் வாய்ச் சுகாதார பிரிவுகளின் சேவையை மேம்படுத்தும் பொருட்டு, குறித்த பிரிவுகளுக்கு பற்சிகிச்சை மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டன.

குறித்த உபகரணங்களை கையளிக்கும் நிகழ்வு திங்கட்கிழமை (06) கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது மருதமுனை, அட்டாளைச்சேனை, இறக்காமம், அன்னமலை மற்றும் ஒலுவில் ஆகிய பிரதேச வைத்தியசாலைகளின் வாய்ச் சுகாதார பிரிவுகளுக்கும் பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மற்றும் கல்முனை மஹ்மூத் பெண்கள் கல்லூரி, கல்முனை ஸாஹிறா கல்லூரி என்பவற்றின் பற்சிகிச்சை நிலையங்களுக்குமே குறித்த மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிராந்திய வாய்ச் சுகாதார பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி யூ.ஹபீப் முஹம்மட் உள்ளிட்ட பிரிவுத் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

# கிண்ணையடி காட்டுப் பிரதேசத்தில் தேடுதல் வேட்டை

## 100லீ. கசிப்பு, 30லீ. கோடா, 10 வெற்று பரல்கள் கைப்பற்றல்



(வாழைச்சேனை மேலதிக செய்தியாளர்)

ஜனாதிபதியின் கிளின் ஸ்ரீலங்கா வேலைத்திட்டத்தின் கீழ் சட்டவிரோத கசிப்பு உற்பத்தியை தடுக்கும் வகையில் வாழைச்சேனை கிண்ணையடி காட்டு பிரதேசத்தில் தேடுதல் வேட்டை திங்கட்கிழமை (06) இரவு மேற்கொள்ளப்பட்டது.

கிராமசேவகர் க.கிருஷ்ணகாந்தின் வழிகாட்டலில் பிரதேச பொலிஸாரின் ஒத்துழைப்புடன் பிரதேச மில்லர் விளையாட்டுக் கழக இளைஞர்கள் மற்றும் கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் இணைந்து இவ் அதிரடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது 100 லீற்றர் கசிப்பு, 30 லீற்றர் கோடா, 10 வெற்று பரல்கள் மற்றும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் பொருட்கள் என்பன கைப்பற்றப்பட்டு அவை பொதுமக்கள் முன்னிலையில் வாழைச்சேனை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

தகவல் அறிந்த சந்தேக நபர்கள் தப்பி ஓடிவிட்டனர். இதன்போது எவரும் கைது செய்யப்படவில்லை. அவர்களை கைது செய்யும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நீண்ட காலமாக கிண்ணையடி கிராமத்துக்கு அப்பாற்பட்ட ஆற்றினை அண்மித்த பிரதேசங்களில் இவ் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நடவடிக்கை இடம்பெற்று வந்தது. இதனை தடுக்க எவரும் துணிந்து முன்வராத நிலைமை காணப்பட்டதுடன் பிரதேசத்தில் கலாசார சீரழிவு, இளைஞர்கள் போதைக்கு அடிமையாதல், குடும்ப வன்முறை, வாழ்வாதாரம் பாதிக்கப்படல் போன்ற பல்வேறு விடயங்களால் பிரதேச மக்கள் பல்வேறு இன்னல்களை அனுபவித்து வந்தனர். அத்துடன் கசிப்பு விற்பனை நடவடிக்கை இங்கிருந்து மாவட்டத்தின் பல்வேறு இடங்களுக்கு வியாபித்திருந்தது. இதனை கவனத்தில் கொண்டு அதனை முற்றாக ஒழிக்க வேண்டும் என்ற முயற்சியில் தற்போது மேற்படி குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.

இந்நடவடிக்கையை தொடர்ந்து ஒரு வாரத்துக்கு பிரதேச மக்களின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கவுள்ளதாக மில்லர் விளையாட்டு கழகத்தின் தலைவர் வ.வன்னியசேகரம் தெரிவித்தார்.

இதேவேளை இந்நடவடிக்கையின்போது தனக்கோ அல்லது ஏனையோர்களுக்கோ ஏதும் உயிர் அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் சம்பவங்கள் இடம்பெற்றால் பொலிஸார் அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் மேலும் கேட்டுக்கொண்டார்.



**திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசனின் மக்கள் சந்திப்பு திங்கட்கிழமை(06) நடைபெற்றது. இச்சந்திப்பின்போது மாவட்டத்தில் பரவலாகக் காணப்படும் கல்வி, சுகாதாரம், மருத்துவம், சுய தொழில், அபிவிருத்தி முதலிய பிரச்சினைகள் தொடர்பில் மக்கள் எம்.பியிடம் தெரிவித்ததையடுத்து உரிய நிறுவனங்களிடமிருந்து மக்களுக்கு தீர்வைப் பெற்றுத் தருவதாக உறுதியளித்தார். குறித்த பொது மக்கள் சந்திப்பானது ஒவ்வொரு மாதமும் பாராளுமன்ற அமர்வு தவிர்ந்த தினங்களில் இடம் பெறும் என தெரிவிக்கப்பட்டது. (கிண்ணியா செய்தியாளர்)**

# கிரான் பிரதேச மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அதிகாரிகள் கள விஜயம்



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட செயலக அதிகாரிகள் கிரான் பிரதேச செயலக பிரிவில் வசிக்கும் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான கள விஜயம் ஒன்றினை மேற்கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரனின் வழிகாட்டுதலின் கீழ் உதவி மாவட்ட செயலாளர் ஜி.பிரணவன் தலைமையிலான குழுவினர் மக்களின் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

கிரான் பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளர் திருமதி லோஜினி விவேகானந்தராஜ்ஜின் பங்குபற்றுதலுடன், கூலாக்காடு, முருக்கன்தீவு மற்றும் பிரம்படிதீவு ஆகிய கிராமங்களை உள்ளடக்கிய கிராமங்களுக்கு களவிஜயம் மேற்கொண்டு அங்குள்ள மக்களின் அடிப்படை பிரச்சினைகள் பற்றியும் தீர்க்கப்படாத குறைபாடுகள் பற்றியும் அவற்றை செயற்படுத்துவதற்கான வேலைத் திட்டங்கள் எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது குறித்தும் ஆராயப்பட்டது.

அத்தோடு கிராமிய மட்ட சிறுவர் கழக உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் வரவழைக்கப்பட்டு அவர்கள் எதிர்நோக்குகின்ற குறைபாடுகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

மேலும் குறிப்பிட்ட பிரதேசத்தில் போக்குவரத்து வசதியின்மை, காட்டு யானைகளின் அச்சுறுத்தல் மற்றும் பொதுமக்கள் ஆற்றைக் கடப்பதற்கான வழிமுறைகள், படகு மூலம் போக்குவரத்தை மேற்கொள்வதால் முகங்கொடுக்கின்ற இன்னல்கள் பற்றியும் இதன்போது ஆராயப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

தரம் ஒன்பதுக்கு பிறகான கல்வி செயற்பாடுகளை தொடர்வதற்கு பிள்ளைகள் முகம் கொடுக்கும் சிக்கல்கள், வெள்ளநீர் கிராமங்களுக்குள் உட்புகுவதன் பின்னரான சுகாதார பாதுகாப்பு தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. இவற்றைத் தொடர்ந்து முருகன்தீவு கிராம பாடசாலை மாணவர்களுக்கு தெளிவூட்டல் மற்றும் விழிப்புணர்வு வேலைத்திட்டங்களும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# காட்டுயானைகள் ஊடுருவலை தடுக்க பாதுகாப்பு வேலி அமைத்துத் தருக

## வவுணதீவு பிரதேச மக்கள் கோரிக்கை



(மட்டக்களப்பு செய்தியாளர்)

மட்டக்களப்பு, வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குள் நுழையும் காட்டு யானைகளை கட்டுப்படுத்த யானைப் பாதுகாப்பு வேலி அமைக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கடந்த 10 ஆண்டுகளாக காட்டு யானைகளின் தொல்லைகளுக்கு வவுணதீவு மக்கள் முகம் கொடுத்து வருகின்றனர். இதனால் அப்பகுதியில் செய்கை பண்ணப்படுகின்ற விவசாய செய்கைகளையும் யானைகள் துவம்சம் செய்து வருகின்றன. இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை புல்லுமலை, கித்தூள் மற்றும் உன்னிச்சை போன்ற விவசாயக் கிராமங்களுக்குள் காட்டு யானைகள் புகுந்து அங்குள்ள தென்னை, வாழை, நெல், சோளன் போன்ற பயிர்ச் செய்கைகளை சேதப்படுத்தியுள்ளன.

பெருந்தொகை செலவுசெய்து விவசாயத்தை மேற்கொண்டால் அறுவடையாகும்போது ஒரேநாளில் காட்டுயானைக்கூட்டம் வந்து அழித்து, துவம்சம் செய்துவிட்டு போகின்றன.

எனவே கிராமங்களுககுள் யானைகள் நுழையாமல் தடுக்க யானை பாதுகாப்பு மின்சார வேலிகளை அமைக்குமாறு அப்பகுதி மக்கள் அரசாங்கத்திடம் வேண்டுகோள் முன்வைக்கின்றனர்.

# வவுனியா பல்கலைக்கழக வளாகத்தை மன்னாரில் அமைக்க 2025 வரவு – செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்க வேண்டும்

## வன்னி மாவட்ட எம்.பி. செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை

''வவுனியா பல்கலைக்கழக வளாகம் ஒன்றினை மன்னாரில் அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கான நிதியை எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்க வேண்டும்'' என வன்னி மாவட்ட எம்.பியான செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (07) நடைபெற்ற வருட ஆரம்ப நிதி நிலைவரம் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றும்போதே இவ்வாறு கோரிக்கை விடுத்த அவர் மேலும் உரையாற்றுகையில்,

பயங்கரவாதத் தடைச்சட்டம் முழுமையாக ஒழிக்கப்பட வேண்டும். அப்போதுதான் வெளிநாட்டிலுள்ள இலங்கையர்கள் தங்களுடைய முதலீடுகளை துணிச்சலாக இங்கு செய்வார்கள். முதலீடுகளை செய்தவர்கள் மீது பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துவதால் நீதிமன்றம் செல்கின்ற வாய்ப்புகள் கூடுதலாக இருக்கின்றன. அவர்கள் கூடுதலான நிதியை முதலீடு செய்ய அனுமதி கொடுத்துவிட்டு பின்னர் பயங்கரவாத தடைச்சட்டத்தின் மூலம் தடைசெய்கின்ற, அவர்களை கைதுசெய்கின்ற நிலைமை இருப்பதால் வெளிநாடுகளிலுள்ள இலங்கை



முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடுகளை செய்யும் வாய்ப்புகள் இருக்காது.

இதேவேளை, மன்னார் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் வவுனியா பல்கலைக்கழக வளாகத்தினை மன்னாரில் தொடர வேண்டும் என்பது ஒன்று. இதுதொடர்பில் ஏற்கனவே இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன. எனவே இந்த வளாகத்தினை அமைக்க எதிர்வரும் வரவு - செலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

அடுத்ததாக முப்படைகளினால் ஆக்கிரமிக்கப் பட்டுள்ள மக்களின் நிலங்களை விடுவிப்பதாக ஜனாதிபதி வாக்குறுதியளித்துள்ளார். வன்னியில் தான் கூடுதலான மக்களின் நிலங்கள் முப்படைகளின் ஆக்கிரமிப்பில் உள்ளன. அவற்றை உடனடியாக விடுவிக்க வேண்டும். இதுதொடர்பில் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் பேசியுள்ளோம்.

மன்னாரை எடுத்துக்கொண்டால் முள்ளிக்குளம், தலைமன்னார் பியர், மன்னார் போன்ற இடங்களை உதாரணமாக கூறமுடியும். கிழக்கில் வாழைச்சேனையில் மக்களின் விவசாயக் காணிகள் கொடுக்கப்பட்டுள்ளன. இதனை பாராட்டுகின்றேன்.

வன இலாகா, தொல்லியல் திணைக்களம் போன்றவையே மக்களின் காணிகளில் ஆதிக்கம் செலுத்துகின்றன. இவர்களினால் தொடர்ந்தும் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இந்தியாவிலுள்ள ஈழத்தமிழர்கள் இலங்கைத் திரும்ப விரும்பும் நிலையில், அவர்கள் கடவுச்சீட்டுகளை பெறுவதில் சிக்கல் உள்ளது. எனவே அவர்களை கப்பலில் அழைத்து வரும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றார்.

# பாராளுமன்ற உத்தியோகத்தர்களின் விடுமுறைக் கொடுப்பனவை வழங்குக

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்து

பாராளுமன்ற உத்தியோகத்தர்களின் விடுமுறைக் கொடுப்பனவை அவர்களுக்கு பெற்றுக்கொடுக்க வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கோரிக்கை விடுத்தார்.

2025ஆம் ஆண்டின் முதல் பாராளுமன்ற அமர்வு நேற்று (07) ஆரம்பமான நிலையில், உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் பேசுகையில்,

பாராளுமன்றத்தின் பணியை திறம்பட உறுதிப்படுத்த சகல துறைகளிலும் அர்ப்பணிப்புள்ள நல்ல பணிக்குழாம் இங்கு காணப்படுகிறது. ஜோசப் மைக்கல் பெரேரா காலத்திலிருந்து அவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த விடுமுறை கொடுப்பனவுத் திட்டத்தை அவ்வாறே நடைமுறைப்படுத்துவதற்கு ஊழியர் ஆலோசனைக் குழுவில் அனுமதியைப் பெற்றுக்கொண்டோம். அந்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரம் சபாநாயகருக்கு காணப்படுகிறது.



சமீபகாலமாக பாராளுமன்ற அதிகாரிகள் சார்பில் நல்ல பல தீர்மானங்களை எடுத்தீர்கள். அதற்கு நாங்கள் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். இந்த முற்போக்கான பயணத்தில் முன்சென்று ஊழியர் ஆலோசனைக் குழுவில் அன்று நாம் எடுத்த தீர்மானத்தை, அதாவது 21 ஆண்டுகளாக தொடர்ந்து நடைமுறையில் உள்ள விடுமுறைக் கொடுப்பனவுத் திட்டத்தை புத்தாண்டு முதல் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

# 2025இல் முதன்முறையாகக் கூடிய அரசாங்க நிதி பற்றிய குழு

அரசாங்க நிதி பற்றிய குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தலைமையில் நேற்று முன்தினம் (06) கூடியது.

நிலையியற் கட்டளைகளுக்கு அமைய எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா, அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவராக தெரிவுக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டிருந்தார்.

குழுவின் தலைவர் என்ற ரீதியில் இங்கு கருத்துத் தெரிவித்த அவர், குழுவின் செயற்பாடுகள் குறித்து விளக்கமளித்ததுடன், அரசாங்க நிதி பற்றிய குழுவினால் கடந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் சுட்டிக்காட்டினார். இதனைத் தொடர்ந்து குழுவின் உறுப்பினர்கள் மற்றும் வருகை தந்திருந்த அதிகாரிகளுடன்





கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன உள்ளிட்ட அமைச்சின் அதிகாரிகள் மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க ஆகியோர் "மத்திய ஆண்டு நிதி நிலை அறிக்கை 2024" மற்றும் அண்மைய பொருளாதார முன்னேற்றங்கள் பற்றி விளக்கமளித்தனர். இதன் பின்னர் மத்திய ஆண்டு நிதி நிலை அறிக்கை 2024இற்கு குழு அனுமதி வழங்கியது.

எல்.எம்.டி. சஞ்சிகையினால் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் "வருடத்தின் சிறந்த இலங்கையர்" எனப் பெயரிடப்பட்டமை குறித்து குழு பாராட்டைத் தெரிவித்ததுடன், பொருளாதார மீட்சிக்கு அதிகாரிகள் எடுத்த முயற்சிகளையும் அங்கீகரித்தது.

தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் 2025ஆம் ஆண்டுக்கான வருடாந்த பணித்திட்டம் குறித்து கவனம் செலுத்திய அரசாங்க நிதி பற்றிய குழு, தேவை ஏற்படும் பட்சத்தில் குழுவினால் மீண்டும் மதிப்பாய்வு செய்யப்படும் என்பதன் அடிப்படையில் இதற்கு அங்கீகாரம் வழங்கியது.

குழுவின் உறுப்பினர்களான, பிரதி அமைச்சர்களான ஹர்ஷன சூரியப்பெரும, சதுரங்க அபேசிங்க, பாராளுமன்ற உறுப்பினர்களான ரவி கருணாநாயக்க, ஹர்ஷன ராஜகருணா, சாணக்கியன் இராசமாணிக்கம், கலாநிதி கௌசல்யா ஆரியரத்ன, அக்ரம் இலியாஸ், நிமல் பலிஹேன, விஜேசிறி பஸ்நாயக்க, திலின சமரக்கோன், லக்மாலி ஹேமச்சந்திர மற்றும் பாராளுமன்றத்தின் உதவிச் செயலாளர் நாயகம் ஹன்ச அபேரத்ன ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

# எரிபொருள் இறக்குமதி தரகுப்பணம் இன்றும் காஞ்சனவுக்கா செல்கிறது?

## கேள்வியெழுப்பினார் மரிக்கார் எம்.பி.

எரிபொருள் இறக்குமதி தரகுப்பணம் இன்றும் முன்னாள் அமைச்சர் காஞ்சன விஜேசேகரவுக்கா செல்கிறது என ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பியான எஸ்.எம். மரிக்கார் கேள்வியெழுப்பியதுடன், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வரிக் கொள்கையையே தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவும் முன்னெடுக்கிறார் என்றார்.

பாராளுமன்றத்தில் நேற்று (07) நடைபெற்ற வருட ஆரம்ப நிதி நிலைவரம் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும்போது இவ்வாறு கேள்வி எழுப்பிய அவர், மேலும் உரையாற்றுகையில்,

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க ஆட்சிக்கு வருவதற்கு பல வாக்குறுதிகளை வழங்கினார். ஆனால் இன்று அனைத்து வாக்குறுதிகளையும் மறந்து விட்டார். ஜனாதிபதி 2024.08.19ஆம் திகதி கல்கமுவ பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில், எரிபொருள் மீது முறையற்ற வகையில் வரி விதிக்கப்பட்டுள்ளது. இறக்குமதிக்கு மேலதிகமாக 50 ரூபா வரி விதிக்கப்பட்டுள்ளது. இதனால் தான் எரிபொருளின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.



ஆகவே நாம் ஆட்சிக்கு வந்தவுடன் இந்த 50 ரூபா வரியை நீக்குவோம் என உறுதியளித்தார்.

அதன்பின்னர் ஜனாதிபதி ஆட்சிக்கு வந்து 100 நாட்கள் நிறைவடைந்துள்ள நிலையிலும் வழங்கிய வாக்குறுதிகள் ஏதும் நிறைவேற்றப்படவில்லை. எரிபொருள் இறக்குமதியின் தரகுப்பணம் முன்னாள் அமைச்சர் காஞ்சன விஜேசேகரவுக்கு செல்வதாக குற்றஞ் சாட்டப்பட்டது. இன்றும் அந்த தரகுப் பணம் காஞ்சன விஜேசேகரவுக்கா செல்கிறது?

வரிகளை குறைப்பதாக குறிப்பிடப்பட்டது. ஆனால் தற்போது சிரேஷ்ட பிரஜைகளின் சேமிப்பிலும் வரி அறவிடப்படுகிறது. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வரிக் கொள்கையையே தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க முன்னெடுக்கிறார் என்றார்.

# கேரள கஞ்சாவுடன் பியகமயில் ஒருவர் கைது

*(ஹனபி எம் தாஸீம்)*

கொழும்பு, பொரளை பிரதேசத்திலிருந்து கொண்டு வரப்பட்டு பியகம மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளுக்கு கேரள கஞ்சாவை விநியோகித்த நபர் ஒருவர் நேற்று முன்தினம் (06) இரவு பியகம, சியாம்பலாப்பே சந்தியில் வைத்து பியகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது, சுமார் ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு கிலோ கேரள கஞ்சாவும் 150 விளையாட்டுப் பொருட்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

களனி பிரதேசத்தைச் சேர்ந்த சந்தேக நபர் (வயது 40) மஹர நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்படவுள்ளார்.

பியகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் அஜித் விஜேசிங்கவின் பணிப்புரையின் பிரகாரம் குற்றத்தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி பிரதி பொலிஸ் பரிசோதகர் டி.பி.எஸ்.எல். முத்துக்குமாரண, பொலிஸ் கான்ஸ்டபிள்களான சஞ்சீவ, கருணாதிலக, திலகரட்ன, லஹிரு, சஞ்சுலா ஆகியோர் இச்சுற்றிவளைப்பில் கலந்துகொண்டனர்.

---

**அமைச்சரவை...**
(04 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

**10. இலங்கை புத்தாக்குநர் ஆணைக் குழு ஆணையாளர் மற்றும் உதவி ஆணையாளர்களை நியமித்தல்**

1979ஆம் ஆண்டின் 53ஆம் இலக்க இலங்கை புத்தாக்குநர் ஊக்குவிப்புச் சட்டத்தின் 4(1) பிரிவுக்கமைய, இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழு, அமைச்சர் அவர்களின் விதந்துரைக்கமைய, அமைச்சரவையால் நியமிக்கப்படுகின்ற ஆணையாளர் ஒருவர் மற்றும் உதவி ஆணையாளர்கள் இருவருடன் கூடியதாக இருத்தல் வேண்டும். தற்போது இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவின் அனைத்து உறுப்பினர்களும் இராஜினாமா செய்துள்ளதுடன், வெற்றிடமாகவுள்ள ஆணையாளர் ஒருவர் மற்றும் உதவி ஆணையாளர்கள் இருவரை நியமிக்க வேண்டியுள்ளது.

அதற்கமைய, இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழு ஆணையாளராக பேராசிரியர் வெறஞ்ச கருணாரத்னவை நியமிப்பதற்கும் குறித்த ஆணைக்குழுவின் உதவி ஆணையாளர்களாக சிரேஷ்ட பேராசிரியர் ஆர்.எம்.ஜீ.ராஜபக்ஷவையும் மருத்துவர் என்.ஆர்.எஸ்.ஆரியரத்னவையும் நியமிப்பதற்கு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**11. கடலோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு பீ.பீ.டர்னி பிரதீப் குமாரவை நியமித்தல்**

கடலோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு சிந்தாந்த ரீதியாகவும் நடைமுறை ரீதியாகவும் அறிவுபடைத்த சிரேஷ்ட அதிகாரி ஒருவரை நியமிக்க வேண்டியுள்ளது. அதற்காக, ருஹுணு பல்கலைக்கழகத்தின் சமுத்திரவியல் மற்றும் சமுத்திரப் பூகோளவியல் கற்கைகள் துறையின் சமுத்திரவியல் தொடர்பான பேராசிரியர் பீ.பீ.டர்னி பிரதீப் குமார பொருத்தமானவரெனக் கண்டறியப்பட்டுள்ளது. அதற்கிணங்க, இரண்டு ஆண்டுகளுக்கு கடலோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு நியமிப்பதற்கு சுற்றாடல் அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**12. இலங்கை அரசு 'ஒரே சீனாக் கொள்கையை' தொடர்ச்சியாகக் கடைப்பிடித்தல்**

இலங்கை அரசு 'ஒரே சீனாக் கொள்கையை' தொடர்ச்சியாகக் கடைப்பிடித்து வந்துள்ளதுடன், அதன்மூலம் சட்டரீதியான சீனாவாக மக்கள் சீனக் குடியரசை மாத்திரம் ஏற்றுக் கொள்வதுடன், தாய்வான் சீனாவின் ஒரு மாநிலம் மாத்திரமே என ஏற்றுக் கொள்வதெனும் நிலைப்பாடாகும். இலங்கை அரசு குறித்த கொள்கையை அவ்வகையிலேயே தொடர்ந்தும் கடைப்பிடித்து அதற்கிணங்க நடவடிக்கைகளை மேற்கொள்வதாக வெளிவிவகாரங்கள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**13. சீனா ஊடகக் குழுமம் (China Media Group) மற்றும் இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகத்துக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடல்**

இரு தரப்பினர்களுக்கிடையில் ஏற்படுத்திக் கொண்டுள்ள ஒத்துழைப்புக்களின் அடிப்படையில் சீனா ஊடகக் குழுமத்தின் நவீன தொழில்நுட்பம் மற்றும் நிபுணத்துவ அறிவைப் பயன்படுத்தி இலங்கை சீனாவின் சுற்றுலாப் பயணிகளுக்கான முதன்மையான சுற்றுலா மையமாக நிலைப்படுத்தும் நோக்கில் சீனா ஊடகக் குழுமம் (China Media Group) மற்றும் இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகத்துக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக வெளிவிவகாரங்கள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**14. சீன சந்தையில் கோழி இறைச்சி ஏற்றுமதி தொடர்பான நடவடிக்கை முறைகள் (Protocol) இற்கான ஒப்பந்தத்தில் கையொப்பமிடல்**

சீனா சுங்கக் கட்டுப்பாட்டு நிறுவனத்தின் இடையீட்டில் இலங்கையிலிருந்து கோழி இறைச்சி சீனாவுக்கு ஏற்றுமதி செய்வதற்கான நிர்ணயிக்கப்பட்ட நடவடிக்கை முறைகளுக்கமைய மேற்கொள்வதற்கு இரு நாடுகளும் உரிய நடவடிக்கை முறைகள் தொடர்பாக பரிசோதித்தல், தொற்றுக் காப்பு மற்றும் சுகாதாரத் தேவைகள் உள்ளடக்கிய தயாரிக்கப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த ஒப்பந்தத்தில் சீனா சுங்கக் கட்டுப்பாட்டு நிறுவனம் மற்றும் அமைச்சுக்கிடையில் கையொப்பமிடுவதற்கு விவசாயம், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**15. இலங்கைக்கான அவசர மனிதாபிமான உதவி வழங்கல் தொடர்பான கருத்திட்டத்துக்கு (அரிசி, மீன்பிடி வலைகள் மற்றும் பொருத்து வீடுகள்) உள்ளிட்ட இலங்கை மற்றும் சீனாவுக்கும் இடையில் ஒப்படைக்கும் சான்றில் கையொப்பமிடல்**

இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிறியளவிலான மீனவர்களுக்கு 35.7 மில்லியன் யுவான்கள் செலவில் சீன மக்கள் குடியரசு கீழ்க்காணும் அவசர உதவிகளை வழங்கியுள்ளது :

சிறியளவிலான மற்றும் குறைந்த வருமானங் கொண்ட மீனவர்களுக்கான 75,000 மீன்பிடி வலைகள்

சிறியளவிலான மற்றும் குறைந்த வருமானங் கொண்ட மீனவர்களுக்கான 500 பொருத்து வீடுகள்

சிறியளவிலான மற்றும் குறைந்த வருமானங் கொண்ட மீனவர்களுக்கான 1,630 தொன் அரிசி

இவ்வனைத்துப் பொருட்களும் கடற்றொழில், நீரியல் மற்றும் சமுத்திர வளங்கள் அமைச்சால் 2024ஆம் ஆண்டில் பொறுப்பேற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன், அரிசி மற்றும் மீன்பிடி வலைகள் தற்போது தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த அவசர மனிதாபிமான உதவி வழங்கல் சான்றில் சீன மக்கள் குடியரசு மற்றும் இலங்கை அரசுக்கிடையில் கையொப்பமிடுவதற்காக கடற்றொழில், நீரியல் மற்றும் சமுத்திர வளங்கள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**16. சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு மற்றும் சீன மக்கள் குடியரசு நிறுவனத்துக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்/ஒத்துழைப்பு உடன்படிக்கைகளில் கையொப்பமிடல்**

இரு நாடுகளுக்கிடையில் காணப்படுகின்ற ஒத்துழைப்புகளைப் பலப்படுத்தும் நோக்கில் சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு மற்றும் சீனா மக்கள் குடியரசின் கீழ்க்காணும் நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்காக சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது (i) சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு மற்றும் சீன மக்கள் குடியரசின் தேசிய வானொலி மற்றும் தொலைக்காட்சி நிறுவனத்துக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்

(ii) வரையறுக்கப்பட்ட ஐக்கிய பத்திரிகைக் கம்பனி மற்றும் சீனாவின் சிங்குவா பத்திரிகை முகவர் நிறுவனத்துக்கும் (Xinhua News Agency ) இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்

(iii) அரசாங்க தகவல் திணைக்களம் மற்றும் சீனாவின் சிங்குவா பத்திரிகை முகவர் நிறுவனத்துக்கும் ( (Xinhua News Agency) இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்

(iv) இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் மற்றும் சீன ஊடகக் குழுமம் (China Media Group) இற்கிடையிலான ஒப்பந்தம்

(v) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் சீனா ஊடகக் குழுமம் (China Media Group) இற்கிடையிலான ஒப்பந்தம்

**17. பாடசாலை மாணவர்களுக்கு காகிதாதிகள் வழங்குகின்ற வேலைத்திட்டத்தின் கீழ் ஆறுதல் (அஸ்வெசும) நலன்புரி நன்மைகள் கிடைக்காத ஏனைய தகைமையுடைய குடும்பங்களிலுள்ள மாணவர்களுக்கு கொடுப்பனவு வழங்கல்**

அஸ்வெசும நலன்புரி நன்மைகளைப் பெறுகின்ற குடும்பங்களிலுள்ள மாணவர்களுக்கு காகிதாதிகளை வாங்குவதற்காக 6,000 ரூபா கொடுப்பனவு தற்போது அக்குடும்பங்களின் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அஸ்வெசும நலன்புரி நன்மைகளைப் பெற்றுக்கொள்ளாத குடும்பங்களில் பெற்றோர்களை இழந்த மாணவர்கள், தாய் அல்லது தந்தை இயலாமைக் குட்பட்டுள்ள குடும்பங்களிலுள்ள மாணவர்கள், சிறுவர் இல்லங்களிலுள்ள அனைத்துப் பாடசாலை மாணவர்களுக்கும் விசேட காரணங்களால் ஆதரவற்ற நிலைமைக்குள்ளாகியுள்ள மாணவர்களுக்கு குறித்த கொடுப்பனவை வழங்குவதற்கான பொறுப்பு கல்வி, உயர்க்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குறித்த குடும்பங்களிலுள்ள மாணவர்களைத் தெரிவு செய்வதற்கு இற்றைப் படுத்தப்பட்ட தரவுத்தொகுதியொன்று இன்மையால் மற்றும் உத்தேசிக்கப்பட்டுள்ள காகிதாதிகள் 2025 புதிய பாடசாலை தவணை ஆரம்பிக்கும்போது வழங்க வேண்டிய தேவைப்பாட்டைக் கருத்தில் கொண்டு, நாடளாவிய ரீதியிலுள்ள 10,096 பாடசாலைகளில் மொத்தமாக 300 மாணவர்களை விடவும் குறைந்த மாணவர்கள் கல்வி பயில்கின்ற 6,576 பாடசாலைகளிலுள்ள அஸ்வெசும நலன்புரி நன்மைகளைப் பெற்றுக்கொள்ளாத குடும்பங்களிலுள்ள அனைத்து மாணவர்களுக்கும் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களிலிருந்து பாடசாலைக்குச் செல்கின்ற அனைத்து மாணவர்களுக்கும் மற்றும் பிரிவெனாக்களில் கல்வி பயில்கின்ற பௌத்த துறவற மாணவர்கள் மற்றும் ஏனைய மாணவர்களுக்கும் 6,000 ரூபா வீதம் காகிதாதிகள் கொடுப்பனவை வழங்குவதற்கும் குறித்த கொடுப்பனவை வவுச்சர் ஒன்றின் மூலம் வழங்குவதற்கும் கல்வி, உயர்க்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# விளையாட்டுத் துளிகள்




★ 34 வயதான இந்திய கிரிக்கெட் வீரரான ரிஷி தவான் அனைத்து வகை கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். இந்திய அணியில் 2016ஆம் ஆண்டு அறிமுகமான அவர் இதுவரை 04 சர்வதேச போட்டிகளில் (03 ஒருநாள் மற்றும் 01 ரி20 போட்டி) விளையாடியுள்ளார். இருப்பினும் அந்த வாய்ப்பில் சிறப்பாக செயற்படாததால் அணியிலிருந்து நீக்கப்பட்ட அவர், அதன்பின் இந்திய அணியில் விளையாடவில்லை. உள்ளூர் மற்றும் ஐ.பி.எல். தொடரில் மட்டுமே விளையாடி வந்தார்.

★ பி.சி.சி.ஐ இன் இடைக்கால செயலாளராக அண்மையில் தேவஜித் சகியா நியமிக்கப்பட்டார். அதேபோல் பொருளாளராக இருந்த ஆஷிஷ் ஷெலார் மகாராஷ்டிரா மாநில அமைச்சரானார். இந்த பதவிகளில் தேவஜித் சைகியா செயலாளர் பதவிக்கும் பிரப்தேஜ் பாட்டியா பொருளாளர் பதவிக்கும் விண்ணப்பித்திருந்தனர். மற்ற யாரும் விண்ணப்பிக்கவில்லை. இதனால் இருவரும் குறித்த பதவிகளை ஏற்க வாய்ப்புள்ளது.

## ஒன்பது வருடங்களின் பின் நியூஸிலாந்து மண்ணில்
# ஒருநாள் போட்டியை வெல்லுமா இலங்கை?

### நியூஸிலாந்துடனான 2ஆவது ஒருநாள் ஆட்டம் இன்று

(அகீல் சிஹாப்)

சுற்றுலா இலங்கை அணிக்கும் நியூஸிலாந்து அணிக்கும் இடையிலான 03 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடரின் இரண்டாவது போட்டி இன்று ஹமில்டனில் நடைபெறுகிறது.

இலங்கை கிரிக்கெட் அணியானது வெள்ளைபந்து கிரிக்கெட் தொடரில் (ஒருநாள் மற்றும் ரி20) விளையாடுவதற்காக நியூஸிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இதில் முதல் தொடரான ரி20 தொடரினை நியூஸிலாந்து அணி 2-1 என்ற அடிப்படையில் கைப்பற்றிய நிலையில் அடுத்து 03 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் கடந்த ஞாயிற்றுக்கிழமை வெலிங்டனில் ஆரம்பமாகியது.

முதல் போட்டியில் நியூஸிலாந்து அணி 09 விக்கெட்டுகளினால் அபார வெற்றியீட்டி தொடரில் 1-0 என முன்னிலை வகிக்கிறது.

இந்நிலையில், இரண்டாவது போட்டி இன்று ஹமில்டனில் நடைபெறுகிறது. பகலிரவு போட்டியாக நடைபெறும் இந்த ஆட்டம் இலங்கை நேரப்படி காலை 6.30 மணிக்கு




ஆரம்பமாக திட்டமிடப்பட்டிருந்தது.

இலங்கை அணி, நியூஸிலாந்து மண்ணில் இறுதியாக கடந்த 2015 டிசம்பரில் ஒருநாள் போட்டியொன்றில் வெற்றியீட்டியதன் பின்னர் 09 வருடங்களாக அந்த மண்ணில் ஒருநாள் போட்டியொன்றில் கூட வெற்றியீட்டவில்லை. மேலும் 2000ஆம் ஆண்டு இலங்கை அணி நியூஸிலாந்து மண்ணில் ஒருநாள் தொடரை வென்றதன் பின் தற்போது 24 வருடங்களாக அந்த மண்ணில் ஒருநாள் தொடரையும் வெல்லவில்லை.

எனவே இலங்கை அணி இந்த இரு சாதனைகளையும் பதிவு செய்யுமா என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம்.



# அமெரிக்காவின் உயரிய விருதை வென்ற முதல் உதைபந்து வீரராக மெஸ்ஸி சாதனை



அமெரிக்க நாட்டின் உயரிய விருதான பிரசிடென்ஷியல் மெடல் ஆஃப் ஃப்ரீடம் விருதை நட்சத்திர உதைபந்தாட்ட வீரர் மெஸ்ஸி வென்றதன் மூலம் இந்த விருதை பெற்ற முதல் உதைபந்து வீரர் என்ற சாதனையையும் அவர் படைத்துள்ளார்.

கடந்த 1963 முதல் இந்த விருது வழங்கப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் வழங்கப்படும் இந்த விருது அமெரிக்காவின் வளர்ச்சி, பாதுகாப்பு, சமூக பங்களிப்பு மற்றும் உலக அமைதி அல்லது தனிநபர்களின் சமூக செயற்பாடு போன்றவற்றில் ஈடுபட்டு வருபவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு 19 பேருக்கு இந்த விருது அறிவிக்கப்பட்டது. ஹிலாரி கிளிண்டன், டென்சல் வொஷிங்டன் ஆகியோருடன் மெஸ்ஸிக்கும் இந்த விருது வழங்குவதாக வெள்ளை மாளிகை அறிவித்தது. அண்மையில் இந்த விருதினை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வழங்கினார். இருப்பினும் இதில் மெஸ்ஸி பங்கேற்கவில்லை. ஏற்கெனவே ஒப்புக்கொண்ட சில நிகழ்வுகள் காரணமாக இதில் பங்கேற்க முடியவில்லை என மெஸ்ஸி தரப்பில் விளக்கம் தரப்பட்டுள்ளது.

வெள்ளை மாளிகையை தொடர்பு கொண்ட மெஸ்ஸி, இந்த விருதை பெறுவதை கௌரவமாக கருதுவதாகவும் இந்த அங்கீகாரத்தை பெற்றது தனது பாக்கியம் என்றும் கூறினார். இருப்பினும் ஏற்கெனவே ஒப்புக்கொண்ட சில பணிகள் காரணமாக தன்னால் இதில் பங்கேற்க முடியாமல் போயுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். வரும் நாட்களில் வாய்ப்பு கிடைக்கும் என அவர் நம்புவதாகவும் தெரிவித்துள்ளார்.

# கிண்ணத்தை வழங்க கவாஸ்கர் அழைக்கப்படாதது குறித்து ஆஸி. கிரிக்கெட் சபை விளக்கம்



அவுஸ்திரேலியாவில் நிறைவுக்குவந்த பார்டர் - கவாஸ்கர் கிண்ணத் தொடரின் இறுதி பரிசளிப்பு நிகழ்வின்போது கிண்ணத்தை வழங்க சுனில் கவாஸ்கர் அழைக்கப்படாதது குறித்து கிரிக்கெட் அவுஸ்திரேலியா விளக்கம் அளித்துள்ளது.

05 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 3-1 என்ற கணக்கில் வென்ற அவுஸ்திரேலிய அணி 10 ஆண்டுகளுக்குப் பிறகு பார்டர் - கவாஸ்கர் கிண்ணத்தை வென்றது மாத்திரமல்லாது, டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப்போட்டிக்கும் தகுதிபெற்றது.

இந்த விவகாரம் தொடர்பில் சுனில் கவாஸ்கர் கூறியதாவது, வெற்றியாளருக்கு கிண்ணத்தை வழங்குமிடத்தில் இருப்பதை கண்டிப்பாக விரும்பியிருப்பேன். எல்லா விடயங்களையும் கடந்து, இது பார்டர் - கவாஸ்கர் டெஸ்ட் தொடர். இந்தியா, அவுஸ்திரேலிய அணிகள் விளையாடுகின்றன. நான் மைதானத்தில்தான் இருந்தேன். அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றதால், நான் கிண்ணத்தை வழங்க விரும்பமாட்டேன் என்றெல்லாம் கிடையாது. அவர்கள் நன்றாக விளையாடியதால், வெற்றி பெற்றார்கள். இந்தியராக இருப்பதால், ஆலன் பார்டருடன் இணைந்து கிண்ணத்தை வழங்கியிருந்தால் மகிழ்ச்சியடைந்திருப்பேன் என்றார்.

இந் நிலையில் கிரிக்கெட் அவுஸ்திரேலியாவின் ஊடக செய்தியாளர் தெரிவிக்கையில், ஆம் ஒப்புக்கொள்கிறோம். கிண்ணத்தை வழங்க இருவரும் இருந்திருந்தால் நன்றாக இருக்கும் எனக் கூறியதாக தகவல் வெளியாகியுள்ளது. ஆஸி. வென்றால் ஆலன் பார்டரும் இந்தியா வென்றால் கவாஸ்கரும் வழங்குவதாக ஏற்கனவே கிரிக்கெட் அவுஸ்திரேலியா முடிவெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# முதல் தடவையாக நடைபெறவுள்ள யூத் பிரசிடென்ட்ஸ் கிண்ணம் - 2025

இலங்கை உதைபந்து சம்மேளனத்தின் வழிகாட்டுதலுடன் மான்செஸ்டர் உதைபந்து அகடமியானது முதல் தடவையாக 'யூத் பிரசிடென்ட்ஸ் கிண்ணம் 2025' உதைபந்து தொடரினை ஒழுங்கு செய்திருக்கின்றது.

இந்த தொடரில் மொத்தமாக இலங்கையின் 08 பிரபல உதைபந்து அகடமிகளின் அணிகள் பங்கேற்கவிருக்கின்றன. எதிர்வரும் 13ஆம் திகதி தொடக்கம் பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி வரையில் போட்டிகள் நடைபெறவிருப்பதோடு, கொழும்பு குதிரைப்பந்தயத்திடல் மைதானம் மற்றும் பெத்தேகன உதைபந்து தொகுதி என்பவற்றில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

தொடரில் மான்செஸ்டர் எஸ்.ஏ. கொழும்பு உதைபந்து கழகம், சோன்டர்ஸ், ஜாவா லேன், பார்சிலோனா மற்றும் கொழும்பு யூத் ஆகிய முன்னணி அணிகள் பங்கெடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது.



# டெஸ்ட் தொடரை வென்று முதல் ஆசிய அணியாக சாதனை படைத்த ஆப்கானிஸ்தான்




ஸிம்பாப்வே அணியுடனான இரு போட்டிகள் டெஸ்ட் தொடரை 1-0 என கைப்பற்றிய ஆப்கானிஸ்தான் அணி ஆசிய கண்டத்துக்கு வெளியே விளையாடிய முதல் டெஸ்ட் தொடரிலேயே வெற்றி கண்ட முதல் ஆசிய அணி என்ற வரலாற்று சாதனையை படைத்தது.

ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணி, ஸிம்பாப்வேவுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 03 போட்டிகள் கொண்ட ரி20, 03 போட்டிகள் கொண்ட ஒருநாள் மற்றும் 02 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. முதல் இரு தொடர்களையும் ஆப்கானிஸ் தான் அணி கைப்பற்றிய நிலையில், டெஸ்ட் தொடரின் முதல் போட்டி சமநிலையடைந்தது. இந்நிலையில் 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் புலவாயோவில் கடந்த 2ஆம் திகதி ஆரம்பமானது. இதில் முதல் இன்னிங்ஸில் ஆப்கானிஸ்தான் 157 ரன்னும் ஸிம்பாப்வே 243 ரன்னும் எடுத்தன. 86 ரன் பின்தங்கிய நிலையில் 2ஆவது இன்னிங்ஸை ஆடிய ஆப்கானிஸ்தான் 363 ரன்களில் ஆட்டமிழந்தது. இதன்மூலம் ஸிம்பாப்வே அணிக்கு 278 ரன்களை வெற்றி இலக்காக நிர்ணயித்தது.

இலக்கை நோக்கி களமிறங்கிய ஸிம்பாப்வே அணி, ரஷித் கானின் சுழற்பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் 205 ரன்களில் சுருண்டு போக ஆப்கானிஸ்தான் 72 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்தப் போட்டியில் மாத்திரம் 11 விக்கெட்டுகளை வீழ்த்திய ரஷித் கான் ஆட்டநாயகனாகவும் தொடரில் 392 ஓட்டங்களை குவித்த ரஹ்மத் ஷா தொடர் நாயகனாகவும் தெரிவானார்.

ஆப்கானிஸ்தான் அணி டெஸ்ட் வரலாற்றில் ஒட்டுமொத்தத்தில் 11ஆவது டெஸ்டில் 4ஆவது வெற்றியை பதிவு செய்தது. இதில் ஆசிய கண்டத்துக்கு வெளியே ஆப்கானிஸ்தான் விளையாடிய முதல் டெஸ்ட் தொடர் இதுவாகும். இதன் மூலம் ஆசிய கண்டத்துக்கு வெளியே விளையாடிய முதல் டெஸ்ட் தொடரிலேயே வெற்றி கண்ட முதல் ஆசிய அணி என்ற வரலாற்று சாதனையை ஆப்கானிஸ்தான் படைத்தது.

# பாகிஸ்தானுடனான டெஸ்ட் தொடரை முழுமையாக கைப்பற்றிய தென்னாபிரிக்கா



பாகிஸ்தான் அணியுடனான இரு போட்டிகள் கொண்ட ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் டெஸ்ட் தொடரை தென்னாபிரிக்க அணி 2-0 என்ற அடிப்படையில் கைப்பற்றியது.

முதல் டெஸ்டில் ஏற்கனவே தென்னாபிரிக்கா வெற்றி பெற்ற நிலையில் 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் கேப்டவுனில் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா முதல் இன்னிங்ஸில் 615 ரன்கள் குவித்தது. அதிகபட்சமாக ரையான் ரிக்கெல்டன் இரட்டை சதம் கடந்த 259 ரன்களை குவித்தார்.

இதனையடுத்து, முதல் இன்னிங்ஸை ஆடிய பாகிஸ்தான் 194 ரன்களில் சுருண்டு பலோ ஒன் முறையில் மீண்டும் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி 478 ரன்கள் குவித்தது. அதிகபட்சமாக ஷான் மசூத் 145 ரன்கள் அடித்தார். 58 ரன்கள் என்ற எளிய இலக்கை நோக்கி களமிறங்கிய தென்னாபிரிக்கா 7.1 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 10 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. ரையான் ரிக்கெல்டன் ஆட்ட நாயகனாகவும் மார்கோ ஜான்சன் தொடர் நாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

# பாடசாலை பதில் அதிபர்களுக்கும் பிரதமருக்குமிடையில் சந்திப்பு



இக்பால் அலி

பாடசாலைகளில் கடமைப் பொறுப்பிலிருக்கும் பதில் அதிபர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் பிரதமர் ஹரிணி அமரசூரிய கல்வியமைச்சில் அவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போது தம் பிரச்சினை குறித்த அறிக்கையை அகில இலங்கை பதில் அதிபர்கள் சங்கத் தலைவர் எல். லட்சுமணன் தலைமையிலான குழுவினர் கையளித்தனர்.

பதில் அதிபர்கள் சங்கத் தலைவர் எல். லட்சுமணன் ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும்போது தெரிவித்ததாவது,

''இலங்கையின் கல்வி வளர்ச்சியில் 'பதில் அதிபர்கள்' என்ற பதவிநிலை மிகுந்த பங்களிப்பை வழங்கி வந்துள்ளது. பதில் அதிபர்கள் என்ற பதவிநிலையிலிருந்து தரம் பெற்றவர்களே அதிபர்களாகவும் கல்வி நிர்வாக சேவையிலும் உயர் பதவிகளை வகித்து வந்துள்ளார்கள். இவ்வாறு பதில் அதிபர்களாக மூன்று வருடங்கள் கடமையாற்றியவர்கள் 2012ஆம் ஆண்டு வரையில் அதிபர் சேவைத் தரத்துக்கு உள்வாங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அதன் தொடர்ச்சி நிலையில் 2012ஆம் ஆண்டு விசேட தரத்தில் அதிபர்களாக இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார்கள்.

2021ஆம் ஆண்டு அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய கடமையிலிருந்த பதில் அதிபர்களை அதிபர் தரத்துக்கு உள்வாங்கும் நோக்கில் விண்ணப்பம் கோரப்பட்டது. பின்னர் அவ்விண்ணப்பம் தொடர்பில் எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

2017ஆம் ஆண்டு அதிபர் போட்டிப் பரீட்சையினூடாக அதிபர்கள் நியமனம் பெற்றார்கள். அதைத் தொடர்ந்து அப் பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்கு கீழ் புள்ளிகளைப் பெற்றவர்கள் தங்களையும் அதிபர் சேவைத் தரத்துக்கு உள்வாங்கப்படல் வேண்டுமென உயர் நீதிமன்றில் 2018ஆம் ஆண்டு வழக்கு தாக்கல் செய்தார்கள்.

இந்நிலையில், பாடசாலைகளை நிர்வகித்துவந்த பதில் அதிபர்களின் நியாயம் வேண்டி பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் எதுவித சாதகமான நடவடிக்கைகளும் இடம்பெறவில்லை. இதன் காரணமாக மனதளவில் மிகுந்த பாதிப்பை எதிர்நோக்கினோம்.

எமது நியாயம் வேண்டி 2023ஆம் ஆண்டு உயர் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், உதவி அதிபர்களாக நியமிக்கப்பட்டவர்களைக் கொண்டு பாடசாலைகளுக்கு அதிபர்களை நியமிக்கும் பிரயத்தனம் இடம்பெற்றமை கவலைக்குரிய விடயமாகும்.

நாடு முழுவதும் மூன்று வருடங்களுக்கு குறைந்த சேவையை வழங்கிய பதில் அதிபர்களிடமிருந்து பாடசாலை நிர்வாகம் மீளவும் பெறப்பட்டது. ஊவா மாகாணத்தில் ஐந்து வருடங்களுக்கு குறைந்த பதில் கடமை புரிந்த அதிபர்களும் பாதிக்கப்பட்டார்கள்.

வடமாகாணத்தில் மூன்று வருடங்களுக்கு மேலாகவும் கடமையாற்றிய சகல பதில் அதிபர்களிடமிருந்தும் பலவந்தமாக பாடசாலைகள் பொறுப்பிலிருந்து அகற்றப்பட்டு புதிய அதிபர்கள் நியமிக்கப்பட்டமை கவலைக்குரிய விடயமாகும்.

ஊவா மாகாணத்தில் பதில் அதிபர்களை அகற்றும் நடவடிக்கை மாகாணக் கல்விப் பணிப்பாளரின் அறிவுறுத்தலுக்கமைவாக வலயக் கல்விப்பணிப்பாளர்களினால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கல்வியமைச்சின் 16/2017 சுற்று நிருபத்துக்கமைய 2017ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் பாடசாலை வகைகளுக்கேற்ப மேலதிக கொடுப்பனவு வழங்கப்படுகிறது. மத்திய மாகாணத்தைத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் கடமையாற்றும் பதில் அதிபர்களுக்கும் இக் கொடுப்பனவு வழங்கப்படுகிறது. மத்திய மாகாணப் பாடசாலைகளில் கடமையாற்றும் பதில் அதிபர்களுக்கும் நிலுவையோடு இக் கொடுப்பனவைப் பெற்றுத்தரவேண்டிய அவசியமும் நிலவுகிறது''- என்றார்.

## கடமைகளை பொறுப்பேற்றார் பிரதி அதிபர் பழனியாண்டி இளங்கோ

தலவாக்கலை நிருபர்



நுவரெலியா கல்வி வலயத்துக்குட்பட்ட கிறேட்வெஸ்டன் பாடசாலைக்கு பிரதி அதிபராக நியமிக்கப்பட்ட பழனியாண்டி இளங்கோ தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். தலவாக்கலை தெவிசிரிபுற பகுதியை வசிப்பிடமாகக் கொண்டவரும் சமாதான நீதவானுமாகிய இவர் இறுதியாக தலவாக்கலை பாரதி மகா வித்தியாலயத்தில் உதவி அதிபராகக் கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## உடைந்து விழும் நிலையிலுள்ள உடிஸ்பத்துவ, உடவெல பாலம்

மக்கள் விசனம்



ஜே.எம்.ஹாபீஸ்

தெல்தெனிய- ரங்கல பிரதான வீதியில் அமைந்துள்ள உடிஸ்பத்துவ, உடவெல பாலம் உடைந்து விழும் நிலையில் இருப்பதாகப் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கண்டி மாவட்டத்தில் தெல்தெனிய பிரதேசத்தில் அமைந்துள்ள பெருந்தோட்டப் பகுதிக்கான பிரதான பாதையொன்றில் அமைந்துள்ள உடிஸ்பத்துவ பாலம் நீண்டகாலமாகப் சேதமடைந்து இரும்புக் கம்பிகள் உக்கிப்போய் காணப்படுகிறது. இது திருத்தப்படாவிட்டால் ஆபத்துகள் ஏற்படுவது மட்டுமல்லாது, இப்பாலத்தினூடான போக்குவரத்தும் பாதிப்படையும் நிலை ஏற்படும்.

150 வருடங்கள் பழைமையான இப்பாலம் பிரித்தானியர் காலத்தில் பெருந்தோட்டத்துறைப் போக்குவரத்துக்காக அமைக்கப்பட்டது. குறித்த பாலம் இதுவரை திருத்தம் செய்யப்படவில்லை. ரங்கல பிரதேசத்திலுள்ள சுமார் 15 கிராமங்களுக்கும் சுற்றுலா விடுதிகள் பலவற்றுக்குமான போக்குவரத்துகளை இப்பாதையூடாகவே மேற்கொள்ள வேண்டியுள்ளதாகப் பொதுமக்கள் கூறுகின்றனர்.பெருந்தோட்டப்பகுதிகளான ரங்கல, தங்கப்புவ, கலபொடவத்த, டக்வாரி போன்ற பெருந்தோட்டங்கள், நக்கிள் மலைச்சாரல் பாதுகாப்பு வனம், மீமுரே பாதுகாப்பு வனம், இயற்கைச் சுற்றாடல் மையம், பன்வில சுற்றுலா விடுதிகள் மற்றும் ஆடைத் தொழிற்சாலைகள் என்பவற்றுக்கு இப்பாலத்தினூடாகவே பயணிக்கவேண்டி இருப்பதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். எனவே, இப்பாலத்தைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கும்படி பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# கருக்கலைப்பு மாத்திரையை விற்பனை செய்தவர் கைது!

மஸ்கெலியா நிருபர்

நுவரெலியா பிரதான நகரில் சட்டவிரோதமாக கருக்கலைப்பு மாத்திரைகளை விற்பனை செய்த ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நுவரெலியா மாவட்டப் பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான பொலிஸ் அதிகாரிகள் மற்றும் நுவரெலியா மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரப் பணிமனையின் ஔடதங்கள் அதிகாரசபையின் பரிசோதகர்கள் இணைந்து நேற்று முன்தினம்(06) திங்கட்கிழமை இந்தச் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

இதற்கமைய சட்டவிரோத கருக்கலைப்பு மாத்திரைகள் விநியோகம் தொடர்பில் மருந்தக விற்பனை நிலையமொன்றின் உரிமையாளரான (74 )வயதுடைய நபரொருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதேநேரம், மருந்தகத்தில் மறைத்து வைத்திருந்த நிலையில் சிறு தொகை சட்டவிரோத கருக்கலைப்பு மாத்திரைகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேக நபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ள பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயத்தில்

# அரச பாடசாலைக் கடமைகளை 2025 இல் ஆரம்பிக்கும் நிகழ்வு



கொட்டகலை நிருபர்

'கிளீன் ஸ்ரீ லங்கா' (Clean Sri Lanka) தேசிய நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்து 2025 ஆம் ஆண்டில் அரச கடமைகளை ஆரம்பித்தல், அரசாங்க சேவை சத்தியப்பிரமாணம் செய்யும் நிகழ்வு, ஆசிரியர் செயலாற்றுகை தரக் கணிப்பீட்டுப் படிவம் பெற்றுக்கொள்ளும் நிகழ்வு ஆகியன திங்கட்கிழமை (06) காலை 9 மணிக்கு கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயத்தின் அதிபர் திருமதி எஸ்.கமலதர்ஷினியின் தலைமையில் பாடசாலை வளாகத்தில் நடைபெற்றன.

'கிளீன் ஸ்ரீலங்கா' என்பது வளமான நாட்டையும் அழகான வாழ்க்கையையும் கட்டியெழுப்புவதற்கு அத்தியாவசியமான கூட்டு அர்ப்பணிப்புடன் செயலாற்றும் - பொறுப்புக்கூறும் தொழிற்பாடாகும். இன, மத அல்லது அரசியல் பேதமின்றி இத்தேசிய நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்து செயற்படுவதற்கு உறுதிமொழி அளிக்கின்றோமென்ற அடிப்படையிலும் பாடசாலையில் ஆசிரியர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகளைச் சிறப்புற நடைமுறைப்படுத்தல், மாணவர் களின் கடமைகள், பொறுப்புகளை நடைமுறைப் படுத்தல் தொடர்பாகவும் ஆசிரியர் சத்தியப்பிரமாணம், ஆசிரியர் செயலாற்றுகை தரக் கணிப்பீட்டுப் படிவம் பெற்றுக்கொள்ளும் நிகழ்வாகவும் இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து பாடசாலை அதிபர் திருமதி எஸ்.கமலதர்ஷினி புதுவருடம் தொடர்பாகச் சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் பாடசாலையின் உப அதிபர்கள், உதவி அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனைவரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சியில் எலிக்காய்ச்சலால் இருவர் உயிரிழப்பு!

பு.கஜிந்தன்



கிளிநொச்சியில் எலிக்காய்ச்சலெனச் சந்தேகிக்கப்படும் இருவர் உயிரிழந்துள்ளதாக கிளிநொச்சிப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.வினோதன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் (06) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே குறித்த விடயத்தைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

''கிளிநொச்சியின் முழங்காவில் மற்றும் கண்டாவளைப் பகுதிகளிலேயே குறித்த இருவரும் உயிரிழந்துள்ளனர். எலிக்காய்ச்சல் நோய்க்காரணி லெப்டொஸ் பிரோஸிஸ் (Leptospirosis) பக்றீரியாவாக இருக்கலாமென சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

கால்நடைகளின் சிறுநீரானது நீருடன் கலந்திருக்கும்போது மனிதர்கள் அந்த நீரில் நடமாடும்போது தோலில் ஏற்பட்டுள்ள வெடிப்புகள் அல்லது காயங்களூடாகப் பரவுவதற்கு வாய்ப்புகள் காணப்படுகின்றன.

இந்தக் காய்ச்சலுக்கான அறிகுறிகளாக கடுமையான காய்ச்சல், தலைவலி, கண் சிவப்பாக இருத்தல், உடல் நோவு, தசை நோவு, வயிற்று நோவு, இருமல், மூச்சு எடுத்தலில் சிரமம் போன்ற அறிகுறிகள் காணப்படும். எனவே, காய்ச்சல் ஏற்பட்டாலும் இவ்வாறான அறிகுறிகள் காணப்பட்டாலும் உடனடியாக வைத்திய பரிசோதனை செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இதைவிட தற்போதைய பனியுடனான காலநிலையில் சளி அதிகரித்து நிமோனியா போன்ற காய்ச்சலும் ஏற்பட வாய்ப்புண்டு. அதனைவிட மழையுடனான காலநிலையைத் தொடர்ந்து டெங்கு நோயின் தாக்கமும் அதிகரித்துள்ளது. எனவே, மக்கள் அவதானமாக இருக்கவேண்டும்'' – என்றார்.

# வவுனியாவில் விவசாய நிலங்களில் கட்டிடங்கள்: நடவடிக்கை எடுக்காமல் அரச அதிகாரிகள் அசமந்தம்!

விவசாயிகள் சுட்டிக்காட்டு



சிவகுமார் திவியா

வவுனியாவில் ஏ9 வீதியை அண்டிய பல வயல் நிலங்களில் கட்டிடங்கள் அமைக்கப்பட்டு வருவதாகவும் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டிய அரச அதிகாரிகள் அசமந்தப் போக்கில் உள்ளதாகவும் விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வவுனியா, தாண்டிக்குளம், நொச்சிமோட்டை மற்றும் பேயாடி கூழாங்குளம் போன்ற பகுதிகளில் வயல் நிலங்களில் மண்ணிட்டு நிரப்பி மேட்டு நிலங்களாகக்காட்டி அதனுள் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக விவசாயம் செய்வதற்கான நிலங்கள் இல்லாமல் போகின்ற நிலைமை வவுனியா மாவட்டத்தில் உருவாகுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர். இது குறித்து சம்பந்தப்பட்ட விவசாயத் திணைக்கள அதிகாரிகளுக்கு தெரிவித்த போதிலும் அவர்களும் இந்த விடயங்களில் கண்டும் காணாமலிருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# வவுனியா புதிய சாளம்பைக்குளத்தில் கலைவிழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

சிவகுமார் திவியா

வவுனியா, புதிய சாளம்பைக்குளப் பகுதியில் கலை விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் நேற்று முன்தினம் (06) இடம்பெற்றன.

றவ்ழத்துல் ஜன்னா முன்பள்ளியில் அதன் முகாமைத்துவக் குழுவின் தலைவர் எச்.பஸ்ரின் தலைமையில் பாராளுமன்ற உறுப்பினரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சிப் பிரதித் தவிசாளருமான முத்து முஹமதுவின் பங்குபற்றலுடன் இடம்பெற்றது.

இதன்போது சிறுவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன், மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஹசன் றஹீம், சாளம்பைக்குளம் உலமா சபைத் தலைவர் என்.பி.ஜுனைட் மதனி, விவாகப் பதிவாளர் என்.பி.ஜவாஹிர், கிராம மக்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# மக்களின் மீது சுமத்தப்பட்டுள்ள மின் கட்டணத்தைக் குறைக்குக!

## மகளிர் செயற்பாட்டாளர் அனுசியா ஜெயகாந்த் வலியுறுத்து



பு.கஜிந்தன்

''அரச நிறுவனங்கள் மக்களுக்கானதாக இருக்கவேண்டுமே தவிர, மக்களின் சுமைகளாக இருக்கக் கூடாது. அதுபோலவே மின்சார சபையும் மக்களுக்கானதாக இருக்க வேண்டுமென்பது மக்களது எதிர்பார்ப்பாக உள்ளது'' - என WCAN (பெண்கள் வலையமைப்பு) வலையமைப்பின் தேசிய மட்ட தமிழ்ப் பிரிவின் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளரும் மகளிர் செயற்பாட்டாளருமான திருமதி அனுசியா ஜெயகாந்த் வலியுறுத்தியுள்ளார்.

மின்சாரக் கட்டணத் திருத்த முன்மொழிவு தொடர்பான வடக்கு மாகாணப் பொதுமக்களின் ஆலோசனையைக் கேட்டறியும் கூட்டம் நேற்று முன்தினம் (06) யாழ்ப்பாணம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

''மக்களின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை உறையுளுடன் மின்சாரமும் ஒன்றாக இணைந்துள்ளது. அதனடிப்படையில் யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தளவில் மின்சாரக் கட்டண அதிகரிப்பால் சாதாரண மக்கள் முதல் சிறு தொழில் முயற்சியாளர்கள், ஏன் பல நிறுவனங்கள் கூட அசௌகரியங்களுக்குள்ளாகியுள்ளன.

யாழ்ப்பாண மக்களில் அதிகமோனோர் வறுமை மட்டத்தில் குறிப்பாக, அரசின் சலுகைகளை நம்பியே இன்றும் வாழ்ந்து வருகின்றனர். வீடுகளைக் கட்டுவதற்குக் கூட அரசின் உதவித் திட்டங்களை நம்பியே இருக்கின்ற நிலையில் உள்ளனர். கொடுக்கப்பட்ட அந்த வீடுகள் கூட இன்னமும் முழுமை பெறாத நிலையில் கடனாளிகளாக இருக்கின்றனர். இந்நிலையில், எவ்வாறு அவர்கள் மின் இணைப்பைப் பெறுவது?

இதேநேரம், மின்சரக் கட்டணம் பல மடங்கு உயர்ந்துள்ளது. இதனிடையே அதிகரித்த மின் கட்டணத்தால் தொழிற்றுறைகள் குறைகின்றன அல்லது மூடப்படுகின்ற நிலையில் உள்ளன.

வாழ்வாதாரத்துக்கே அல்லற்படும் பல வறிய குடும்பங்கள் மின்சார இணைப்பை இழக்கும் நிலையும் ஏற்படுகின்றது. இவ்வாறான போக்கை வறிய மக்களால் ஜீரணிக்க முடியாதுள்ளது.

இதேவேளை, 2022க்கு முன்னர் ஓரளவு சாதகமான நிலையிலிருந்த மின் கட்டணம், நாட்டிலேற்பட்ட பொருளாதார நெருக்கடியின் பின்னர் தற்போது சடுதியாக மும்மடங்கு உயர்ந்துள்ளது. அதுமட்டுமல்லாது, மின்சார சபையின் அனைத்து இழப்புகளும் மக்களின் முதுகிலேயே சுமத்தப்பட்டுள்ளன.

இதனால் சிறு தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள மக்கள் குறிப்பாக, பெண்களைத் தலைமையாகக்கொண்ட குடும்பங்கள் முன்னெடுத்து வரும் தொழிற்றுறைகள் பாரிய பின்னடைவை அல்லது இழுத்து மூடும் நிலையை உருவாக்குகின்றன. இந்நிலையில், மக்களின் மீது சுமத்தப்பட்டுள்ள மின்சாரக் கட்டணங்கள் குறைக்கப்படுவது அவசியமாகும். இதேநேரம், மின்சார சபையும் ஓர் அரச நிறுவனம் தான். இந்த நிறுவனத்துக்கும் மக்கள் மீதும் மக்களின் நலன்களிலும் அக்கறை இருப்பது அவசியம்.

வருடாந்தம் அதிக வருமானத்தை ஈட்டும் நிறுவனமாகவும் ஊழியர்களின் நலன்களுக்காகவும் அல்லாது மக்களின் சுமையைக் குறைக்கவும் மின்சார சபை தன்னை மாற்றிக்கொள்ள முன்வரவேண்டும். இதற்கு இந்தப் பொதுப் பயன்பாடு ஆணைக்குழு நடவடிக்கை எடுக்க வேண்டும்'' - எனக் குறிப்பிட்டார்.

## மோட்டார் சைக்கிளில் கஞ்சா கடத்திய பெண் உட்பட இருவர் கைது!



சிவகுமார் திவியா

கிளிநொச்சியிலிருந்து வவுனியாவுக்கு மோட்டார் சைக்கிளில் கஞ்சா கடத்தியதாகப் பெண் உட்பட இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக ஓமந்தைப் பொலிஸார் நேற்று முன்தினம் தெரிவித்தனர்.

ஓமந்தைப் பொலிஸார் மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையின்போது கிளிநொச்சியிலிருந்து வவுனியாவுக்குச் சென்ற மோட்டார் சைக்கிளொன்றிலிருந்து 700 கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து அதில் பயணித்த 36 வயதுடைய பெண்ணொருவரும் அவரது சகோதரர் எனக் கூறப்படும் 30 வயதுடைய ஆணொருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து இரண்டு இலட்சத்து 72 ஆயிரம் ரூபா பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளின் பின் குறித்த இருவரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

# அரிசி தொடர்பில் வடமாகாணத்தில் 774 சுற்றிவளைப்புகள் முன்னெடுப்பு

## பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை

சிவகுமார் திவியா



அரிசி தொடர்பில் வடமாகாணத்தில் 774 விசேட சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகாரசபையின் வடமாகாண உதவிப் பணிப்பாளர் அப்துல் லத்தீவ் ஜக்வார் சாதிக் தெரிவித்தார்.

அரிசி விற்பனை தொடர்பில் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

''அரிசி விலை மற்றும் பதுக்கல் தொடர்பில் கவனஞ்செலுத்தி 2024ஆம் ஆண்டு அரிசி விற்பனை தொடர்பாக வடமாகாணத்தில் 774 விசேட சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன், வவுனியா மாவட்டத்தில் அரிசி தொடர்பில் 126 விசேட சுற்றிவளைப்புகளும் மேற்கொள்ளப்பட்டன.

எனினும், வடமாகாணத்தில் பெரியளவிலான பதுக்கல்கள் எதுவும் இடம்பெறவில்லை'' – என்றார்.



# நேபாளம் - திபெத் எல்லையை உலுக்கிய 7.1 ரிச்டர் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

## 100 பேர் உயிரிழப்பு; 130இற்கும் அதிகமானோர் படுகாயம்!









நேபாளம் - திபெத் எல்லைப் பகுதியில் நேற்று (07) காலை 7.1 ரிச்டர் அளவில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் 100பேர் உயிரிழந்துள்ளதுடன், 130இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளதாகவும் 1000இற்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. தொடர்ந்து அங்கு மீட்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், அங்கு உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடுமென அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

திபெத்தை உலுக்கிய 7.1 ரிச்டர் சக்திவாய்ந்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து நேபாள - திபெத் எல்லையில் மீண்டும் 4.5 ரிச்டர் அளவில் நில அதிர்வு உணரப்பட்டுள்ளது. இதனையடுத்து அங்கு 50இற்கும் மேற்பட்ட தொடர் நில அதிர்வுகள் உணரப்பட்டுள்ளதாக அந்நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேபாள நாட்டின் லெபுசே என்ற நகரிலிருந்து 93 கிலோமீற்றர் தொலைவில் நேற்று (07) காலை 6.35 மணியளவில் 7.1 ரிச்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இந்நிலநடுக்கத்தால் வீடுகள், கட்டடங்கள் குலுங்கியதால் பீதியடைந்த மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

**இந்தியாவில் உணரப்பட்ட நில அதிர்வு**

திபெத்தை உலுக்கிய 7.1 ஆக இந்த நிலநடுக்கம் வட இந்தியாவிலும் உணரப்பட்டுள்ளது. குறிப்பாக, பீகார், புதுடில்லி, மேற்கு வங்கம் ஆகிய மாநிலத்தின் சில பகுதிகளில் உணரப்பட்டது.

இந்நிலையில், நிலநடுக்கத்தால் நேபாளம் எல்லையில் திபெத்தில் 100 பேர் உயிரிழந்துள்ளதுடன், 130 இற்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர் என அந்நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. சக்திவாய்ந்த நிலநடுக்கம் என்பதால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடுமென அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

இது குறித்து சீன ஊடகங்கள் தரப்பில், திபெத்தின் டின்கிரி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் சக்திவாய்ந்த நில நடுக்கம் உணரப்பட்டது. நிலநடுக்கம் ஏற்பட்ட பகுதியைச் சுற்றியுள்ள பல கட்டடங்கள் இடிந்து விழுந்தன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் டில்லி - என்சிஆர் மற்றும் பீகார் தலைநகர் பாட்னா, மாநிலத்தின் வட பகுதிகள் உட்பட வட இந்தியாவின் பல்வேறு இடங்களிலும் நில அதிர்வு உணரப்பட்டுள்ளது. மேற்கு வங்கம் மற்றும் அசாம் உள்ளிட்ட வடகிழக்கு மாநிலங்களிலும் நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது.

இதுகுறித்து காத்மண்டுவில் வசிக்கும் மீரா அதிகாரி என்பவர் தெரிவிக்கையில், "நான் தூங்கிக்கொண்டிருந்தேன். என் படுக்கை அசைந்தது, நான் எனது குழந்தை விளையாடுகிறதென்று நினைத்தேன். அதை பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால், ஜன்னல்கள் ஆடியதும் அது நிலநடுக்கம் என்று புரிந்துபோயிற்று. உடனடியாக நான் குழந்தையை அழைத்துக்கொண்டு வீட்டிலிருந்து வெளியேறி திறந்தவெளியில் நின்றேன்" - என்றார்.

நிலநடுக்கத்துக்கான தேசிய மையத்தின் தகவலின்படி, முதலில் நேபாளம் - திபெத் எல்லைக்கு அருகிலுள்ள ஜிஜாங்-கில் செவ்வாய்க்கிழமை காலை 6.35 மணிக்கு 7.1 ரிச்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இது சக்தி வாய்ந்தது மற்றும் அதிக பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடியதெனக் கருதப்படுகிறது. அதேபோல் ஷிகாட்ஸ் நகரில் 6.8 ரிச்டர் அளவிலான நடுக்கம் பதிவானதாக சீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மேலும், ஜிஜாங் நகரத்தில், 4.7 மற்றும் 4.9 என இரண்டு ரிச்டர் அளவில் நில அதிர்வுகள் ஏற்பட்டுள்ளன.

இந்தியா மற்றும் யூரேசியா தட்டுகள் மோதிக்கொள்ளும் இடத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. சீனாவின் அரச தொலைக்காட்சியில் ஒளிபரப்பான காட்சிகளின்படி, கடந்த ஐந்து ஆண்டுகளில் ஷிகட்ஸ் நகரைச் சுற்றி 200 கி.மீ., பரப்பளவுக்குள் ரிச்டர் அளவில் 3 அல்லது அதற்கு அதிகமான 29 நிலநடுக்கங்கள் தாக்கியுள்ளன. ஆனாலும் அவை நேற்று ஏற்பட்ட நிலநடுக்கத்தை விட சிறியவை என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவில் எழுவருக்கு எச்எம்பிவி வைரஸ் தொற்று

சீனாவில் பரவத் தொடங்கியுள்ள எச்எம்பிவி வைரஸ் தொற்று இந்தியாவிலும் பரவத் தொடங்கியுள்ள நிலையில், இந்தியாவில் ஏழு பேருக்கு வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

தமிழகம், பெங்களூரு, நாக்பூரில் தலா இரண்டு குழந்தைகளுக்கும், குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் ஒருவருக்கும் எச்எம்பிவி பாதிப்பு உறுதிசெய்யப்பட்டுள்ளது.

சீனாவில் எச்எம்பிவி வைரஸ் தொற்றால் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர். இந்நிலையில், நமது அண்டை நாடான இந்தியாவிலும் எச்எம்பிவி வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

''எச்எம்பிவி தொற்று கொரோனா போன்றதொரு நிலையை ஏற்படுத்தாது, எனவே, மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை'' என இந்திய மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் ஜே.பி.நட்டா தெரிவித்துள்ளார்.

மேலும், ''எச்எம்பி தீநுண்மி என்பது புதிய வைரஸ் ஒன்றும் இல்லை. இது 2001ஆம் ஆண்டே கண்டறியப்பட்ட வைரஸ்தான் என்றும், பல ஆண்டுகாலமாக உலகம் முழுவதும் பலருக்கும் இது பாதித்து வந்துள்ளது'' என்றும் நட்டா தெரிவித்திருக்கிறார்.

# இந்தியாவின் முதல் 'ஜென் பீட்டா' குழந்தை



**2025 புத்தாண்டு நாளில் இந்தியாவின் முதல் 'ஜென் பீட்டா' குழந்தை பிறந்துள்ளது. ஜனவரி முதலாம் திகதி அதிகாலை 12.03 மணிக்கு பிறந்த பெண் குழந்தை இந்தியாவின் முதல் 'ஜென் பீட்டா' குழந்தை என்று அறியப்படுகிறது.**

**மிசோரம் மாநிலம் அய்ஸ்வாலில் பிறந்த அந்தப் பெண் குழந்தைக்கு 'ஃப்ராங்கி ரெமுராடிகா ஜடேங்' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. குழந்தை பிறக்கும்போது 3.12 கிலோ எடையுடன் ஆரோக்கியமாக இருந்ததாக மருத்துவமனை தெரிவித்துள்ளது.**

**'ஜென் பீட்டா' என்ற பதத்தை அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த எதிர்காலஞ்சார் ஆராய்ச்சியாளர் மார்க் மெக் கிரிண்டில் உருவாக்கியுள்ளார். 2025ஆம் ஆண்டு முதல் 2039 ஆம் ஆண்டு வரை பிறக்கும் குழந்தைகள் 'ஜென் பீட்டா' குழந்தைகள் என அழைக்கப்படுவார்களென்று அவர் கூறுகிறார். இவர்கள் மில்லனியல்ஸ் என்றழைக்கப்படும் ஜென் y அல்லது ஜென் z பெற்றோர்களுக்குப் பிறப்பவர்கள். 2035ஆம் ஆண்டளவில் உலகம் முழுவதுமுள்ள மக்கள் தொகையில் 16 சதவீதம் பேர் 'ஜென் பீட்டா' தலைமுறையினராக இருப்பார்கள். இவர்கள் பங்களிப்பு சர்வதேச சமூக, பொருளாதார சூழலில் முக்கியத்துவம் வகிக்கும் என்று மெக் கிரிண்டில் கணிக்கிறார்.**

# பதவி துறந்தார் ஜஸ்டின் ட்ரூடோ: கனடாவின் அடுத்த பிரதமர் யார்?

## அமெரிக்காவின் 51ஆவது மாநிலமாக இணையுமா கனடா?



கனடா பிரதமர் பதவியை ஜஸ்டின் ட்ரூடோ தமது பதவியை இராஜினாமா செய்துள்ள நிலையில், கனடாவின் அடுத்த பிரதமர் யார் என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்நிலையில், அப்பதவிக்கு அந்நாட்டு போக்குவரத்துத் துறை அமைச்சரும் இந்தியாவை பூர்வீகமாகக் கொண்டவருமான அனிதா ஆனந்த் உள்ளிட்டோரின் பெயர்கள் பரிசீலனையில் உள்ளன.

**அமெரிக்காவின் 51ஆவது மாநிலமா கனடா?**

''கனடா அமெரிக்காவின் 51ஆவது மாகாணமாக இணையலாம்'' என இரண்டாவது தடவையாகவும் அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

கனடா பிரதமர் ஜஸ்ட்டின் ட்ரூடோ இராஜினாமா செய்த நிலையில் ட்ரம்ப் இதனைத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து ட்ரம்ப் தமது சமூக வலைதளப்பக்கத்தில், "அமெரிக்காவின் 51ஆவது மாகாணமாக இணைவதில் கனடாவில் வசித்து வரும் பலரும் விரும்பு வார்கள். வர்த்தக ரீதியான அழுத்தங்களை அறிந்தே ட்ரூடோ இராஜினாமா செய்துள்ளார். கனடா அமெரிக்காவுடன் இணைந்தால் வரிகள் குறையும். மேலும், ரஷ்ய மற்றும் சீனக் கப்பல்களின் அச்சுறுத்தலிலிருந்து முற்றிலும் பாதுகாப்பாக இருக்கும். ஒன்றிணைவோம். அது பெரிய தேசமாக இருக்கும்" என ட்ரம்ப் தற்போது தெரிவித்துள்ளார். அவரது இந்தக் கருத்துக்கு எந்தவித ரியாக்ஷனும் கொடுக்காமல் உள்ளது கனடா தரப்பு.

அமெரிக்காவின் தெற்கு எல்லைப் பகுதியில் நிலவும் சட்டவிரோத போதைப்பொருள் புழக்கம் மற்றும் சட்டவிரோத குடியேற் றத்தை தடுக்காமல்போனால் கனடா பொருட்களுக்கு 25 சதவீதம் இறக்குமதி வரி விதிக்கப்படுமென ட்ரம்ப் ஏற்கனவே அச்சுறுத்தியுள்ளார்.

சர்வதேச அரங்கில் மட்டுமல்லாமல், உள்நாட்டிலும் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்த கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பதவி விலக வேண்டுமென அவர் சார்ந்த லிபரல் கட்சி எம்.பிக்கள் போர்க்கொடி உயர்த்தினர். இதனையடுத்து அவர் நேற்றுமுன்தினம் (06) கட்சித் தலைவர் பதவியிலிருந்தும், பிரதமர் பதவியிலிருந்தும் விலகுவதாக அறிவித்தார். புதிய தலைவர் தெரிவாகும் வரை பதவியில் நீடிப்பேன் எனத் தெரிவித்தார்.

இந்தாண்டு கனடாவில் தேர்தல் நடைபெற வுள்ள நிலையில், அடுத்து கனடாவின் புதிய பிரதமராக யார் பதவியேற்பார் என்ற கேள்வி எழுந்தது. இதில், அந்நாட்டு போக்குவரத்துத் துறை அமைச்சர் அனிதா ஆனந்த் உள்ளிட்டோரின் பெயர்கள் பரிசீலனையிலுள்ளன.



**இந்தோனேஷியாவில் பாடசாலை மாணவர்களுக்கு இலவச மதிய உணவு வழங்கும் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.**

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7